இதழ் 219

# மண்

ஜேர்மனி / 2023
வைகாசி - ஆனி / May - Jun



## வாழும் பொழுதுகளில் வாழ்த்தப்படும் பவளவிழா நாயகன் பேராசான் மு நித்தியானந்தன் - லண்டன்











யேர்மனியில் பிறந்தநாள் கொண்டாடிய மகாலிங்கம் - டொறின் தம்பதிகளின் செல்ல மகள் ஸ்ரெவ்வானியின் நிதிப்பங்களிப்பில் தாயகம் மாங்குளத்திலுள்ள ”நல்லாயன் ”சிறுவர் இல்லத்தில் வாழும் பிள்ளைகளுக்கு 3.4.2023 அன்று உணவு, சிற்றுண்டி வழங்கப்பட்டது. அனுசரணை மண் சஞ்சிகை














யேர்மனியில் வாழும் வைரமுத்து சிவராசா அவர்களின் தாயாரின் 25 வது ஆண்டு நினைவையொட்டி அவரின் நிதிப்பங்களிப்பில் துணுக்காய்யிலுள்ள ”ஒளிரும் இல்ல” முதியோர், மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு 4.4.2023 அன்று உணவு, சிற்றுண்டி வழங்கப்பட்டது. அனுசரணை மண் சஞ்சிகை.

# உள்ளே


- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர்போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவிநிதி



**முகவரி:** V. Sivarajah
Am Windhoevel 18a
47249 Duisburg
Germany

**தொலைபேசி:** 0203/8073898

015254799233

**மின்னஞ்சல்:** v.sivarajah@arcor.de


**வங்கிவிபரம்:** Mann (Erde) Verein e.V. Duisburg
Stadtsparkasse Duisburg
Kontonummer: 225 000 421
Bankleitzahl: 350 500 00
IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21
SWIFT-BIC: DUISDE33XXX

# ஆசிரியர் பக்கம்...

புதுவருடத்தை சிங்கள, தமிழ் மக்கள் வெகுசிறப்பாகக் கொண்டாடுவது வழமையாகும். இது ஒரு தேசியப் பண்டிகையாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. 2019 ஆம் ஆண்டின் பின்னர் இப்புத்தாண்டை சிறப்பாகவும் விமர்சையாகவும் கொண்டாடக்கூடிய வாய்ப்பு இந்நாட்டு மக்களுக்கு கிடைக்கப் பெறவில்லை. 2020 ஆம், 2021 ஆம் ஆண்டிகளில் நிலவிய கோவிட் 19 பெருந்தொற்று அச்சுறுத்தல், 2022 இல் நிலவிய தீவிர பொருளாதார நெருக்கடி என்பன அதற்கு பெரும் தடைகல்லாக அமைந்திருந்தன.

நாட்டினதும் உலகளாவிய நிலைவரங்களையும் கருத்தில் கொண்டு அமைதி காத்த இம்மக்களுக்கு இம்முறை இப்பண்டிகையைக் கொண்டாடுவதற்கான வாய்ப்பு கிடைக்கப் பெற்றது. மூன்று வருடங்களின் பின்னர் மக்களுக்கு இவ்வாய்ப்பு கிடைக்கப் பெற்றுள்ளது. அதேவேளை பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு மீட்சி வரும் நிலைமையில் மக்களுக்கு இந்தச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

இப்பண்டிகையை கொண்டாடுவதற்கான வாய்ப்பை நாட்டின் தற்போதைய சூழல் இந்நாட்டு பிரஜைகளுக்கு பெற்றுக் கொடுத்துள்ளது. அதற்கேற்ப தம் குடும்ப உறவினர்களுடனும் நண்பர்களுடனும் பிரதேச மக்களுடனும் தமிழ், சிங்கள மக்கள் இப்பண்டிகையைக் கொண்டாடினர். இவ்வாறு இப்பண்டிகை நிறைவுற்றதும் தம் பணிகளை இயல்பு வாழ்வை நோக்கி மீண்டும் திரும்பிக் கொண்டிருக்கின்றனர். இச்சூழலில் பொருளாதார ரீதியில் நாட்டை கட்டியெழுப்புவதற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டிய பொறுப்பு அனைத்து பிரஜைகள் முன்பாகவும் உள்ளது.

இப்புத்தாண்டில் நாட்டைக் கட்டியெழுப்புவதை இலக்காகக் கொண்டு பணியாற்றுவது அவசியம். அதற்காக ஆதரவும் ஒத்துழைப்பும் நல்க வேண்டும். பொருளாதார ரீதியில் வளமான தேசமாக நாட்டைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான வேலைத்திட்டங்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அந்த வேலைத்திட்டங்களின் பிரதிபலன்களை நாட்டு மக்கள் அனுபவிக்க ஆரம்பித்து விட்டனர். பொருளாதார நெருக்கடி நிலவிய காலப்பகுதியில் நாட்டில் நிலவிய நெருக்கடிகளும் அசௌகரியங்களும் நீங்கி இருப்பது இதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும்.

கடந்த வருடம் நாடு முகம்கொடுத்திருந்த தீவிர பொருளாதார நெருக்கடியின் பெரும்பாலான அசௌகரியங்கள் நீங்கி விட்டன. என்றாலும் அப்பொருளாதார நெருக்கடி தோற்றுவித்த தாக்கங்களும் அழுத்தங்களும் முற்றாக நீங்கியதாக இல்லை. இவ்வருடத்தை விடவும் எதிர்வரும் வருடத்தில் இப்பண்டிகையை மேலும் சிறப்பாகக் கொண்டாட வேண்டும். நாடும் மக்களும் வளம் பெற வேண்டும். அதற்காக நாட்டை கட்டியெழுப்ப உழைப்பது அவசியம். பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெற்றுவரும் தேசத்தை வளமான நாடாகக் கட்டியெழுப்புவதிலும் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் பொருளாதார ரீதியில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அந்நடவடிக்கைகளை வெற்றி பெறச் செய்ய வேண்டும். அதற்காக ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கப்பட வேண்டும். இதற்கான பொறுப்பு இந்நாட்டின் அனைத்துப் பிரஜைகளுக்கும் உள்ளது போல புலம்பெயர்வாழ் இலங்கையர்களும் தம்மாலான உதவிகளைச் செய்தல் வேண்டும்.

ஆகவே தமிழ் - சிங்களப் புத்தாண்டைத் தொடர்ந்து உருவாகியுள்ள சூழலில் கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் நாட்டை ஒன்றுபட்டு கட்டியெழுப்புவது இன்றியமையாததாகும். அதுவே வளமான தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு அடித்தளமாக அமையும்.

**- ஆசிரியர் -**

.............................................................................................

**தொடரும் கொரோனா தொற்று அவலம்.. முன்னணியிலுள்ள 10 நாடுகள்**

| | | | |
|---|---|---|---|
| 01- United States | 106,768,296 | 1,162,431 | North America |
| 02- India | 44,971,469 | 531,692 | Asia |
| 03- France | 40,021,190 | 166,811 | Europe |
| 04- Germany | 8,411,062 | 173,375 | Europe |
| 05- Brazil | 37,487,971 | 701,833 | South America |
| 06- Japan | 33,794,141 | 74,667 | Asia |
| 07- South Korea | 31,285,910 | 34,534 | Asia |
| 08- Italy | 25,809,208 | 189,904 | Europe |
| 09- United Kingdom | 24,569,895 | 223,396 | Europe |
| 10- Russia | 22,881,767 | 398,553 | Europe |

08.05.2023 வரை ... உலகில் தொற்று - 68.78.22.298 பேர் (68 கோடிபேர்)
உலகில் இறப்பு - 68.71.132 பேர் (68 லட்சம்பேர்)

## சிறுவர் வட்டம்...




## ஆத்திசூடி...

### மன்று பறித்து உண்ணேல்...

எளியவர்களுக்கு வலியவர் இன்னல் விளைவிப்பது அநாதி காலந்தொட்டு நடந்துவரும் செயல். ஆகவே ஏழை எளியவர்களுக்கு நியாயம் கிடைக்க நீதிமன்றத்தில் வழக்குகளை விசாரணை செய்து நீதி வழங்குவார்கள். இதில் சாட்சிகளையும் சம்பவங்களையும் சம்பந்தப்பட்டவர்களையும் தீர விசாரித்து நியாயம் வழங்கச் சிறிது காலதாமதமாகும். இந்த இடைக்காலத்தில் சில வஞ்சகர்கள் லஞ்சம் வாங்கிக்கொண்டு நேர்மையற்ற முறையில் நீதியை விலைபேசி வாழ்க்கை நடாத்துகிறார்கள். இச் செயல் இழிவானது. நீதி மன்றத்திலிருந்துகொண்டு நேர்மையாகச் செயற்படாமல் குடிமக்களின் செல்வத்தைக் கவர்ந்து வாழ்க்கை நடத்தாதே என்கிறார் ஔவைப்பாட்டி. மன்று என்றால் நீதி மன்றம். (பறித்து - அபகரித்து)

### இயல்பு அலாதன செய்யேல்...

உண்மை பேசவேண்டியது இயற்கை. பொய் சொல்வது செயற்கை. ஓர் அழகிய பேனாவை விளையாட்டு மைதானத்தில் கண்டு எடுக்கிறாய். அது உன் நண்பனுடையது என்று உனக்குத் தெரியும். அவன் அங்கு விளையாடும் பொழுது தவறி விழுந்திருக்கின்றது அது. நீ இப்போது என்ன செய்ய வேண்டும். நண்பனைத் தேடிப்போய், அவன் பொருளை அவனிடம் கொடுக்க வேண்டும் இதுதான் முறை. அதை நீயே வைத்துக் கொள்வது முறையல்ல. அது இயற்கைக்கு மாறான செயல். ஆகையால் நீ இயற்கைக்கு மாறான காரியங்களைச் செய்யக்கூடாது என்கிறார் ஔவைப்பாட்டி. ( இயல் அல்லாதன - இயற்கைக்கு மாறான செயல்கள் )

# நல்நெறிபற்றி........

(வி நந்தகுமார்)

## கல்வியே கண்

அறிவைப்பெற அதிகமான நேரத்தைப் பயன்படுத்திக் கொள். ஆழமான அறிவு அழகான வாழ்க்கையை அமைக்கிறது.இந்தப் பூமிப் பயணம் ஒருமுறை மட்டும் தான், இதற்குள் முடிந்தளவு நன்மை செய். ஈரமான நிலத்தில் செடி வளரும், இளகிய மனதில் இரக்கம் வளரும். உன்னிடம் உள்ள நல்ல ஒழுக்கம்தான், உண்மையான இறைவழிபாடு. ஊக்கமான உழைப்பு உன்னை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வரும்.

எத்தனை புத்தகம் என்பதல்ல, எப்படிப்பட்ட புத்தகம் படித்தோம் என்பது முக்கியம். ஏமாறுபவர்கள் இருந்தால் ஏமாற்றுபவர்கள் இருக்கத்தான் செய்வார்கள். ஐந்தில் ஆரம்பிக்கும் கல்வி காலம் முழுவதும் காப்பாற்றும் கலங்கரை விளக்கு. ஒரு நாட்டின் வளர்ச்சி அந்தநாட்டு மக்களின் நல்லொழுக்கத்தில் உள்ளது. ஓடி ஆடி வேலை செய்தால் ஒளிமயமான எதிர் காலம் ஒவ்வொருவருக்கும் உண்டு.

தூய வார்த்தைகளைக் கேளுங்கள் உங்கள் உள்ளம் தூய்மை பெறும். படிக்கும்போது பல கஷ்டங்கள், படித்து முடித்த பின்பு பல பட்டம் பதவிகள். கஷ்டப்பட்டுப் படிப்பது பள்ளிப்படிப்பு, நஷ்டப்பட்டுப் படிப்பது நாளாந்த அறிவு. படிப்பும்சரி, பாட்டும்சரி, பிரியம்தான் பெரும் பலனைக் கொடுக்கிறது. பணத்தால் புத்தகம் வாங்க முடியும் ஆனால், உங்களை படிக்க வைக்க முடியாது. புத்தகம் இல்லாத வீடு யன்னல் இல்லாத இருட்டறை போன்றது.

படிப்பில் பட்டம் பெற்றாலும், வாழ்க்கையில் விடுதலை காண வேண்டும். படித்த படிப்புகளும், பட்டங்களும், கோபத்தால் இழக்கப்படுகிறது. சினத்தை அடக்குவது நல்லது, அதைவிட சினம் வராமல் தடுப்பது மேலும் நல்லது. வழமாக வாழக் கற்றுக்கொள், வாழ்கிறவனுக்குத்தான் வாழ்க்கை சொந்தம். தெட்டத்தெளிவான தீர்மானங்கள தொல்லை தொந்தரவுகளை தவிர்த்துச் செல்லும். குறிபார்த்துச் சுடுவதுபோல், சரிபார்த்து பேசுவது விரிவான ஒரு முறை.

பேச்சில் தீய சொற்கள் நுழையுமானால், புயல்வீசிய நகரம் போலாகும். வஞ்சனையான வாய்ச்சொற்கள், வாழ்க்கையை வலுவிழக்கச் செய்கிறது. பணம் இழந்தால் பரவாயில்லை, ஆனால் பண்பு இழக்காமல் பார்த்துக்கொள். துன்பத்தை மறந்தாலும், அதுபுகட்டிய பாடத்தை மட்டும் மறக்காதே. சண்டையும் சமாதானமும், உன்வார்த்தைகள் மூலம் உருவாகின்றன. தகுந்த காலத்தில் தகுந்தவற்றைச் செய்தல் தலைமைக்குத் தகுதி . இறைபக்தியுடன் புத்தியைப் பெற்றுக் கொள்பவன் பலவகை பாக்கியமும் பெறுகிறான். மன்னித்து வாழ்ந்தால் மானிட சமுதாயம் மகிழ்வடையும்.



## முல்லா கதைகளில்...

முல்லா இசைக்கலையைக் கற்கவேண்டும் என்று விரும்பினார். ஊரிலே சிறந்த இசை மேதை ஒருவரிடம் சென்றார். ஐயா நான் இசைக் கலையைக் கற்க விரும்புகின்றேன் அதற்கு எவ்வளவு காசு? என்று கேட்டார். அதற்கு அந்த இசைமேதை முதல் மாதம் ஐம்பது காசுகள், இரண்டாம் மாதத்திலிருந்து ஒவ்வொரு மாதமும் இருபது காசுகள் என்றார். இதைக் கேட்டதும் முல்லா நல்லது, இதோ இருபது காசுகள் எனக்கு இரண்டாம் மாதப் பாடத்திலிருந்து கற்றுக் கொடுங்கள் என்று சொல்லிக்கொண்டு அவர் முன் இருந்துவிட்டார்.

அறிஞர் என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். அறிவு மிகுந்தவர்களை அறிஞர் என்று சொல்வார்கள்.அறிஞர்களிலும் அறிவு மிகுந்தவர்களைப் பேரறிஞர் என்று சொல்வார்கள். ஒரு சிலர் தம்மைத் தாமே அறிஞர் என்றும் சொல்லிக் கொள்வார்கள். இப்படியாகத் தமக்குத் தாமே பேரறிஞர் என்றும் பட்டம் சூட்டிக்கொண்டே மூன்று பேர் ஓர் ஊரில் இருந்தனர். அவர்கள் ஓர் ஊருக்கு வருகின்றார்கள் என்றால் அந்த ஊர் மக்கள் பயந்து நடுங்கினார்கள்.

காரணம் இவர்கள் கேட்கும் கேள்விகளுக்குச் சரியான பதில் சொல்லாதவர்கள் தோற்றவர்கள் ஆவார்கள். இப்படித் தோற்றவர்கள் தாங்கள் பெற்ற பட்டங்களை இவர்களிடம் கொடுத்துவிட வேண்டும். அது மட்டுமல்ல இனிமேல் அவர்கள் எந்த மேடைகளிலும் ஏற முடியாது. அந்த ஊர் மக்கள்பொருள் கொடுத்து இவர்களைச் சிறப்பிக்க வேண்டும். ஆலை இல்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை என்பது போல இவர்கள் இருந்தனர்.


இந்த மூன்று பேரறிஞர் என்று சொல்லப்பட்டவர்கள் ஒருமுறை முல்லாவின் ஊருக்கு வந்தனர். அந்த ஊர்த்தலைவரிடம் போய்த் தாங்கள் வந்திருக்கும் காரணத்தைச் சொன்னார்கள். ஊர்த்தலைவர் முல்லாவிடம் சென்று நீங்கள்தான் உண்மையான பேரறிஞர் நீங்கள்தான் எங்கள் ஊரின் பெருமையைக் காக்கவேண்டும் என்று வேண்டினார். முல்லாவும் இவர்களைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தார். தேடிப்போகாமலே இவர்கள் வலியவந்தது முல்லாவிற்கு மகிழ்ச்சியாக இருந்தது. எனவே போட்டிக்கு நாள் குறிக்கப்பட்டது. முல்லா ஒரு பக்கமும் பேரறிஞர் மூவரும் எதிர்பக்கமாகவும் அமர்ந்து கொண்டனர். போட்டியைக்காண மக்களும் பெருந்திரளாகக் கூடிநின்றனர்.

போட்டி ஆரம்பமாகியது. முதலாவது ஆள் முல்லாவைப் பார்த்து ”இந்த உலகின் நடுப்பகுதியாக எது உள்ளது”?.. என்று கேட்டார். முல்லா எந்தவித யோசனையும் இல்லாமல் ” வெளியே என் கழுதை நிற்கிறது. இது நிற்கிற இடம்தான் உலகின் நடுப்பகுதி” என்றார். ”இதை நீங்கள் நிரூபிக்க வேண்டும்” என்றார் இரண்டாவது ஆள். ”நான் சொன்னது தவறு என்று முதலில் நீங்கள் நிரூபித்துக் காட்டுங்கள்” உலகை அளந்துகொண்டு வாருங்கள். எனது கழுதை நிற்கின்ற இடம்தான் நடுப்பகுதி என்ற உண்மை தெரியும்” என்றார் முல்லா.

முதலாவது ஆள் அடங்கிப்போனார். இரண்டாவது ஆள் முல்லாவைப் பார்த்து ”வானத்தில் எத்தனை நட்சத்திரங்கள்”?..என்று கேட்டார். என் கழுதையின் உடம்பில் எத்தனை ரோமங்களோ (மயிர்) அத்தனை நட்சத்திரங்கள். வேண்டுமானால் நீங்களே எண்ணிப்பார்த்துக் கொள்ளலாம்!.. என்று முல்லா பதில் சொன்னார். இரண்டாவது ஆளும் அடங்கிப் போனார். மூன்றாவது ஆள் முல்லாவைப் பார்த்து ”இந்த உலகில் வாழும் சான்றோர்கள் நாட்டை ஆளும் அரசர்கள் கடைப்பிடிக்க வகுத்த நெறிகள் எத்தனை என்று கேட்டார். ”உங்கள் மூவரின் தாடிகளில் எத்தனை ரோமங்களோ அத்தனை நெறிகள் உள்ளன. வேண்டுமென்றால் அவற்றை இழுத்துப் பிடுங்கி எண்ணிச் சொல்கிறேன்” என்று முல்லா சொன்னார்.

வேண்டாம் ஐயா!...வேண்டாம்!.. என்று மூவரும் முல்லாவின் காலடியில் விழுந்தார்கள். அவர்களைப் பார்த்து முல்லா உங்களிடமுள்ள அறிவையும் அடுத்தவர் கால்களில் விழுந்து குறைத்துக் கொள்ளாதீர்கள்!.. ஆளில்லை என்று சொல்லி ஆர்பாட்டம் போடாதீர்கள்!.. கற்றது கையில் அடங்கக்கூடிய மண்ணளவு என்றால் கற்காதது உலகத்தின் அளவென்பதை உணர்ந்த கொள்ளுங்கள்!..ஒரு நாளும் போலி வேடம் போட்டுப் பேருக்கும் புகழுக்கும் பேயாய் அலையாதீர்கள் என்று சொல்லி அனுப்பி வைத்தார்...

# தோமஸ் அல்வா எடிசன்..



ஒருநாள் பள்ளியிலிருந்து வந்த தோமஸ் எடிசன் கையில் ஒரு கவரிலுள்ள கடிதத்தை தன் அம்மாவிடம் மட்டுமே கொடுக்க வேண்டும் எனத்தன் ஆசிரியர் கூறியதாகச் சொல்லிக் கொடுத்தான். அந்தக்கடிதத்தை அந்தத்தாய் கண்ணீரோடு சத்தமாகத் தன் மகன் கேட்கும்படி இப்படிப் படித்தாள். " உங்கள் மகனின் அறிவுத் திறமைக்கு முன் எங்கள் பள்ளி மிகவும் சிறியது. அவனுக்குக் கற்பிக்க திறமையான ஆசிரியர்கள் எங்களிடமில்லை அதனால் தயவு செய்து நீங்களே உங்கள் மகனுக்கு கற்பிப்பது நல்லது " என்று..

பல ஆண்டுகளுக்குப் பிறகு எடிசனின் தாயாரும் காலமாகிவிட்டார். எடிசனும் அந்த நூற்றாண்டின் சிறந்த ஆராய்ச்சியாளராகவும் ஆனார். எடிசன் ஒருநாள் தனது வீட்டின் பழைய பொருட்களை எடுத்து வைத்துக்கொண்டிருந்த போது அவர் தன் அம்மாவிடம் முன்பொருமுறை பள்ளியிலிருந்து கொண்டுவந்து கொடுத்த கடிதம் எதேச்சையாகக் கண்ணில்பட அதை எடுத்துப் படித்துப் பார்த்தார்.

அதில் இப்படி எழுதியிருந்தது. " மூளை வளர்ச்சி குன்றிய உங்கள் மகனை இனிமேல் எங்கள் பள்ளிக்கு அனுப்ப வேண்டாம் " என்று... இதைப் படித்த எடிசன் கதறி அழுதார். பின் அவரது டயரியில் கீழ்க்கண்டவாறு எழுதினார். " மூளை வளர்ச்சியற்ற தோமஸ் அல்வா எடிசன் தனது தாயாலேயே மாபெரும் கண்டுபிடிப்பாளனானான் " என்று..

ஆகவே நம் பிள்ளைகள் மீதான நேர்மறையான எண்ணங்கள் அவர்களை மிக உயரத்துக்குக் கொண்டு செல்லும் என்பதை ஒவ்வொரு பெற்றோரும் அறிந்திருக்க வேண்டும். நம்மாலும் பல எடிசன்களை உருவாக்க முடியும். குழந்தைகள் மனதில் தன்னம்பிக்கையை ஊட்டி வளர்ப்போமானால் அவர்களின் எதிர்காலம் சிறப்புப் பெறும் என்பது உண்மையான விடையமாகும்..

# பணத்தின் வரலாறு..



கி.மு 700ம் ஆண்டு லிபியா நாட்டு மன்னர் கயியாசு (ஜாஸ்) என்பவர் எலேக்டிரம் என்னும் நாணயத்தை அறிமுகப்படுத்தினார். 25 சதவீதம் வெள்ளியும் 75 சதவீதம் தங்கமும் கலந்து இதை உருவாக்கினார். இந்த நாணயம் அவரைவிதையின் உருவத்தில் இருந்தது. கொடுக்கல் வாங்கலில் இந்த நாணயம் நீண்ட நாட்கள் அதிக வசதியை ஏற்படுத்தியது. கிரேக்க வர்த்தகர்கள் இதன் வசதியை உணர்ந்து இந்த நாணயத்தைப் பயன்படுத்தத் தொடங்கினர்.

இதிலிருந்து மிகக்குறுகிய காலத்திலேயே பல நாடுகளுக்கும் நாணய செலவாணி முறை பரவத்தொடங்கியது. நாட்கள் செல்லச் செல்ல தங்கத்துக்குப் பதிலாகச் செம்பு பயன்படுத்தத் தொடங்கினார்கள். வியாபாரத்தில் அதிக அளவில் நாணயங்கள் பிரச்சனைகளைத் தீர்த்து வைத்த போதும், அதிக அளவிலான நாணயங்களைத் தூக்கிச் செல்வதில் சிரமங்கள் இருந்தன. அதன் பிறகுதான் இதைச் சரிசெய்யும் ஒரு முயற்சியாக முதன் முதல் காகிதத்தில் அச்சடிக்கும் நோட்டு முறையைக் கொண்டுவந்தனர். இதில் சீனர்கள்தான் முதன் முதலில் காகித செலவாணி முறையைப் பணமாகக்கொண்டு வந்தனர்.

கி.மு 119ஆம் ஆண்டிலேயே காகித நோட்டுகளைப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டனர் சீனர்கள். நாணயம் மிக்க ஒரு வங்கி காகிதத்தில் அச்சடித்துள்ள தொகையைத் தருவதாக அளிக்கும் உறுதி மொழியை அடிப்படையாகக்கொண்டுதான் காகித நோட்டு பணம் புழக்கத்திற்கு வந்தது.

கி.பி 1661ம் ஆண்டு ஆடி மாதம் சுவீடன் நாட்டின் தலைநகரம் ஸ்டொக்கோமில் (Stockholm) உள்ள ஒரு வங்கிதான் உலகத்திலேயே முதன் முதலில் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் காகிதத்தில் அச்சிட்டுப் பணம் என்று வெளியிட்டது. இன்று காகித நோட்டுகள் வளர்ச்சியடைந்து காசோலைகள், கடன் அட்டைகள் என்று பல்வேறு வடிவில் உருமாற்றம் பெற்று பின்னர் உலகம் எங்கும் கைமாறத் தொடங்கிவிட்டது.

## திருக்குறளைக் கற்போம்!..

திருக்குறளை நாளும் கற்றிடுவோம்
தெளிந்த அறிவினைப் பெற்றிடுவோம்
வஞ்சமில்லா உள்ளங் கொண்டு
வாழ்வில் நாளும் உயர்ந்து வாழத்
திருக்குறளைத் தினமும்கற்றிடுவோம்!.

அன்பின் வழியே அறநெறி போற்றிப்
பண்பின் பயன்தரு வழிகளைக் கற்று
துன்பம் போக்கித் துணிவைக் காண
இன்பம் தேக்கும் நன்நூல் குறளே!..

பொய்மை மறந்து வாய்மை ஏற்று
பொறுமை கொண்டு பெருமை கண்டு
அருளின்நெறியால் அல்லல்களைந்தே
மருளூ முலகில் மாண்புடன் வாழத்
தெய்வப் புலவர் வரமாய் அருளிய
பொது மறை நற் திருக்குறளைப்
புனிதமாய்க் கருதியே எந்நாளும்
புவிதனில் வாழ்நாளில் சிறப்புற்று
மாந்தராய் புகழுடன் திகழ்வோம்!..

**செல்வி ராகவி அரவிந்தன்**
**யேர்மனி**

## சிட்டுக்கள்

சின்னச் சின்னச் சிட்டுக்கள்
சிறகடிக்கும் சிட்டுக்கள்
வெள்ளை உடைச் சிட்டுக்கள்
வெண்மை உள்ளச் சிட்டுக்கள்
கல்வி பயிலும் சிட்டுக்கள்
கரைகள் தேடும் சிட்டுக்கள்
கலைகள் நவிலும் சிட்டுக்கள்
களிப்பைச் சொரியும் சிட்டுக்கள்
பண்பை வளர்க்கும் சிட்டுக்கள்
பருகிச் சிறக்கும் சிட்டுக்கள்

**செல்வி செ தாட்சாயினி**
**மு / உடையார்கட்டு ம.வி**

## பந்து

பந்து பந்து பந்து
பாலர் ஆடும் பந்து
வட்ட வட்டப் பந்து
வானை முட்டும் பந்து
அப்பா தந்த பந்து
அருமையான பந்து
ஓங்கி அடிக்கும் பந்து
ஓடிப் பிடிக்கும் பந்து
துள்ளிப் பாயும் பந்து
அழகான வர்ணப் பந்து
அடித்தால் ஓடும் பந்து
தாத்தா தந்த பந்து

## கொஞ்சுந்தமிழ்

ஆடு சுந்தரி ஆடம்மா
அழகு நிலவில் ஆடம்மா
கூடி நடனம் ஆடம்மா
கொஞ்சுந் தமிழ் பாடம்மா
பாடு சுந்தரி பாடம்மா
பால் நிலவில் பாடம்மா
கூடி நடனம் ஆடம்மா
கொஞ்சும் தமிழ் பாடம்மா
ஆடி ஆடிப் பாடம்மா
பாடிப் பாடி ஆடம்மா
கூடி நடனம் ஆடம்மா
கொஞ்சும் தமிழ் பாடம்மா

# பிறர் அன்பே நம் வாழ்விற்கு அர்த்தம் தரும்!...

"பிறர் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்று எண்ணுகிறாயோ அதையே நீ பிறருக்குச் செய்"

எம்மிடையே வாழ்வின் விரக்தியின் எல்லைக்குள் தள்ளப்பட்ட ஒரு மனிதர் அதிலிருந்து வெளியேவர வழி ஏதாவது உள்ளதா?.. என்று கேட்டால், அப்படிப்பட்டவர்களுக்கு நீங்கள் எந்தவிதமான உளவியல் சிகிச்சையை பரிந்துரைப்பீர்கள்..அதற்கான சிறந்த பதிலாக "அம்மனிதர் தன்னைவிட மோசமான நிலையில் உள்ள ஒரு மனிதரைக் கண்டுபிடித்து அவருக்கு நாள் தோறும் பணிவிடை செய்ய வேண்டும்" அப்படிச் செய்து வந்தால் அவரின் விரக்தியின் விளிம்பிலிருந்து வெளிவர முடியும். பிறருக்கு உதவி செய்வது எவ்வாறு நம் வாழ்விற்கு வழமை சேர்ப்பதாக நம் வாழ்வை ஒளிரச் செய்யும்.

எம்மிடையே எத்தனைபேர் பிறருக்கு உதவும் மனநிலையில் இருக்கின்றோம். இன்றைய சூழ்நிலையில் பிறரை அன்பு செய்து அவர்களுக்கு உதவுகின்ற நல் மனம்பான்மை எம்மிடையே வளர்க்க வேண்டும். நாம் எந்த அளவையால் பிறருக்கு அளந்து கொடுக்கின்றோமோ, அதே அளவையால் எமக்கும் அளக்கப்படும் என்பதை அறிந்து பசித்தோருக்கு உணவு கொடுத்தும், வறியவர்களுக்கு தங்க இடம்கொடுத்தும் உடையற்றோருக்கு உடை கொடுத்தும் வாழவும். மெழுகானது தன்னையே உருக்கி ஒளி கொடுப்பது போல நாமும் நற்செயல்களின் மூலம் நம் வாழ்வும் ஒளிபெற்று பிறரையும் அவ்வொளியில் வாழவும் அறியாமையிலிருந்து தெளிவை நோக்கிய பயணத்தை மேற்கொண்டு பிறரையும் வாழ வைப்போம்!..

**செல்வி எம் தேவிகா**
**"நல்லாயன்" சிறுவர் இல்லம் - மாங்குளம்**

## Poem...

You may see me struggle
but you won't see me fall
Regardless if I'm week or not
I'm going to stand tall
Everyone says life is easy
but truly living it is not
Times get hard
people struggle and constantly
get put on the spot
I'm going to fight to live
even though Im destined to die
and even though I'm destined
and I may struggle through it all
you may see me struggle
but you will never see me fall!..

T.Adshaya
**"நல்லாயன்" சிறுவர் இல்லம் - மாங்குளம்**

# புத்திசாலிக் குருவி!..

ஒரு மரத்தின் உச்சியில் குருவி கூடு கட்டிக்கொண்டிருந்தது. அதே மரத்தில் ஒரு தடித்த கிளையில் காகம் ஒன்றும் கூடு கட்டிக்கொண்டிருந்தது. காக்கைக்குக் குருவி கூடு கட்டுவது பிடிக்கவில்லை. ஏன் என்றால் தனக்கு மேலே ஒரு கூடு கட்டுகிறதே என்பதுதான்.காகம் குருவியைப் பார்த்து " குருவியே நீ உச்சியில் கூடு கட்டுவது பற்றி எனக்கு மகிழ்ச்சி, ஆனால் காற்றடித்தால் உன் கூடு இப்படியும் அப்படியும் ஆடி அற்றுக் கீழே விழுந்துவிடாதே?.. அதனால் எனக்குக் கீழே நீ கூடு கட்டிக்கொண்டால் நல்லது காற்று எவ்வளவு அடித்தாலும் உன் கூடு அப்படியே இருக்கும். நீயும் உன் குடும்பமும் சுகமாய் வாழலாம்" என்றது."காக்கையே உன் அன்புக்கு மிகவும் நன்றி. நான் உன் பேச்சைக் கேட்டு அடி மரத்தில் கூடு கட்டினால் சிறுவர்கள் என் கூட்டை எளிதில் பிய்த்து விடுவார்கள். உயர இருந்தால் ஏறி வரமாட்டார்கள்" என்று கூறிப் பறந்து விட்டது...

**படிப்பினை..**

தீயவர்கள் நல்லது செய்வது போல் நடிப்பார்கள். அவர்கள் பேச்சைக் கேட்டால் நிச்சயம் நமக்குத் தீமையே உண்டாகும். நாம் ஒரு நாளும் தீயவர்கள் பேச்சைக் கேட்டு நடக்கக்கூடாது..

## வீட்டுத் தோட்டம்!..

சும்மா கிடந்த நிலத்தில்
அம்மா சொன்னகருத்தில்
வீட்டுத் தோட்டத் திட்டம்
மழைத்துளி முத்தாய்
எங்கள் மனக்
கதவைத் தட்டும்!..

வறுமை வறுமை என்று
வருந்தாமல் எமக்குள்
திறமை எண்டென்று
தீர்மானித்த திட்டம்
சோம்பேறிப் மனிதர்களை
துள்ளி எழ விட்டு
செலவுச் சுமைகளை
கிள்ளி எறிந்திடவே
சொந்த மண்ணில்
சிக்கனத் திட்டம்!..

வாழை மா பலா பப்பாசி
வாயூறும் கொய்யாப்பழம்
கொடித் தோடை
அவரைக்கீரை தக்காளி
அழகாய்ச்சிரிக்கும் கத்தரி!..

பசுப்பால் தினந்தோறும்
பலமான தாயகம்
எனதாகும்
தனிநபர் முயன்று குழுவாகி
தனித்த வருமானம்
பலவாகி
உழைப்பினில் உயர்ந்து
உன்னதமாய் இன்பமுற
வாழ வழி தந்த திட்டம்

கத்தும் கடலும் நிலமும்
எமைக் காக்கும்
தாயெனப்
போற்றுவோம்!..

நகரில் வாழும் நம்மவர்
போல்
நடையில் உடையில்
முக பாவனையில்
சுறுசுறுப்பாய்
சுழன்று உழைத்து
சுக வாழ்வு
அமைத்திடுவோம்
சுமையின்றி
வாழ்ந்திடுவோம்!..

**செல்வி சு மிக்சலா**
**"நல்லாயன்"சிறுவர் இல்லம்"**
**- மாங்குளம் -**

# சுடுக்கோ புதிர்ப்போட்டி இலக்கம் - 36

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | 6 | 2 | | | 3 | |
| | | | | | 7 | | 6 | |
| 5 | | | 4 | | | 8 | | 1 |
| | | | | | | 4 | | |
| 4 | | 2 | 7 | | 3 | | | |
| | 9 | | | | 5 | | | |
| | | 1 | 8 | | | 2 | | |
| | | | | | | 1 | 9 | |
| 8 | 4 | | | | | | | 3 |

# சிறுவர் குறுக்கெழுத்துப் போடி 129
## (பங்குனி - சித்திரை- 2023)

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இ-வ

01-04 மாணவர்கள் விடுமுறை என்றால் இப்படிச் செல்வார்கள்.

09-10 தானியங்களில் ஒன்று.

13-14 சம்பளம் ஒத்த சொல்.

வ-இ

08-05- பல் துலக்கப் பயன்படுவது.

15-14- இந்த மிருகம் பசித்தாலும் புல்லைத் தின்னாது.

கீ-மே

08-04- முக்கனிகள் ஒன்றின் மரம்.

11-03- ஊர்வன வாழும் இடங்களில் ஒன்று.

மே-கீ

06-14- நம் நாட்டு வீடுகளில் காணப்படும் உயிரினம் ஒன்று.

08-16- கனி ஒத்த சொல்.

முயற்சித்துப் பாருங்கள். விடை தெரியாவிடின் பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்.

## பழமொழிகளுக்கான அர்த்தம்..

1- அடம்பன் கொடியும்திரண்டால்மிடுக்கு
(ஒற்றுமையே பலம்)
2- அன்பான சிநேகிதனைஆபத்தில்அறி..
(உத்தம நட்பு)
3- ஆனைக்கு ஒரு காலம் பூனைக்கு ஒரு காலம்..
(காலம் மாறி மாறி வரும்)
4- அக்கரை மாட்டுக்கு இக்கரைபச்சை.
(திருப்திப்படாத மனம்)
5- உப்பிட்டவரை உள்ளளவும் நினை..
(நன்றி மறவேல்)
6- ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது..
(வெறும் புத்தகப் படிப்பு உதவாது)
7- ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு..
(ஒற்றுமைப்பட்டால் பலம் பெறலாம்.
8- கந்தையானாலும் கசக்கிக்கட்டு..
(சுத்தமாக வாழவேண்டும்)
9- காற்றுள்ள போதே தூற்றிக் கொள்..
(காலம் தவறாமல் காரியம்செய்தல்)
10- வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்..
(திறமையில் நம்பிக்கை)

## எதிர்ச் சொற்கள்..

1- ஈதல் - ஏற்றல்
2- ஈற்றில் - முதலில்
3- ஈரம் - உலர்வு
4- ஈடேற்றம் - வீழ்ச்சி
5- ஈடுபாடு - முரண்பாடு
6- உதயம் - அஸத்தமனம்
7- உபகாரம் - அபகாரம்
8- உத்தமன் - அதர்மன்
9- உலோபம் - வள்ளன்மை
10- உற்சாகம் - சோர்வு
11- உருவம் - அருவம்
12- உண்மை - பொய்மை
13- உபசாரம் - அபசாரம்
14- உயர்வு - தாழ்வு
15- உற்றார் - அற்றார்
16- உலோபி - வள்ளல்
17-உறக்கம் - விழிப்பு

## இரட்டைக்கிளவி வாக்கியங்கள்..

1- பரபரப்படைந்தது ஊர்.
2- பிசுபிசுத்தது போராட்டம்.
3- மடமட என தண்ணீர் குடித்தான்
4- மலங்கமலங்க விழித்தான்.
5- மளமள என எல்லாம் நிகழ்ந்தன.
6- முணுமுணுத்தது அவர் வாய்.
7- மொறுமொறுப்பாகஇருந்ததுமுறுக்கு.
8- விறுவிறுப்பான நல்ல கதை.
9- வெடவெட என நடுங்கியது உடல்.
10- வெதுவெதுப்பான நீரில்குளித்தான்.

## மரபுத் தொடர் விளக்கம்...

1-ஆகாயக்கோட்டை-மிதமிஞ்சியகற்பனை
2-ஆறப்போடல் - பிற்போடல்
3-ஆசைவார்த்தை - ஏமாற்றுப் பேச்சு
4-இலவுகாத்தகிளி-காத்திருந்துஏமாறுதல்
5-ஈடேறுதல் - உயர்வடைதல்
6-உதவாக்கரை - பயனற்றவர்
7-உப்பில்லாப் பேச்சு - பயனற்றபேச்சு
8-உச்சிகுளிர்தல்-மிக்கமகிழ்ச்சியடைதல்
9-கண்வைத்தல் -விருப்பம் கொள்ளல்
10-கழுத்தறுத்தல் -நம்பிக்கைத்துரோகம்

## அறிந்து கொள்வோம்..

1- அட்லாண்டிப் பகுதியில் ஆண்டிற்கு ஒருமுறைதான் சூரியன் உதயமாகின்றது.
2- கை ரேகையை வைத்துக் குற்றவாளியைக் கண்டுபிடிக்கும் முறையைக் கண்டறிந்தவர் எட்வர்ட் ஹென்றி என்பவராவர்.
3- முதன் முதலில் கேள்விக்குறியைப் பயன்படுத்திய மொழி இலத்தின் மொழி.
4- இந்தியர்களே முதன் முதலில் பருத்தியை உபயோகித்து ஆடை நெய்ததாகக் குறிப்பிடப்படுகின்றது. அதுவரை விலங்குகளின் ரோமங்களினால் மட்டுமே ஆடைகள் தயாரித்து உபயோகிக்கப்பட்டன.
5- உலகின் அமைதியான நாடு என்ற பெருமையைப் பெற்றுள்ள ஐஸ்லாந்தில் இராணுவம் கிடையாது.

## உயிரினங்கள் சில..

1- ஆண் மயில்கள் மட்டுமே Peacock என அழைக்கப்படுகின்றன. பெண் மயில்கள் PEAHENS என்றே அழைக்கப்படுகின்றன.
2- உலகில் மிகப் பெரிய பறவை - தீக்கோழி.
3- உலகில் மிகப்பெரிய உயிரினம் - நீலத்திமிங்கிலம்.
4- முட்டை இட்டுக் குஞ்சு பொரிக்கும் உயிரினம் - எறும்புண்ணி.
5- உலகில் நீண்ட காலம் உயிர் வாழும் உயிரினம் - ஆமை,
6- உயிரினங்களில் பாலூட்டிப் பறவை இனம் - வௌவால்.

## எமது உணவு வகைகள்...

-புரதம் - இறைச்சி,பால், முட்டை, மீன், கடலை, அவரைவகை.
-மாப்பொருள் - தானியங்கள், கிழங்குகள், ஈரப்பலாக்காய்.
-கொழுப்பு - எண்ணெய், பால், தயிர், நெய், வெண்ணெய், மாஜரின், இறைச்சி.
-கல்சியம் - கருவாடு, சிறுமீன்கள்
-இரும்புச்சத்து - நிலக்கடலை, மீன், இறைச்சி, ஈரல்.
-விற்றமின் A - முட்டைமஞ்சள்கரு, பழங்கள், மஞ்சள் நிறத்திலான காய்கறிகள்
-விற்றமின் B - மீன் , இறைச்சி, முட்டை, மஞ்சள் நிறத்திலான காய்கறிகள், தானியங்கள்.
-விற்றமின் C - புளிச்சுவை கொண்ட பழங்கள்.
-விற்றமின் E - கீரை வகைகள்
-விற்றமின் K - பூக்கோவா, பசளிக்கீரை

## விடுகதைகள்..

1- தொட்டுப் பார்க்க முடியும் எட்டிப்பார்க்க முடியாது அது என்ன..
2- இடி இடிக்கும் மின்னல் மின்னும் மழை பெய்யாது அது என்ன..
3- இது இருந்தாலும் ஆபத்து இல்லாவிடினும் ஆபத்து அது என்ன..
4- இளமையும் முதுமையும் சந்தித்தால் என்ன பேசும்..
5- கசக்கிப் பிழிந்தாலும் கடைசிவரை இனிப்பாள் அவள் யார்..
6- இவன் வாலுக்கு வையகமே நடுங்கும் அவன்யார்..
7- கறுப்பன் இவன் பிடுங்கலாம் நடமுடியாது அவன் யார்..
8- உடம்பில்லாதவன் பல சட்டைகள் அணிந்திருப்பான் அவன் யார்..
9- மரத்திலே தொங்கும் அது மலைப்பாம்பு அல்ல அது எது..
10- முக்கண்ணன் சந்தைக்குப் போகின்றான் அவன் யார்..

**( முதுகு, பட்டாசு, வாய், கதை, கரும்பு, தேள், மயிர், வெங்காயம், விழுது, தேங்காய் )**

..........................................................................................................

### மந்திரிகள் பலவிதம்..

1- தலை - ஜனாதிபதி
2- மூளை - பிரதமமந்திரி
3- வாய் - ஊடகமந்திரி
4- கண்கள் - வெளிவிவகாரமந்திரி
5- மூக்கு - சுகாதாரமந்திரி
6- காதுகள் - தபால்மந்திரி
7- வயிறு - உணவுமந்திரி
8- தோல் - பாதுகாப்புமந்திரி
9- கைகள் - தொழில்மந்திரி
10- கால்கள் - போக்குவரத்துமந்திரி
11- சுவாசப்பை - உள்துறைமந்திரி

**- ஜெயா நடேசன் -**

### எதனால் எது கெடும்..

1- குளிக்காத மேனி கெடும்
2- குளிர்ந்துபோன உணவும் கெடும்
3- அழகும் ஒருநாள் கெடும்
4- பொய் உரைத்தால் புகழும் கெடும்
5- துடிப்பில்லா இளமை கெடும்
6- துவண்டிட்டால் வெற்றி கெடும்
7- தூங்காத இரவும் கெடும்
8- தூங்கினால் பகலும் கெடும்
9- கவனமில்லா செயலும் கெடும்
10-கருத்தில்லா எழுத்தும் கெடும்

## கணக்குப் புதிர்கள்..

### கணக்கு-1

| | | | | |
|---|---|---|---|---|
| 20 | | 26 | | 17 |
| | 29 | | | 9 |
| 21 | 11 | | 15 | |
| | 18 | 32 | | 27 |
| | | 12 | 25 | |

- எந்தப் பக்கத்தால் கூட்டினாலும் கூட்டுத்தொகை 100 வரவேண்டும்..
- 8 தொடக்கம் 32 வரையிலான இலக்கங்களைப் பயன்படுத்தலாம்..
- ஒருமுறை எழுதிய எண்ணை மீண்டும் எழுதக்கூடாது..

### கணக்கு-2

**வென்று காட்டுங்கள்**



| | | |
|---|---|---|
| | | |
| | 55 | |
| | | |

82, 37, 19, 64, 28, 73, 91, 46 ஆகிய எண்களைக் கொண்டு கட்டங்களை நிரப்புக. ஆனால் எப்படிக் கூட்டினாலும் கூட்டுத் தொகை 165 கிடைக்க வேண்டும்.

**முயற்சிசெய்து பாருங்கள் முடியாவிட்டால் பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்..**

........................................................................................................

**பொன்மொழி......**

வாழ்க்கை என்பது ஒரு சுமை
அதைத் தாங்கிக் கொள்
அது ஒரு முள் கிரீடம்
அதை அணிந்து கொள்...

# குறளும் பொருளும்...

## அமைச்சு:-

631. கருவியுங் காலமுஞ் செய்கையுஞ் செய்யு
மருவினையு மாண்ட தமைச்சு.

632. வன்கண் குடிகாத்தல் கற்றறித லாள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு.

633. பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருந்தலும் வல்ல தமைச்சு.

634. தெரிதலுந் தேர்ந்து செயலு மொருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு.

635. அறனறிந் தான்றமைந்த சொல்லானெஞ் ஞான்றுந்
திறனறிந்தான் றேர்ச்சித் துணை.

636. மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை.

637. செயற்கை யறிந்தக் கடைத்து முலகத்
தியற்கை யறிந்து செயல்.

638. அறிகொன் றறியா னெனினு முறுதி
யுழையிருந்தான் கூறல் கடன்.

639. பழுதெண்ணு மந்திரியிற் பக்கத்துட் டெவ்வோ
ரெழுபது கோடி யுறும்.

640. முறைபடச் சூழ்ந்து முடிவிலவே செய்வர்
திறப்பா டிலாஅ தவர்.

# குறளும் பொருளும்...

## அமைச்சரது தன்மை :-

631. செயலுக்குரிய கருவியும், காலமும், செய்யும் வகையும், செய்யப்படும் தொழிலையும் சிந்தித்துச் சிறப்பாகச் செய்ய வல்லவன் அமைச்சன்.

632. அஞ்சாமையும் குடிமக்களைக் காத்தலும், கற்றறிதலும், திறமையும், முயற்சியும் ஆகிய ஐந்தும் உடையவனே அமைச்சன் ஆவான்.

633. பகைவரின் துணையைப் பிரித்தலும், தம்மைச் சேர்ந்தவரைப் பிரியாமல் பார்த்துக் கொள்வதும், முன்நீங்கியவரை மீண்டும் இணைத்துக் கொள்வதும் அமைச்சரின் வலிமையாகும்.

634. பலவாறு தோன்றும் செயல்களில் ஆவதறிவதும் அதைச் செயற்படுத்துவதும், பிறரைப் பிரித்தல் சேர்த்தலில் துணிவு கொள்ள வல்லவனே நல்லமைச்சு.

635. அறத்தை அறிந்து, ஆராய்ந்த, சொல்லைக்கூறி, தன் தொழிலின் திறனை அறிந்து செயற்படுபவனே துணையாகத் தேர்ந்தவன்.

636. இயற்கை அறிவுடன் நூலறிவும் சேர்ந்த அமைச்சருக்கு இதைவிட முன்னிற்கும் அதிநுட்பமான சூழ்ச்சிகள் எவை உள்ளன.

637. நூலறிவுடன செயல்படும் காலத்திலும் உலக நடைமுறையை அறிந்து செயல்படுதல் வேண்டும்.

638. அறிஞர் சொல்லைத் தட்டிவிட்டு அரசன் தானும் தவறு செய்யும் காலத்தில் அக்குற்றம் நீங்கும்படி உறுதி கூறுவது அமைச்சர் கடமையாகும்.

639. அருகில் இருந்துகொண்டெ கேடு செய்யும் அமைச்சரைக்காட்டிலும் எழுபது கோடி பகைவரே அரசனுக்கு மேலானவர்.

640. செய்யப்படும் வினைகளை முன்னரே திறம்பட எண்ணி வைத்தும் அதைச் செய்யுங்கால் முடிக்காமல் விடுபவர் முடிக்கும் திறனற்றவர் ஆவர்.

# காசிஆனந்தனின்
# சிந்தனைகள்...



## முனைப்பு...

காலைப்பனி கொக்கும் குருவியும் குளிரால் நடுங்கின. தங்களுக்குள்ளேயே பேசி அவை ஒரு முடிவுக்கு வந்தன. "இன்று நான் குளத்துக்குப் போவதில்லை வேண்டுமானால் மீன் இங்கே வரட்டும்" என்றது கொக்கு. "நானும்தான் தோப்புக்குப் போவதில்லை வேண்டுமானால் பழங்கள் இங்கே வரட்டும்" என்றது குருவி. பொழுது கரைந்தது பசி வயிற்றைக் கிள்ளியது நடுப்பகல் தாண்டியும் பசியை எப்படித் தாங்க முடியும். கொக்கு குளத்துக்குப் போனது. குருவி பழத்துக்குப் போனது. மரத்தில் இருந்த அணில் பாடியது..

**"கொக்கைத் தேடிக் குளம் வராது**
**குருவியைத் தேடிப் பழம் வராது"**

## தோல்கள்...

பாம்பு தோலைக் கழற்றி வைத்துவிட்டுப் புறப்பட்டது. ஆடுகள் மேய்துகொண்டிருந்த பக்கம் அது போனது. அங்கே நின்ற தனியன் ஆட்டிடம் " அதோ பார்..பாம்பு உன்னுடையவர்கள் இருக்கும் இடத்தை நோக்கித்தான் போகிறது. நச்சுப் பாம்பு பல் பட்டாலே போதும்... என்று கூறியது சேவல். அப்படி ஒன்றும் நடந்துவிடாது....பாம்பு தோலைக் கழற்றிப் புதிதாய்ப் பிறந்திருக்கிறது.. என்றது தனியன் ஆடு. சிறிது நேரத்தில்..ஆடுகளின் அலறல் புல் வெளியை உலுக்கியது. ஓசை வந்த திசை நோக்கி தனியன் ஆடும் சேவலும் ஓடின. அங்கே...பாவம் அப்பாவி ஆடுகள் இரண்டு பாம்புக்குப் பலியாகிச் செத்துக் கிடந்தன. சேவல் சொல்லியது..

**"பல்லைக் கழற்றாத பாம்பு**
**தோலைக் கழற்றி என்ன?..**
**வாலைக் கழற்றி என்ன?..**

# குறுக்கெழுத்துப்போட்டி-193
## (வைகாசி - ஆனி 2023)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

இ-வ
01-06 மனிதனுக்கு இது இல்லை என்றால் முழுமனிதனாக வாழமுடியாது.
12-14 இலங்கையில் ஒரு நகரம்.
29-32 இது ஒரு கலை.
37-39 இளம் பெண்களை இப்படியும் அழைப்பர்.
44-46 நம் நாட்டு வீடுகளில் காணப்படும் உயிரினம்.
வ-இ
12-09 உலகில் ஒரு நாட்டுக்குச் சொந்தமான விலங்கு.
17-15 தானிய வகைகளில் ஒன்று.
21-19 ஒற்றுமைக்குப் பெயர்போன பறவை.
48-46 அழகான மலர்.
கீ.மே
20-13 உறுப்புக்களில் ஒன்று.
29-22 முக்கனிகளில் ஒரு மரம்.
37-23 கை ஒத்த சொல்.
40-19 வடிவங்களில் ஒன்று.
48-27 இனிப்பான தின்பண்டம்.
49-35 இசைக் கருவிகளில் ஒன்று.
மே-கீ
01-22 விடுமுறை என்றால் பலர் இப்படிச் சென்றுவிடுவார்கள்.
04-25 நாட்களில் இதுவும் ஒரு நாள்.
07-35 உலக இயக்கத்துக்கு இது முக்கியமானது.
17-38 இராமாயணத்தில் ஒருவர்.
29-43 இது ஆடுகள் தங்குமிடம்.
(விடைகளை கண்டு பிடியுங்கள். முடியாவிடின். பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்)

# கருணையின் கலங்கரை...

அன்னையெனும் பொக்கிசம்
அரவணைப்பின் மகத்துவம்
பிறர் அன்பின் தனித்துவம்
பேரன்பின் பெரும்தேட்டம்
உன்னதத்தின் உழைப்பாளி
உயிர்காக்கும் பணியாளி
தன்னையே அர்ப்பணமாய்
தன்சேவை சமர்ப்பணமாய்
எண்ணற்ற சேவகத்தில்
இணைந்திட்ட ஈகைத்தாய்
இனமத பேதமின்றி
ஏழைகளின் தேவதை
மனம் குன்றும் நோயாளி
மாற்றுத் திறனாளி
புறம் தள்ளி போக்கிடமற்றோர்கள்
காசநோயின் வாட்டத்தில்
கவனிப்பு அற்றோரை
கரம் கொடுத்து காத்தாய்
வழிகாட்டி வரம் கொடுத்து
வலிபோக்கி வாழ்வு தந்தார்

ஈகையின் உன்னதத்தை
இயல்பாக உணர்த்தியவர்
வீடு மனையற்றோர்
வீதியிலே வாழ்ந்தவர்கள்
நோயாலே வாழ்ந்தவர்
நோக்கோடு காத்தவர்

மதுபோதை குடிப்பழக்கம்
மாற்றிடப்பழக்கங்கள்
கண்பார்வை அற்றவரை
காக்கவென்று உழைத்தவர்
கருணையின் வள்ளலிவர்
கடினங்கள் பலசுமந்தும்
காயங்கள் தான் மறந்தும்
காப்பாற்றி சேவை செய்த
அன்னையின் சேவைக்கு
ஈடேது இணையேது
அல்லும் பகலுமாய்
அர்ப்பணிப்பு அர்ப்பணிப்பு
ஓரே தேவை சேவையே
உணர்த்திய உன்னதத்தாய்

மூத்தோர் வாழ்வரனும்
சிசுபவன் காப்பகமும்
சிரத்தையுடன் சீரமைத்தார்
சமூகம்சார் சீர்நலனை
சிறப்பாக்கி சேவை நெய்தார்
தெய்வத்தின் உருவிலே
தேசத்தின் சீமாட்டி
காலத்தின் கலங்கரையே
அன்னை தெரசா
அவனியின் அட்சயமாய்
அவதாரம் பெற்ற தாய்
ஈடிணையற்ற ஈகையின் முதலீடு
கருணையின் பேரேடு!

**வசந்தா ஜெகதீசன்**

## மறக்கத்தகுமா மரணவலி..

வெட்டவெளி மையானம்
வெறுமையான சுடுகாடு
அவலக்குரல்கள் ஆவிபேரொலிகள்
நிஜமான இனஅழிப்பு
நிர்க்கதியான தமிழினம்
பூண்டோடு அழித்திட்ட மே 18
இதயரணம் காயாது
மரணித்த வேதனையில்
மாண்டு துடிக்கிறது
மனிதநேயக்கதவுகள்
இருண்ட பேரவலம்
மயான பூமியாய்
முள்ளிவாய்க்கால்
மறக்கத்தகுமா மே18
ஈழத்தின் வேரிலே
இனஅழிப்புக்கோரம்
குருதி ரணமாய்
குற்றுயிர் வதையாய்
கட்டுண்டு மாண்ட
காயவலிகள்
மறக்கத்தகுமா மே18
மனிதமே எங்கே
மாண்டுபோனாய்

**வசந்தா ஜெகதீசன்**

## சுமந்தவளே சுமையானாள்!..

பத்து மாதம் வயிற்றில் சுமந்தவள்
தன் உதிரத்தையே கொட்டி
பாலாக ஊட்டி வளர்த்தவள்
தொட்டில் கட்டித் தாலாட்டியவள்
ஆராரோ பாடித் தூங்க வைத்தவள்
உணர்வுகளை அன்பாய் கொடுத்தவள்
பல கனவுகளுடன் வளர்த்தவளை
சம்பளமற்ற வேலைக்காரியாய்
கணவன் பிள்ளைகளுக்குப் பணியில்
சுமையானாலும் சுகமாகச் சுமந்தபடி
வாழவைத்த தெய்வம் அன்னையவள்
அன்பிற்காய் ஏங்கித் தவித்தவளை
அரவணைக்க ஆதரவற்ற பெண்ணாக
வலுவற்று ஒதுங்கினாள் மூலையில்
பிராத்தனைகளின் கோவில்களில்
தினமும் பிரார்த்தித்து வந்தவள்
உருகும் நல் மனம் கொண்டவளை
கடிந்துகொட்டித் தீர்க்கும் பிள்ளைகள்
இன்றோ அவள் பெரும் சுமையானாள்
அளவுச் சாப்பாட்டிற்கு ஏங்கியும்
அரவணைக்கும் மனங்கள் இல்லாது
கருவிலும் மடியிலும் சுமந்தவளை
சுமையாகிப் போனாளோ என
காப்பகங்களில் விட்டுவிடுகின்றனர்
பத்து மாதம் கருச் சுமந்தவள்
பெரும் சுமையாகிப் போனாளோ!..

**ஜெயா நடேசன்**

### பணிவு!..

பெரியவரோ சிறியவரோ
கற்றவரோ கல்லாதவரோ
எல்லோரின் கால்களையும்
கழுவுகிறது கடல் அலை!..


**- சிவா -**

### அப்பா!..

மகனின் பெருமையையும்
கல்வியின் புகழையும்
மகிழ்ச்சியாகப் பேசுகிறார்
முதியோர் இல்லத்து அப்பா!..

# சேகுவேரா!...

திரேஸ் மரியதாஸ்
இலண்டன்



மருத்துவராயிருந்து
அடிமைப்படுத்தப்பட்ட
மக்கள் எங்கிருந்தாலும்
என்னுறவுகள்
என்னுணர்வென
எல்லா மாந்தரையும்
எளிதில்க் குணமாக்கி
ஒத்தடமானார்
அவர் இல்லாதபோதும்
அவரே மருந்தாய் இருந்து

சொந்த நாட்டை மட்டும்
நேசிக்காமல் சோர்ந்துபோன
மக்கள் எங்கிருந்தாலும்
சொர்க்கமாய் வாழ
சேர்ந்து பூசித்து ஆசித்து
எந்நாடும் எந்நாடென
புறப்பட்ட சமாதானப்புறா

தொழுநோயாளிகளைத்
தோளோடு தோளாக
தென்பூட்டி த் தேற்றி
தொழவைத்துத் தென்பூட்டி
அகிலத்தின் அன்னை
திரேசா வழிவந்து
வழிகாட்டிய ஒளியின்
மறுவுருவான மகான்

கியூபா மக்களின் கடவுளாய்
மக்கள் மனதில் மங்காத
திங்களாய்த் திகழ்ந்த
தீபமாய் மக்களுக்காய்
தினந்தோறும் உழைத்து
மரித்தாலும் மரிக்காத
மகோன்னத திரியாகி
ஒளிர்ந்த தூரிகை நீ

அடுத்தவரையும் அன்புசெய்யும்
சேகுவாராக்களாக அநுதினமும்
பண்பும் பாரம்பரியமும் பேணிப்
பிரசவமாகிடக் கருவாவோம்
மறுபடி மாற்றுருவாய்ப்
பிறப்பெடுத்து மண்ணுலகை
மனிதநேயமாய்
மாற்றிடச் சம்மதமாய்!....

## கண்ணுக்கு தெரியாத ஒருவன் !..

பூக்களை பூமியலே வைத்தான்
ஒரு சில நாட்களே
அதுக்கு வாழ்வு கொடுத்தான்
காதலை உலகுக்குச் சொன்னான்
அதில் உண்மையில்லாமல்
கண்ணீரை வைத்தான்
காமத்தை விட்டான் அதில்
மடிந்து சாகவே மனிதனைச் சாபமிட்டான்
குதிரையைப் படைச்சான்
கொம்பை மறைச்சான்
ஆட்டைப் படைச்சான்
அதன் கழுத்தை அறுக்க வச்சான்
நாயைப் படைச்சு அதை
நக்கிச் சாப்பிடவே வைச்சான்
மனிதனைப் படைச்சான்
அவன் குணத்தைக் கெடுத்தான்
சுயநலமாகவே வாழவிட்டான்
பெண்ணைப் படைத்தான் அவளுக்கு
தாய்மையைக் கொடுத்தான் அத்துடன்
கர்ம வினையைச் சேர்த்து விட்டான்
ஏழையைப் படைத்தான்
வறுமையைத் திணித்தான்
ஒரு பிடி சோற்றுக்கு
அலைய வைப்பான்
உயிரைக் கொடுப்பான்
உயிரை எடுப்பான்
அதைத் தனக்கு மட்டுமே
உரிமையாய் வைத்தான்
அவனே இறைவன்
தேடினாலும் கண்ணுக்குத்
தெரியாத ஒருவன்
அவனே இறைவன்!...

**-கவி மீனா-**

## உழைக்கும் கரங்கள்!

உலகம் வாழ உழைக்கும்
கரங்கள்
உவப்பை அறியா உணர்வே
கணங்கள்
விலகல் காண வீச்சாம் ஊக்கம்
விடியல் தேடி விரையும் ஓட்டம்
திலகம் இவராய்த் தேசம்
தன்னைத்
தூக்கி நிறுத்தும் தூய்மை
மனிதர்
கலங்க வைக்கும் கயமைத்
தனங்கள்
களைய வேண்டும் இவர்கள்
வாழ!
பரிதியின் சுற்றலாய்ப் பாரை
இயக்கிடப்
பகலும் இரவும் பகிர்வார்
ஊக்கம்
வறுமை ஒன்றே வாழ்நாட்
சொத்தாய்
வளைத்து நிற்பார் வானும்
மண்ணும்
குருதி உருக்கிக் கூனல்
விழுந்தும்
குன்றாய்த் தாங்கும் கோபுரம்
இவர்கள்!
உறுதி பெறணும் உழைக்கும்
வர்க்கம்
உவப்பைத் தரணும் முதளாளி
வர்க்கம்!

**- கீத்தா பரமானந்தன் -**

# தொழிலாளர் தினம் !..

- இரா சம்பந்தன் -

கல்மண் சீமெந்தோடு
தொழிலாளியின்
வியர்வையும் சேர்ந்ததே
உயர்வான மாளிகைகள் !
அங்கே முதலாளி
பன்னீரில் குளிக்கையிலே
தொழிலாளி கண்ணீரிலே . . . .

ஆலையின் கரும்பாய்
தொழிலாளி பிழியப்பட்டுச்
சக்கையாய் போகும்வரைச்
சளைப்பதில்லை முதலாளி !
காலைவரை முயலும் தொழிலாளி
குடிப்பதெல்லாம் கஞ்சிதான் !

நித்திரை யின்றியே
இத்தரையி னுயர்வுக்காய்
எந்நாளும் உழைப்பவர்க்கு
சித்திரையின் பின்னே வருகின்ற
வைகாசி பூச்சொரிந்ததா ?

மேதினம் ஒவ்வோ ராண்டும்
வந்துவந்து போனாலும்
உழைப்பவர் வாசலுக்கு
உதய சூரியன் வருவதில்லை !

வியர்வைத் துளிகளினால்
விளைநிலஞ் செழிக்கும் !
விளைநிலஞ் செழித்தால்
வியனுலகு மகிழ்வுறும் .

தொழிலாளி தேசமெங்கும்
குனிந்து முயல்வதனால்
முதலாளித்துவ நாடுகள்
முன்னேற்றம் காண்கின்றன !

நாற்று நட்டே
நன்னீர் பாய்ச்சியவரின்
வீட்டினிலே விதைப்பதற்கு
விதைநெல்லு மில்லாமல் . . . .

அன்றாடங் காய்ச்சிகளாய்
விதைத்தவன் வாழ்ந்திருக்க
கொண்டாடி மகிழ்கின்றான்
கொழுத்த முதலாளி . .!

தொழில்களால் உருவான
ஏற்றத் தாழ்வுகளால்
தொழிலாளி கைகட்டி நிற்க
முதலாளி நாற்காலியில் . . . .

சமவுரிமை கொடுப்ப துமில்லை !
சமபோச னமளிப்ப துமில்லை !
இடைவெளி தொடர்வதனால்
இவர்கள் இருதுரு வங்களாய் !

வர்க்க பேதங்கள் தகர்ந்து
வளமார் சிந்தனை பூத்தால்
தர்க்க மில்லா வாழ்வு
தரணியிலே மலரும் .

ஒளிக்கீற்றைக் காண்பதற்கு
ஒருங்கிணைந்தால் தொழிலாளி
வழியொன்று தான்பிறக்கும்
வசந்தம் வாசலில் பூச்சொரியும்!...

## பரம பிதாவே.!...

- சத்யா பிரான்சிஸ்

“பிதாவே, அறியாமல் செய்யும் இவர்களை மன்னியும்!“(இயேசு).

“ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கத்தோலிக்க தேவாலயம், பிற மதங்கள் மீது நடத்திய வன்மங்களுக்கு மன்னிப்பு கேட்கிறேன்“ (பாப்பானவர் இரண்டாம் ஜோன் பா.்.ல்)

பரம பிதாவே
வரலாறு நெடுக
மத சர்வாதிகாரம்
அறிந்தே செய்த
கூட்டுப் படுகொலையை
எப்படி யார் மன்னிப்பது?
பிற மதங்கள் மீது
ஏகாதிபத்திய மதம்
நடத்திய வன்மங்களுக்கு
மன்னிப்பு உண்டா?
உலக நாடுகளில்
பூர்வீக இன மக்கள் மீது
நடத்தப்பட்ட நரபலி
கொலை கொள்ளை
பாலியல் வன்முறை
பலவந்த மதமாற்றம்
உனக்கு உகந்ததா?
யூத இனத்தின் மீது
மரண யாகம் நடத்திய
அரக்க நெஞ்சுக்கும்...
மாசற்ற மக்கள் மீது
அணுகுண்டுகள் வீசிய
சாத்தான் சிந்தனைக்கும்
யார் பால் வார்த்தது?
ஆயிரமாயிரம் ஆண்டுகால
வரலாற்றில் பதிவானப்
படுகொலை பாவமெல்லாம்
மன்னிப்பில் உப்பாக
கரைந்து விடுமா?
பரம பிதாவே
உனக்காகத்தான்
உன்னை முன் வைத்துதான்
எல்லாக் கொடுஞ் செயல்களும்
பாதகங்களும் நடந்தன..
யார்யாருக்கு மன்னிப்பு தருவது?
உனக்கு மன்னிப்பு தருவதுயார்?

---

## என்னில் இறை!..

கல்லுக்குள் சிலை
சிப்பியில் முத்து
என்னில் இறை
எனக்கென்னக் குறை!
பூவில் வாசம்
பூமியின் நேசம்
வானத்தின் பாசம்
எனக்கே வரம்!
இலைகளின் பச்சை
முளைகளின் அச்சை
கடவுளின் வரிசை
எனக்கே பிச்சை
காற்றின் இனிமை
கற்கும் தனிமை
இயற்கை படர்க்கை
எனக்கே சுடர்க்கை
வாழ்க்கை வசந்தம்
வருத்தம் ஓட்டம்
வருவதும் போவதும்
என்னில் ஆட்டம்!..

# அந்த இரவுகளுக்கு எத்தனை வண்ணங்கள்..

இதேபோலொரு பின்னிரவுக்குப்
பொன்முலாம் பூசிய
நிலாவொளி வனப்பினில் தான்

அண்டத்தின் பேரன்பையும்
பேரன்பின் ஆகாயத்தையும்
ஆகாயத்தின் அரவணைப்பையும்
அரவணைப்பின் முழுமையையும்
முழுமையின் நிறைவையும்
நிறைவின் நீள்தலையும்
நீளும் முடிவிலியாய்
ஒற்றைக் குளையல்
உணர்த்திவிடும்

உண்மை வார்த்தைகளும்
உதிராப் புன்னகையும்
பரிவுப் பார்வைகளும்
உணர்வின் கரிசனையாய்த்
தெய்வத்தின் காப்பரண் கண்முன்

முற்றத்தில் அமர்ந்து
அன்னத்தை அமிர்தமாக்கி
ஆறுதலாய் உருளையாக்கி
உள்ளங்கையில் தரும்
அம்மாவின் அந்த
முதற் குளையலோடே
தகித்தெரியும் நிலவுக்கும்
பெரும்பசி தீர்ந்து போகும்

ஆம், உண்மைதான்
அன்று அந்த இரவுகளுக்கெல்லாம்
எத்தனை எத்தனை வண்ணங்கள்..

**- வேலணையூர் ரஜிந்தன்.**

# துளிர்க்கும் வசந்தம்!...

துளிக்கும் வசந்தம் அழகழகு
தூய்மை உள்ளம் பேரழகு
தளிர்க்கும் இலையும் தனியழகு
தாய்மை உணர்வும் நினைவழகு
களிக்கும் மனமும் கனிவுகொண்டால்
காலம் வரையும் கவியழகு
விழிப்பாய் நீயும் இருந்துகொண்டால்
விண்ணைத் தொடும் கனவழகு

இயற்கை காட்டும் கோலவழகு
இங்கித வானின் நிறவழகு
முயற்சி யோடு துளிர்களுமே
முனைப்பாய் பசுமை காட்டிடுமே
அயற்சி இன்றி அவனியிலே
அழகாய் பூக்கள் நிறைந்திருக்கும்
உயர்ச்சி கொண்டு எழுகவென்று
உலகே இயம்பிச் செப்பிடுமே

அரும்பு போலத் துளிர்களுமே
அகத்தை குளிர்மை ஆக்கிடுமே
கரும்பாய் காலம் இனித்திடுமே
கதையும் சொல்ல வந்திடுமே
விரும்பும் இலையும் தளிர்த்திங்கு
வீதி யெங்கும் தலைகாட்டும்
சுரும்பும் பூவை நாடிடுமே
சூழல் வண்ண கோலமிடும்

**- பாவலர் நகுலா சிவநாதன் -**

## அறப் பஞ்சகம்!..

செ.சுதர்சன்
பேராதனைப் பல்கலைக் கழகம்

கூன்விழுந்த கோன்குதிக்கும் எங்கள்நிலம் மீதில்
வான்விழுத்தும் மழைவரிசை வந்துவிழும் போதில்
நான்முழுதும் நனைந்தகவி நயனமது திறந்தே
"ஏன்வானே கொட்டுகிறாய் எடுத்தெறிந்து?" என்றேன்.

"கோனுயராக் குடிதாழும் கொள்கைமணிநாட்டில்
வானுயர்ந்தா பயிர்விளையும்? பசுபொழியும் மேட்டில்?
தானுயர்ந்தால் போதுமெனச் சாதுக்கள் அலைந்தே,
ஊன்நாடி உள்ளமதை விட்டதனால் விழுந்தேன்!"

"நிலம்நனைய நீயிருந்தால் நீளும்வளம்!" என்றேன்
"பலமதுவே பௌத்தமென நிலமகளைத் திருடி
உலவுகின்ற பன்சலைகள் ஊரறியும் மகனே!
பலமெனவே பாறியவை பள்ளமிட வந்தேன்!!!"

"பொய்த்தாயோ என்றிருந்தேன், போற்றும்வகை செய்தாய்!"
"மெய்க்கவியே! என்மகனே! மேன்மையது சொல்வேன்!
பொய்க்காத உன்னறத்தை இதுவரைநீ என்றும்,
தைக்காத சொல்லெடுத்துப் பாடுயிது நேரம்!"

ஐம்பூதக் கழல்போற்றி! அருமழைத்தாய் வாழ்க
எய்கின்றேன் சொல்லையிதோ எரிந்ததுவோ பாய்ந்து
பொய்த்தூபி பொசிந்தெரிந்து பொடிப்பொடியாய்ப் போகும்
மெய்யேயென் வேலவனே சொல்லிதனில் வாழ்வான்!..

.........................................................................................................................................

**புத்த பெருமானின் நல்மொழிகள்...**

-பேசியே தீருங்கள் பேசியே வளர்க்காதீர்கள்....
-நடப்பதைப் பாருங்கள் நடந்ததைக் கிளறாதீர்கள்....
-உரியவர்களிடம் சொல்லுங்கள் ஊரெல்லாம் சொல்லாதீர்கள்....
-உறுதி காட்டுங்கள் பிடிவாதம் பிடிக்காதீர்கள்....
-விவரங்கள் சொல்லுங்கள் வீண் வார்த்தைகள் சொல்லாதீர்கள்....
-தீர்வை விரும்புங்கள் தர்க்கத்தை விரும்பாதீர்கள்....

# இதழிலக்கம் 218க்கான அட்டைப்படக்கவிதை.




## இயற்கையை வேண்டுவதா?..
## இறைவனை இறைஞ்சுவதா..?

அஞ்சேல் என்றெம க்காய் அபயமளிக்கும் ஆண்டவனே
செஞ்சோற்றுக் கடனுக்காய் சிதைத்தா யெமதுறவுகளை
நெஞ்சிலே பாறையேற்றியே நிர்மூலமாய் ஆக்கிடுதற்குப்
பிஞ்சுகள் இம்மண்ணில் பிழைகள்தான் ஏது செய்தார்..?

துஞ்சிடும் பொழுதி ரவினில் துயர்வந்து சூழ்ந்த தனால்
எஞ்சிய வரின்னு மிங்கேயின்னும் ஏதிலிகளாயு ழலுவதோ
கஞ்சியிருந்தும் பருகமுடியாக் கடுங்குளிரில் வதையுண்டு
மிஞ்சியதுளி உயிரோடிம் மேதினியிலே உலவு வதோ..?

வெஞ்சமரில் வீழ்ந்து மண்ணில் விதையாகிப் போய்விடாமல்
பஞ்சம் பசி பட்டினியென்று பாடையேறியேயும் மறையாமல்
தஞ்சமென்ற எம்தேசம்முழுதும் தவிடுபோடியாகி யுதிர்ந்து
இஞ்யளவும் மீண்டெழுவதற்கு இயலாதுளம் தவிப்பதுவோ.?

பஞ்சணையிற் படுத்துறங்கிய பலருமில்லாது போனார்கள்
மஞ்சத்திலே வாழ்ந்தவரும் மரித்தென்றோ போவதியல்புதான்
கெஞ்சியே நாம் கேட்பதெல்லாம் கேவலமான சாவைத்தரும்
வஞ்சகத்தை விதைத்தின்னும்வதைக்காதே இம்மானிடத்தை !

**-அம்பலவன் புவனேந்திரன்..-**

# நெஞ்சினைப் பொசுக்கும் நினைவலைகள்!...

நெஞ்சினைப் பொசுக்கும் நினைவலைகள் நேரில் வருகின்றது
நீள்கடல் கொஞ்சும் நித்திலம் எந்தன் நிழலையும் சுடுகின்றது
வஞ்சகம் செய்திட்ட வக்கில்லா அரசோ வாதங்கள் புரிகிறது
வாழ்வைச் சிதைத்து வளங்களைப் பறித்த வன்மம் வலிக்கிறது

கஞ்சிக்குமின்றி கதறிடும் உறவுகள் கண்ணீரில் மிதக்குதம்மா
காலங்கள் துளிர்த்து கண்ணீரைத் துடைக்கக் கரங்கள் நீளுமா
பிஞ்சுகாய் பூக்களைப் பிடுங்கிப் புழுதியில்போட்டு மிதித்தம்மா
பிரளயம் மண்ணில் போரென்ற பேரில் பேயென அடித்ததம்மா

ஏஞ்சிய நாட்களில் எதிர்த்திடும் சக்தி எதிரிக்கு இல்லையம்மா
எல்லையை மறித்து இரசாயன வாயுவை இராணுவம் விதைத்தம்மா
வெஞ்சமரில் குதித்து வேள்விகள் செய்தவர் வீரம் மறைகிறதே
வீதிக்குவீதி வீணரின் படைகள் வெற்றியாய் உரைக்கின்றதே

பஞ்சினுமனைய பாலகர் முகங்கள் பார்வையில் கரைகிறதே
பசியும் துயிலும் பட்டெனப்பறந்து மனம் பதறியழுகின்றதே
கெஞ்சிக் கேட்டால் கேவலமாய் பிச்சைகேட்டிட மறுக்கிறதே
கேள்விகளெல்லாமே வேள்விகளாகிக் காலம் கரைகின்றதே

துஞ்சிய நிலையில் துயர்வந்து சூழ்ந்து துவம்சம் ஆடியதே
தொட்டிடத் தடையாம் இரசாயனக்குண்டு தீயாய் இறங்கியதே
அஞ்சிடாது காத்த அத்தனை வீரரின் ஆன்மாக்கள் பதறியதே
அழிப்பது ஒன்றே இலக்கெனக்கொண்ட அரசுகள் ஆளுகிறதே

குஞ்சுகளைக் கொன்று கூடுகளைப்பிய்த்த குற்றம் தெரியலைா.?
கொலைகள் புரிந்த கொள்ளையரின் கொடுமைக்கு நீதியிலையா?
விஞ்சியபடையணி வன்புணர்வுபுரிந்த வாக்குகள் பொய்த்திடுமா?
விதவைகள் அனாதைகள் விடிவியின்றியின்று வீதியில் நிற்கலாமா?

**--அம்பலவன்புவனேந்திரன்..**

# மூப்பும்... தனிமையும் !...

- கவி மீனா -

காலம் போகப் போக மனிதர்களுக்கு வயதும் போகுது வயது நிக்கச் சொன்னாலும் நிக்காது காலமும் யாருக்காகவும் நிக்காது இறுதிக்காலம் வரை கை கால் இயங்கக் கூடியதாக, சாப்பிட கூடியதாக, தானே தன் கையால் தன்னை சுத்தப் படுத்தக் கூடியதாக ஒருவன் இருக்க முடிந்தால் அதுவே பெரிய காரியம் பாருங்க.

ஓடி ஓடிச் சம்பாதிச்ச பணமும் வீட்டிலை பூட்டி வைத்திருக்கும் தங்க நகைகளும் ஆசையாக வாங்கின வீடும் ஊரிலை வாங்கி விட்ட காணிகளும் கடைசிக் காலத்துக்கு உதவாதுங்க, பெத்த பிள்ளைகள் பாசமாக இருந்தாலும் அவர்களாலும் ஆறுதலைத் தவிர நோய்கள் வந்து அவதிபடும் முதியவர்களை காப்பாற்ற இயலாது.

அதுவும் வெளிநாடுகளுக்கு வந்த புலம்பெயர் தமிழருக்குச் சொத்தைச் சேர்த்த அளவுக்கு நின்மதியைத் தேட தெரியவில்லை. வயது போய் நோய்கள் பிடித்துக் கஸ்டப்படும் போது பாங்கில் இருக்கும் பணமோ பூட்டி வைத்திருக்கும் நகைகளோ உதவாது பாருங்க! தேவையானது எல்லாம் சுகாதார உதவியாளராவும்( Pflegegrad , degree of care) பெகிண்டற்ற அவுஸ்வைஸ்சும் (Behindertenausweis, Disability card ) வயது வந்தோர் அடையாள அட்டையும் தானுங்க !ஸ்கூலில் படிச்ச சேட்டிபிக்கேற்றுகளை ( Certifictes ) பத்திரமாக வைத்த காலம் போய் கடைசியிலே இங்கை டொக்டர்மார் தரும் கடிதங்களைத்தான் பத்திரப் படுத்தி வைக்கணும்,

பாட்டுச் சீடீ ( CD ) களைச் சேர்த்த காலம் போய் எக்ஸ்றே எடுத்த சிடீ ( CD ) களைத்தான் சேர்க்க வேணும் இதுதாங்க உண்மை!இந்த நிலமை வரும்போது பட்டுச் சேலை கட்ட முடியுமா? பவுண் நகைதான் போட முடியுமா? பார்த்துப் பார்த்து கட்டின மாடி வீட்டிலை படி ஏறிப் போகதான் முட்டி வலி விடுமா?

மாயை என்ற உலகிலே நாம் மயங்கி கிடக்கும் வரை எல்லாம் தேவை தேவை என்று நேரமின்றி ஓடி உழைத்து கடைசிக் காலத்திலை காலை நீட்டிக் கொண்டு நின்மதியாக இருக்கலாம் என சொத்துச் சேர்பதும், கடைசிக் காலத்திலை காலை நீட்டக் கூட முடியாமல் முடக்கு வாதம் வந்து வதைக்கும் போதுதான் உணர முடியும் ஓய்வு இன்றி தேடிய சொத்தை அனுபவிக்க முடியாது என்பது யாருக்கும் உதவாமல் பதுக்கினோமே எனது... எனது என்று கட்டிய மனைவி பிள்ளைகளோடு கூட சண்டை போட்டோமோ

இப்ப நோயும் பிணியும் மூப்பும் தனிமையும்தானே மிச்சம் என உணரும் காலம் வரும் போது யார்தான் கூட நிப்பாரோ? சில பேருக்கு நடக்க முடியாது கை கால் இழுத்து வாயும் கோணிப் போனாலும் பவுண் மேல் உள்ள ஆசை போகலை, சிலதுகளுக்கு காம ஆசையும் போகலை எதுவுமே கூட வராது என அறிந்தும் ஏன் இந்த ஆசைகள் கடைசிவரை தீருதில்லை சில மனிதருக்கு இதைத்தான் கர்ம வினை என்பாரோ?

இருக்கும் வரை சாப்பிடத்தான் வேணும் மானத்தை காக்க ஆடைகள் அணியத்தான் வேணும் அதுக்கும் மேலே நாம பேராசைப் படக் கூடாது இருப்பதை வைத்து நின்மதியாக வாழப் பழகிக்கொள்வதே சிறப்பு சில பெண்கள் அடி உதை வாங்கினாலும் இரண்டு கிழமைக்குச் சாப்பிடாமல் போய் தனியே அண்ட கிறுவுண்டில் ( Under ground ) கிடந்தாலும் புருஷனோடு ஒட்டிக் கொண்டே பிரியாமல் இருப்பார்கள் காரணம் பாசமோ பண்பாடோ இல்லை பாருங்க!

கஸ்டப்பட்டு வீடு வீடாகப் போய் கிளீன் பண்ணிச் சேர்த்த காசிலை 40 அல்லது 50 பவுணிலை தாலிகொடியை செய்து கழுத்து வலி வந்தாலும் பரவாயில்லை எனக் கழுத்திலை போட்டு சபை சந்தியிலை அதைப் பெருமையாகக் காட்ட புருஷனோடு இருந்தால்தானே போட்டுக் கொண்டு போகலாம் என்பதுதான் முக்கிய காரணம் பாருங்க! அதே மாதிரித்தான் சில ஆண்களும் நித்தம் வீட்டிலை சண்டை போட்டாலும் போற இடங்களிலை தனக்கு ஒரு மனுசி இருக்கு குடும்பம் இருக்கு என்று காட்ட பெண்டாட்டி பக்கத்திலை போய் படத்துக்கு நிப்பதும் வாடிக்கையாச்சு, இந்த அடிமை வாழ்க்கை தேவையா?

கடைசியிலே யாருமே சேர்ந்து சாகப் போவதுமில்லை முன்னும் பின்னுமாகத்தான் கணவன் மனைவியாக வாழ்ந்தாலும் மரணம் வரும் என்பதை நினைத்தால் இந்தப் பணமும் பவுணும் தேவைக்கு மிஞ்சி சேர்பதில் பயனுமில்லை என்பது புரியும். என்னதான் அழகாக அலங்கரித்துத் திரிந்தாலும் கார் வாங்க வீடு வாங்க கல்யாணம் செய்ய என எல்லா விடயத்தையும் அழகாக நாம திட்டமிட்டுச் செயல்ப் பட்டாலும், எமது மரணச் சடங்கை யாரோதானே திட்டமிட்டுச் செயல்படட வேண்டியிருக்கும் அதை எம்மாலே தீர்மானிக்கவோ திட்டமிட்டு நடத்தவோ இயலுமா? சிந்தித்துப் பார் மனிதா?.. சிறிது சிந்தித்துப் பார் மனிதா!..

..................................................................................................................................

**பொன்மொழி...**

ஒவ்வொரு வெற்றிக்குப் பின் மட்டுமல்ல ஒரு சமுதாயத்தின் வெற்றிக்குப்பின் ஒரு குடும்பத்தின் வெற்றிக்குப் பின் ஒரு நாட்டின் வெற்றிக்குப்பின் நிச்சயமாக ஒரு பெண் இருப்பாள்...

# பசுமையான மனிதன்!..

பாலுக்கு கஷ்டம் கொடுத்தால் தயிர் ஆகிறது. தயிருக்கு கஷ்டம் கொடுத்தால் வெண்ணெய் ஆகிறது. வெண்ணெயை கொடுமை செய்தால் நெய் ஆகிறது. பாலை விட தயிர் உயர்ந்தது, தயிரைவிட வெண்ணெய் உயர்ந்தது, வெண்ணெயை விட நெய் உயர்ந்தது. இதனுடைய அர்த்தம் என்னவென்றால், அடிக்கடி கஷ்டம், சங்கடங்கள் வந்தாலும் கூட எந்த மனிதனுடைய நிறம் மாறாமல் சமூகத்தில் அவருடைய மதிப்பு அதிகரிக்கிறது. பால் ஒரு நாளைக்கு மட்டுமே பயன்படுத்த முடியும், பின் அது கெட்டுப் போய் விடும்.

பாலில் ஒரு சொட்டு மோர் விடும் போது அது தயிர் ஆகிறது. அது இன்னும் 2 நாட்களுக்கு இருக்கும்.தயிரை கடையும் போது வெண்ணெய் வருகிறது.  அது இன்னும் 3 நாட்களுக்கு இருக்கும். வெண்ணெயை கொதிக்க வைத்தால் நெய் ஆகிறது அது ஒரு போதும் வீணாவது இல்லை.ஒரே நாளில் கெட்டுப் போகும் பாலுக்குள், ஒரு போதும் கெட்டுப் போகாத நெய் ஒளிந்து இருக்கிறது.

உங்கள் மனம் கூட அளவற்ற சக்திகளால் நிரம்பியுள்ளது. அதில் கொஞ்சம் நேர்மையான எண்ணங்களைப் போடுங்கள். தனக்குத் தானே சிந்தனை செய்யுங்கள். தன்னுடைய வாழ்க்கையை இன்னும் சரி பாருங்கள். பின் அப்பொழுது பாருங்கள், நீங்கள் ஒரு பொழுதும் தோல்வியே காணாத பசுமையான, மனிதனாக இருப்பீர்கள்.

## 17ம் பக்க கணக்குப் புதிர் விடைகள்..

**1-**

| | | | | |
|---|---|---|---|---|
| 20 | 14 | 26 | 23 | 17 |
| 30 | 29 | 8 | 24 | 9 |
| 21 | 11 | 22 | 15 | 31 |
| 10 | 18 | 32 | 13 | 27 |
| 19 | 28 | 12 | 25 | 16 |

**2-**

| | | |
|---|---|---|
| 46 | 37 | 82 |
| 91 | 55 | 19 |
| 28 | 73 | 64 |

## சிரி..சிரி...சிரிப்பு!..

தபால்காரன்:- இந்தப் பார்சல் உங்களுக்குக் கொடுக்க ஐந்து கிலோமீட்டர் நடந்து வந்தேன்..
வீட்டுக்காரர்:- ஏன் தபாலில் அனுப்பி இருக்கலாமே?..

மனைவி:- ஏங்க சனிப்பெயர்ச்சிக்கும் குருப்பெயர்ச்சிக்கும் என்ன வித்தியாசம்?..
கணவன்:- நீ ஊருக்குப் போனா சனிப்பெயர்ச்சி..நீ உன் தங்கையோடு திரும்பி வந்தால் அது குருப்பெயர்ச்சி..

கந்தப்பு:- ராணிக்கும் மன்னருக்கும் ட்ரைவிங் லைசென்ஸ், பாஸ்போட் தேவையில்லை..
செல்லப்பு:- என்னிடம் ஒன்றுமே கிடையாது. பல ஆண்டுகளாக கார் ஓட்டுகிறேன் அப்ப நானும் மன்னர் பரம்பரைதானே..

சாமினா:- நாட்டு வைத்தியரைக் காதலித்தது தப்பாபோயிட்டுதா..ஏனடி?..
நர்மதா:- பீச்சில் சுண்டல் வேண்டினால் வாய்வு, கடலை வேண்டினால் பித்தம், ஐஸ்கிறீம் வேண்டினால் சளிபிடிக்கும் என அடுக்கிக்கொண்டு போறாரடி..

பேரன்:- பாட்டி இந்த பலூனை ஊதித்தாங்கோ..
பாட்டி:- இதை ஏன்டா என்னிடம் தாறாய்..
பேரன்:- அம்மா சொன்னவா நீங்க எதையும் ஊதிப் பெரிதாக்குவீங்களாம்..

கணவன்:- சேலை கட்டியிருக்கும் போது மகாலட்சுமி மாதிரி இருக்கிறாய்..
மனைவி:- யாரங்க அந்த மகாலட்சுமி?..
கணவன்:- எங்க கந்தோரில வேலை செய்கிற அழகான பெண்?..

மனைவி:- என்னங்க உங்க தலை எல்லாம் எண்ணெயாய் கிடக்கு?..
கணவன்:- ஆபிசில தலைவலி என்று டைப்பிஸ்ட் கொஞ்சநேரம் என் தோள்ள தூங்கிவிட்டாள்....

ஜெயம்:- மவுசுக்கும் கம்பியூட்டருக்கும் என்ன வித்தியாசம்?..
ரவி:- உண்மையான மவுசுக்கு வால் பின்னாடி..கம்பியூட்டர் மவுசுகு வால் முன்னாடி இருக்கும்.

# "வள்ளலார்கூறிய அற்புதமான வாழ்க்கைப் போதனை:"

இதற்கு மேல் எவரும் அறிவுரை கூற இயலாது,,.

வாழ்வென்பது உயிர் உள்ளவரை.........!!!
தேவைக்கு செலவிடு........அனுபவிக்க தகுந்தன அனுபவி......
இயன்ற வரை பிறருக்கு பொருளுதவி செய் மற்றும் ஜீவகாருண்யத்தை கடைபிடி.....இனி அநேக ஆண்டுகள் வாழப்போவதில்லை......
போகும்போது எதுவும் கொண்டு செல்லப்போவதுமில்லை......

ஆகவே.......அதிகமான சிக்கனம் அவசியமில்லை...
மடிந்த பின் என்ன நடக்கும் என்று குழம்பாதே...
உயிர் பிரிய தான் வாழ்வு......

ஒரு நாள் பிரியும்.....சுற்றம், நட்பு, செல்வம்.. எல்லாமே பிரிந்து விடும்...

உயிர் உள்ளவரை ஆரோக்கியமாக இரு......
உடல்நலம் இழந்து பணம் சேர்க்காதே.....உன் குழந்தைகளை பேணு......
அவர்களிடம் அன்பாய் இரு.......அவ்வப்போது பரிசுகள் அளி......
அவர்களிடம் அதிகம் எதிர்பாராதே........

அடிமையாகவும் ஆகாதே.........
பெற்றோர்களை மதிக்கும் குழந்தைகள் கூட,
பாசமாய் இருந்தாலும், பணி காரணமாகவோ,
சூழ்நிலை கட்டாயத்தாலோ, உன்னை கவனிக்க இயலாமல் தவிக்கலாம் புரிந்து கொள்.......!!! அதைப்போல பெற்றோரை மதிக்காத குழந்தைகள் உன் சொத்து பங்கீட்டுக்கு-சண்டை போடலாம்......

உன் சொத்தை தான் அனுபவிக்க, நீ சீக்கிரம் சாக வேண்டுமென வேண்டிக் கொள்ளலாம்..
பொறுத்துக் கொள்.. அவர்கள் உரிமையை மட்டும் அறிவர்,
கடமை, அன்பை அறியார், அவரவர் வாழ்வு, அவரவர் விதிப்படி என அறிந்துகொள்.. இருக்கும்போதே குழந்தைகளுக்கு கொடு,

ஆனால்......நிலைமையை அறிந்து...அளவோடு கொடு..எல்லாவற்றையும் தந்துவிட்டு பின்கை ஏந்தாதே,எல்லாமே இறந்த பிறகு என, உயில் எழுதி வைத்திராதே..

நீ எப்போது இறப்பாய் என - எதிர்பார்த்து காத்திருப்பர்..
எனவே கொடுப்பதை கொடுத்து விடு,
தரவேண்டியதை பிறகு கொடு..மாற்ற முடியாததை மாற்ற முனையாதே,
மற்றவர் குடும்ப நிலை கண்டு பொறாமையால் வதங்காதே.....!!!

அமைதியாக மகிழ்ச்சியோடு இரு.......

பிறரிடம் உள்ள நற்குணங்களை கண்டு பாராட்டு..
நண்பர்களிடம் அளவளாவு. நல்ல உணவு உண்டு.....
நடை பயிற்சி செய்து.....உடல் நலம் பேணி......
இறை பக்தி கொண்டு......
குடும்பத்தினர் - நண்பர்களோடு கலந்து உறவாடி மனநிறைவோடு வாழ்..

இன்னும்......

இருபது,முப்பது, நாற்பது ஆண்டுகள்..சுலபமாக ஓடிவிடும்...!!வாழ்வை கண்டு களி...!! ரசனையோடு வாழ்.....!!வாழ்க்கை வாழ்வதற்கே,....!!

-நான்கு நபர்களை புறக்கணி!
மடையன், சுயநலக்காரன், முட்டாள், ஓய்வாக இருப்பவன்
-நான்கு நபர்களுடன் தோழமை கொள்ளாதே! பொய்யன், துரோகி,பொறாமைக்காரன் ,மமதை பிடித்தவன்
-நான்கு நபர்களுடன் கடினமாக நடக்காதே! அனாதை, ஏழை, முதியவர்,நோயாளி
-நான்கு நபர்களுக்கு உனது கொடையை தடுக்காதே! மனைவி, பிள்ளைகள் குடும்பம், சேவகன்
-நான்கு விசயங்களை ஆபரணமாக அணி! பொறுமை, சாந்த குணம், அறிவு அன்பு
-நான்கு நபர்களை வெறுக்காதே! தந்தை, தாய், சகோதரன், சகோதரி
-நான்கு விசயங்களை குறை! உணவு, தூக்கம், சோம்பல், பேச்சு
-நான்கு விசயங்களை தூக்கிப்போடு! துக்கம், கவலை,இயலாமை, கஞ்சத்தனம்
-நான்கு நபர்களுடன் சேர்ந்து இரு! மனத்தூய்மை உள்ளவன், வாக்கை நிறைவேற்றுபவன், கண்ணியமானவன், உண்மையாளன்
-நான்கு விசயங்கள் செய்! தியானம் ,யோகா, நூல் வாசிப்பு உடற்பயிற்சி சேவை செய்தல்
வாழ்க்கை வளம் எழுத்தின் ஏற்றத்தில் ஐம்பதின் அறுவடை....

# இந்தியா முதலிடம்!...



அதிகரித்துவரும் உலக சனத்தொகையில் இந்தியா முதலிடம் !..
200 வருடங்களின் பின்பு இந்தியா உலகின் முதலிடம் !...
சீனாவைப் பின்தள்ளி உலக சனத்தொகையில் முன்னணி !..

ஐக்கியநாடுகள் சபை அண்மையில் வெளியிட்ட உலக மக்கள் தொகை அறிக்கையில் இந்தியா முதலாவது நாடாக இடம் பிடித்துள்ளது. கடந்த சுமார் 200 வருடங்களாக சீனாவே மக்கள் தொகையில் முன்னணி வகித்த நாடாக இருந்து வந்தது என்பது குறிப்பிடத்தக்க விடையமாகும். இன்று சீனாவை முந்தி இந்தியா 142.86 கோடி சனத்தொகையில் முதலாவது இடத்திற்கு வந்துள்ளது. சீனாவின் சனத்தொகை 142.57 கோடி பேர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் கொரோனா கால அனர்த்தம், கடும் வறட்சி, பருவமழை தவறியமை, கடும் வெப்பம் நிலவியபொழுதும் பொருளாதாரத்தில் இந்தியா முன்னேற்றம் கண்டு வந்ததுடன் சனத்தொகைப் பெருக்கத்திலும் முன்னேறியுள்ளது. இருந்தும் வறுமை, சாதிய, சமய முரண்பாடுகள், அரசியல் குழப்பங்கள் நிறையவே இருந்தாலும் சனத்தொகை வளர்ச்சி குறையவே இல்லை..இன்று இந்தியா விமானப் போக்குவரத்து, சாலைப் போக்குவரத்து, துறைமுகங்களில் ஏற்றுமதி இறக்குமதி என அனைத்துத் துறைகளும் நவீனமயப்படுத்தி பொருளாதாரத்தில் முன்னேறி வரும் நடாக வளர்ந்து வருவது சிறப்பான விடையமாகும்.

இந்தியாவின் இன்றைய இந்திய சனத்தொகை..
14 வயதுவரை - 25 வீதம்பேர்
15 - 64 வயதுவரை - 68 வீதம்பேர்
65 வயதறிகு மேற்பட்டோர் - 07 வீதம்பேர்
- அருகிலுள்ள பாக்கிஸ்தான் நாட்டின் மொத்த சனத்தொகை 23.14 கோடிபேர். ஆனால் இந்தியாவிலுள்ள ஒரு மாநிலமான உத்தரப் பிரதேசத்திலும் இதே அளவு 23.14 கோடிபேர் சனத்தொகைதான் உண்டு.
- இன்னொரு மாநிலமான தமிழ்நாட்டின் சனத்தொகை 6.6 கோடிபேர். ஆனால் அருகிலுள்ள இலங்கையின் மொத்த சனத்தொகை 2.2 கோடிபேர்தான். மூன்றில் ஒரு பங்கு சனத்தொகைதான் இலங்கையில்.
தற்போது 24.04.2023 அன்று உலக சனத்தொகையில் முதல் 10 இடங்களை வகிக்கும் நாடுகளின் பட்டியலை ஐக்கியநாடுகள் சபையின் மக்கள் தொகை அறிக்கை வெளியிட்டுள்ளது.

| நாடு | 2023 | சனத்தொகை |
|---|---|---|
| 01- இந்தியா | - | 142.61.84.986 |
| 02- சீனா | - | 142.57.37.233 |
| 03- அமெரிக்கா | - | 33.96.57.370 |
| 04- இந்தோனிஷியா | - | 27.71.09.704 |
| 05- பாக்கிஸ்தான் | - | 23.96.12.895 |
| 06- நைஜீரியா | - | 22.28.23.881 |
| 07- பிறேசில் | - | 21.61.93.024 |
| 08- பங்களாதேஷ் | - | 17.26.29.163 |
| 09- ரஷ்ஷியா | - | 14.45.36.593 |
| 10- மெக்ஸிக்கோ | - | 12.86.81.023 |

## ஏப்ரல் 24ம் (1820) ஜி.யு. போப் அவர்களின் பிறந்த நாள்

ஜி.யு.போப் அவர்கள் கனடாவில் பிறந்து கிறித்துவ சமய போதகராக தமிழ் நாட்டிற்கு வந்து 40 ஆண்டு காலம் தமிழுக்குத் தொண்டு செய்தவர்.இங்கிலாந்து பல்கலைக்கழகம் ஒன்றில் 1885 முதல் 1908 வரை தமிழ் மற்றும் தெலுங்கு கற்பிக்கும் பேராசிரியராக பணியாற்றினார்.

1886-ம் ஆண்டு திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிப்பெயர்த்தார். புறப்பொருள் வெண்பா மாலை, புறநானூறு, திருவருட்பயன் போன்ற நூ ல்களை பதிப்பித்தார். தமிழ் மீது பெரும் பற்று கொண்ட அவர் நாலடியார், திருவாசகம் ஆகியவற்றையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர். ஆங்கில மொழி இதழ்களில் சிலவற்றில் தமிழ் குறித்த ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதினார்.தனது கல்லறையில் ஒரு தமிழ் மாணவர் என்று பொறிக்கப்பட வேண்டும் என்று எழுதிய இந்தப் பெருமகன் தன் 88ஆம் அகவையில் இயற்கை எய்தினார்.

# நான்தான்!... மதவடி மயிலன்!...



நான்தான் மதவடியான் மீண்டும் வந்திருக்கிறன்.வணக்கம்!... வணக்கம்!... எல்லாரும் சுகம் என்று நினைக்க..கோதாரிப்போன கொரோனா வந்து லட்சக்கணக்கானவர்களை தின்று விழுங்கியது கவலையோடு முடிந்துவிட்டது என்று எண்ண மீண்டும் மீண்டும் புதிய கொரோனாக்கள் வந்து அச்சத்தையும் பயத்தையுமம் எற்படுத்திக் கொண்டிருக்கின்றது பாருங்கோ.. இந்தக் கவலை முடியமுன் துருக்கி-சிரியா நிலநடுக்கமும் வந்து சுமார் 50.000 பேரை கொன்றுவிட்டதை எண்ணி இந்த மயிலன் வேதனைப்பட இப்படி அடுக்கடுக்காக மனிதருக்கு ஏதோ துன்பங்கள் வந்கொண்டுதான் இருக்கின்றது. . நம்மட நாட்டில அரசியல் குழப்பங்கள் முட்டி மோதி எங்கும் எப்போதும் பிரச்சனை.. பிரச்சனை என்றே மக்கள் படும்பாடு அல்லோல கல்லோலம்தான். பாராளுமன்றக் கதிரைகளையும் உள்ளூராட்சிமன்றக் கதிரைகளையும் பிடித்து சொகுசுவாழ்வு வாழ எத்தனைப்பேர் வாக்களார்களைவிட வேட்பாளர்கள் கூடப்பேர் கண்டியளோ. அந்தளவுக்கு கதிரைச் சண்டை முற்றிவிட்டது. யாராவது நாட்டின் பொருளாதாரத்துக்கு நல்ல தீர்வை வைப்பார்கள் என்றால் இதுகிடையாது பாருங்கோவன்.

சரி..சரி..இனி விடையத்துக்கு வருவம். இண்டைக்கு கணனி, கம்பியூட்டர், கைத்தொலைபேசி, இணையம், பேஸ்புக் அது இது என்று உலகத்தில கொட்டிக்கிடக்கின்றன. நல்ல விடையங்களைப் படித்துப் பார்த்து, அறிந்து மனிதன் முன்னேறறவேண்டும் நல்லபடியாக வாழவேண்டும் என்பதற்காக இவை அனைத்தும் வந்தன. நல்ல விடையம் பாருங்கோ. ஆனால் இதை சரிவரப் பயன்படுத்துகிறவை மிகக்குறைவு. இதிலும் தமிழ் பேசுவோரை எடுத்துக் கொண்டால் அபாரமாக தொழில் நுட்பங்களில் வளர்ந்து அரிய பல சாதனைகளையும் வருவாயையும் ஈட்டினாலும் மறுபக்கத்தில் பாரிய அழிவுகளையும் சந்தித்து வருகிறார்கள்.

குரங்கின் கையில் பூமாலை கொடுத்த கதையாகத்தான் அனேகம் பேரின் வாழ்கை ஓடுகின்றது. இன்று பத்து வயதுச் சிறுவர் தொடக்கம் நூறு வயது தாத்தாவரை கைத்தொலைபேசி இல்லாதவர்களே இல்லையாம். உதாரணத்துக்கு இலங்கையின் சனத்தொகை 2.2 கோடி பேர்தான் ஆனால் இங்கு கைத்தொலை பேசி பாவிப்பவர்கள், வைத்திருப்பவர்கள் 4 கோடியைத் தாண்டிவிட்டதாம். உலகத்திலுள்ள பல நாடுகளில் இந்த நிலைமைதான் பாருங்கோ..

மயிலனான நானும் விதிவிலக்கே..எல்லாரும் இரண்டு மூன்று கைத்தொலைபேசி கொண்டு திரிகிறாங்கள் நானும் ஒரு சிமாட்போன் வேண்டி எல்லாத்தையும் கிண்டிப் படித்து ஆராய்ந்து அறிந்து பேஸ்புக், இன்ஸ்ரக்கிராம் அது இது எனக் கண்டுபிடித்து இரவிரவாக நித்திரை இல்லாமல் அதோட ஒன்றாகக் கிடந்து கண்ணும் வீங்க, மூளையும் பழுதாகி மருந்து எடுத்தாலும் படுக்கையில கிடந்தாலும் கைத்தொலைபேசி இல்லாமல் வாழமுடியாத நிலைக்கு வந்திட்டன் பாருங்கோ..என்ர மனிசியும் ஒரே பேச்சும் கண்டிப்பும்தான் என்னால் விடவில்லை. உன்னைவிட்டாலும் இதைவிடமாட்டன் என்ற அளவுக்கு இந்தக் கைபேசி என்னையும் அடிமையாக்கிப் போட்டுது பாருங்கோவன். இதால எனக்கு ஆயுள் குறையும் என்று தெரிந்துகொண்டும் அதைவிடமுடியாமல் அடிமையாகிய பல கோடி பேரில் நானும் ஒருவனாக இருப்பது ஆச்சரிமில்லைதானே.

சரி..சரி.. பேஸ்புக் கணக்கையும் திறந்து சில வேலைகளை இலகுவாகச் செய்யக்கூடியதாக இருப்பது நல்லதுதான். இப்படி எத்தனையோ நல்ல விடையங்கள் கொட்டிக்கிடக்கின்றன. அறிவியல் விடையங்கள் தொட்டு ஆன்மீக விடையங்கள் என வாழ்வின் எல்லாப் பக்கங்களும் நிறைந்து காணப்படுவது நல்ல விடையம்தான். நேரம் போவது தெரியாமல் படிக்கலாம். பலதும் பத்தையும் உடனுக்குடன் அறியலாம். முன்னேறலாம் காசும் சம்பாதிக்கலாம். இப்படி நல்ல விடையங்கள் ஏராளம் இந்த பேஸ்புக்கிலும் இருக்குது பாருங்கோ.

ஆனால் நம்மவர்கள் செய்யும் கூத்துக்களோ பல ஆயிரம். தொண்ணூறுவீதம் பேர் தவறாகத்தான் இந்தப் பேஸ் புக்கைப் பயன்படுத்துகிறார்கள் என்பதை இப்ப நான் கண்டு பிடித்துவிடடேன் .அந்தளவுக்குப் பேஸ்புக்கில் நானும் இணைந்து பல லட்சம் தமிழர்களின் கூத்துக்களையும் புரட்டுக்களையும் கண்டுகொண்டேன்!..கண்டுகொண்டேன்!..இந்தத்திருக்கூத்துகளைக்கட்டுக்கட்டாக அடுக்கலாம் பாருங்கோ எனக்குப் பட்ட சிலவற்றை உங்களோடு பகிர்ந்து கொள்ளலாம் என்று இந்த மயிலன் நினைக்கிறான்.

உதாரணத்துக்கு ஒரு அழகான பெண்ணுக்கு பிறந்தநாள் நிழற்படத்துடன் வெளியாகியிருக்கின்றது என்று வைத்துக் கொண்டால்...தெரிந்தவன் தெரியாதவன், இளசுகள் கிழடுகள் என ஆயிரக்கணக்கானோர் வாழ்த்துக் கூறுவதுடன் லைக் பண்ணுவார்கள். படத்தைப்போடுகிறவருக்கோ தனக்கு இத்தனை ஆயிரம் பேர் வாழ்த்துப் போட்டவை என்று மலைபோல சந்தோசம்தான். ஆனால் ஒருவர் அறிவியல் சார்ந்த விடையம் அல்லது நம் நாட்டைப்பற்றிய தெரியாத பல விடையங்களை எழுதினால் அதைப் படித்து அறிந்து தெரிந்து கொள்பவர்களோ ஒரு ஐந்து ஆறுபேர்தான் லைக் பண்ணுவார்கள், குறிப்பு எழுதி வாழ்த்துவார்கள். இதுதான் பேஸ் புக்.

வீட்டில் வேலைகள் இல்லாமல் இருப்பவர்களோ குறிப்பாகப்பெண்கள்

சின்னத்திரை, சினிமா, ஆட்டம்பாட்டம், அது இது என நேரத்தை வீணடிக்கிறார்கள். இதனால் குடும்பங்களில் பிளவுகள் ஏற்பட்டு விவாகரத்திலும் பல குடும்பங்கள் தடம்மாறிவிட்டன. சிறுவர்களின் எதிர்காலம் வெகுவாகப் பாதித்துள்ளன. வீட்டில் இருந்து அசையாமல் தொடர்ந்து பேஸ்புக், கணனிவலைகளில் சிக்கி நீண்ட நேரம் அமர்ந்து இருந்து பல வியாதிகளையும் வரவழைத்துக் கொண்டுள்ளதுடன் நோய்வாய்ப்பட்டு ஆயுளையும் விரைவாக முடித்துவிடும் நிலை புலம்பெயர் தேசங்களில் அதிகமாகவே காணப்படுவதை யார்தான் சிந்திகிறாங்கள் பாருங்கோ..

அடுத்தது பல எழுத்தாளர்கள், கல்வியாளர்கள், ஆய்வாளர்கள், தமிழைப் பாதுகாப்பவர்கள் என்று மேடைகளில் அடுக்கு மொழிகளில் பேசியம் எழுதியும் ஏன் பொன்மொழிகளையும் தாம் எழுதியதுபோல பேஸ்புக்குகளில் போட்டு ஆயிரக்கணக்கானோரிடம் லைக் வேண்டும் லட்சாதிபதிகளின் கூத்துக்களும் கொஞ்சமில்லை. பல ஆண்டுகளுக்கு முன்பு எழுதிய கவிதைகள், களவெடுத்த கவிதைகளை அடிக்கடி திரும்பத் திரும்பப் போட்டு லைக், வாழ்த்துப் பெறுவோர் இன்னும் பல லட்சம்பேர் பேஸ்புக்கில் பாருங்கோவன். எழுத்துக்கும் பேச்சுக்கும் நடைமுறை வாழ்க்கைக்கும் ஒரு வீதம்கூடப் பயனில்லாத இந்த எழுத்துலக ஜாம்பவான்கள் காசு செலவழிக்காமல், கஸ்ரப்படாமல் பல ஆண்டுகள் பொதுப்பணி ஆற்றாமல் ஒரு பத்து ரூபாவாவது தாய்நாட்டுத் துயருக்குக் கொடுக்காமல் இருபத்தைந்து முப்பது ஆண்டுகள் வெளிநாடுகளில் சுயநலமாக வாழ்ந்துகொண்டு பெயர் புகழுடன் தாம்பெரிய எழுத்தாளர், விமர்சகர், ஊடகர், கவிஞர், இலக்கியவாதி, சமூகப்புரட்சியாளர், சமூகச்செயற்பாட்டாளர், ஆன்மீகவாதி, கல்வி மேம்பாட்டாளர் என வாழும் பல ஆயிரம் தமிழ் வித்துவான்களையும் வித்துவ சிரோன்மணிகளையும் இந்த மயிலன் கண்டிருக்கிறான் பாருங்கோ..

இன்னும் பல பேஸ்புக் காரரைப் பார்த்தால் தனக்கு தன்மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் பாட்டன் ,பாட்டி, பூட்டன், பூட்டி, அண்ணன்,தம்பி, மச்சான், மச்சாள், மாமா, மாமி நண்பர்கள் தெரிந்தவர்கள் தெரியாதவர்கள் என அனைவரின் பிறந்தநாட்களைப் போட்டு முழுப் பேருக்கும் வாழ்த்துப் போடட்டாம். இவை மட்டுமா இறந்தவர்கள் தெரிந்தவர்கள் தெரியாதவர்கள் எல்லோருக்கும் வாழ்த்துப்போடட்டாம். இப்படித் தேவையற்ற விடையங் களைத்தான் மிக அதிகம்பேர் இந்தப் பேஸ்புக்கில் பதிவிடுகிறார்கள் பாருங்கோ?..

இன்று இவை தேவைதானா?.. நல்லதைப் பகிர்ந்து கொள்ளுங்கள். நல்லதை அறிந்துகொள்ளுங்கள் அனைத்தையும் அளவோடு திருக்குறள் போல வாழ முயற்சியுங்கள். அடுத்தமுறை இன்னும் சிலவிடையங்களுடன் இந்த மயிலன் வருவான் ..அப்ப வரட்டே!.. எல்லோரும் சகமாக இருந்தால் சந்தோசம் இந்த மயிலனுக்கு!..

# சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | |
|---|---|---|---|
| சு | ற் | று | லா |
| சை | ப | ற் | ப |
| நெ | ல் | பு | ழ |
| கூ | லி | பு | ம் |

# குறுக்கெழுத்துப்போட்டி முடிவு


| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சு | த | ந் | தி | ர | ம் | க |
| ற் | ரு | கா | ங் | க | ண் | டி |
| று | ய | ப | க | ம் | க | கா |
| லா | ம் | ர | ள் | ட | ம் | ர |
| ப | ர | த | ம் | ட் | ப | ம் |
| ட் | க | ன் | னி | வ | ப் | ட |
| டி | ப | ல் | லி | ல் | அ | க |

# சுடோக்கோ போட்டி முடிவு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | **1** | 4 | **6** | **2** | 8 | 7 | **3** | 5 |
| 2 | 8 | 3 | 5 | 1 | **7** | 9 | **6** | 4 |
| **5** | 7 | 6 | **4** | 3 | 9 | **8** | 2 | **1** |
| 7 | 3 | 5 | 9 | 6 | 1 | **4** | 8 | 2 |
| **4** | 6 | **2** | **7** | 8 | **3** | 5 | 1 | 9 |
| 1 | **9** | 8 | 2 | 4 | **5** | 3 | 7 | 6 |
| 3 | 5 | **1** | **8** | 9 | 6 | **2** | 4 | 7 |
| 6 | 2 | 7 | 3 | 5 | 4 | **1** | **9** | 8 |
| **8** | **4** | 9 | 1 | 7 | 2 | 6 | 5 | **3** |

# பூண்டில் இத்தனை சத்துக்களா...





உலகெங்கிலும் உள்ள பல உணவு வகைகளில் சேர்க்கப்படும் பூண்டில் பல அத்தியாவசிய ஊட்டச்சத்துக்கள் நிறைந்துள்ளன. பூண்டு அதன் வாசனை மற்றும் சுவைக்கு பெயர் பெற்றது. பூண்டை உட்கொள்வதால் உடலுக்கு பல நன்மைகள் கிடைக்கின்றன.

உயர் இரத்த அழுத்தம், கொலஸ்ட்ரால் மற்றும் நோய்த்தொற்றுகள் போன்ற பல்வேறு உடல்நலப் பிரச்சனைகளை நீக்குவதற்கு இது உதவியாக இருக்கும். பூண்டு பெரும்பாலும் பாரம்பரிய மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகிறது. இதை பச்சையாக சாப்பிடலாம் அல்லது உணவுகளில் சேர்த்தும் சாப்பிடலாம்.

**பூண்டு சாப்பிடுவதால் ஏற்படும் நன்மைகள்**

நோயெதிர்ப்பு மண்டலத்தை பலப்படுத்துகிறது. பூண்டில் அல்லிசின் போன்ற சேர்மங்கள் உள்ளன. இது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும், தொற்றுநோய்களை எதிர்த்துப் போராடவும் உதவும்.

**இரத்த அழுத்தம் கட்டுக்குள் இருக்கும்:**

பூண்டு இரத்த அழுத்தத்தில் நல்ல விளைவைக் கொண்டிருப்பதாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இது உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்களின் இரத்த அழுத்தத்தைக் குறைக்க உதவுகிறது மற்றும் இதய நோயால் பாதிக்கப்படுபவர்களுக்கு ஏற்படக்கூடிய அபாயத்தைக் குறைக்கிறது.

**கொலஸ்ட்ரால் அளவு கட்டுக்குள் இருக்கும்:**

பூண்டு கெட்ட கொழுப்பைக் குறைத்து நல்ல கொழுப்பை அதிகரிக்கிறது. மேலும் இது கொலஸ்ட்ரால் அளவை கட்டுக்குள் வைக்கிறது.

**அழற்சி எதிர்ப்பு பண்புகள்:**

பூண்டில் அழற்சி எதிர்ப்பு பண்புகளைக் கொண்ட கலவைகள் உள்ளன.

இது உடலில் ஏற்படும் வீக்கத்தைக் குறைப்பதோடு, மூட்டுவலி போன்ற பிரச்சனைகளுக்கும் உதவியாக இருக்கும்.

**புற்றுநோயின் அபாயத்தைக் குறைக்கிறது:**

சில ஆய்வுகள் பூண்டு வயிறு மற்றும் பெருங்குடல் புற்றுநோய் உள்ளிட்ட சில புற்றுநோய்களின் அபாயத்தைக் குறைக்கும் என்று நிரூபித்துள்ளன.

**இதய ஆரோக்கியம்:**

இதயத்தை ஆரோக்கியமாக வைத்திருக்க பூண்டு உதவுகிறது. பூண்டு உயர் இரத்த அழுத்தத்தைக் குறைக்கவும், கெட்ட கொழுப்பின் அளவைக் குறைக்கவும், இரத்த ஓட்டத்தை மேம்படுத்தவும் உதவும்.

**உடல் எடையை குறைக்க பூண்டு எவ்வாறு உதவுகிறது?**

காலையில் வெறும் வயிற்றில் ஒரு சில பூண்டு பற்களை சாப்பிட்டு வந்தால் உடலில் தேங்கியிருக்கும் கொழுப்பு கரைந்து, உடல் எடை குறையும். பூண்டில் உள்ள பூஸ்டிங் லெவல் கலோரிகளை வேகமாக எரிக்க உதவுகிறது. இதை உட்கொள்வதன் மூலம், நீண்ட நேரம் வயிறு நிரம்பியிருப்பதை போன்ற உணர்வு ஏற்படும். அதனால் அதிகமாக சாப்பிடுவதை தவிர்க்கலாம்.

.....................................................................................................................................






-சர்க்கரை நோயானது ஆரோக்கியமற்ற வாழ்க்கை முறை மற்றும் உணவுப் பழக்கங்களால் வரக்கூடியது.

-சர்க்கரை நோயை கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளாவிட்டால், அது உயிருக்கே ஆபத்தை உண்டாக்கிவிடும்.

-எனவே சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்த வேண்டியது மிகவும் அவசியம். குறிப்பாக ஒருசில பானங்களை அன்றாட உணவில் சேர்த்து வந்தால், இரத்த சர்க்கரை அளவைக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளலாம்.

-கீழே இரத்த சர்க்கரை அளவைக் குறைக்கும் சில அற்புதமான பானங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒன்றை தினமும் குடித்து வந்தாலே இரத்த சர்க்கரை அளவை எகிறாமல் பார்த்துக் கொள்ளலாம்.
-சுகர் நோயாளிகளே...இரத்த சர்க்கரை அளவு எகிறாமல் இருக்க தினமும் காலையில இத குடிங்க! ’ Drink Recipes Blood Sugar Levels

**-துளசி நீர்**

துளசி மருத்துவ குணம் நிறைந்த மூலிகைச் செடி. இந்தத் துளசியானது ஹைப்போகிளைசீமிக் பண்புகளை கொண்டுள்ளதால், இது உடலில் இரத்த சர்க்கரை அளவைப் பராமரிக்க உதவுகிறது. அதற்கு துளசியை தினமும் மென்று சாப்பிடலாம்.
இல்லாவிட்டால் ஒரு டம்ளர் நீரில் 6-8 துளசி இலைகளை சேர்த்து கொதிக்க வைத்து, அந்நீரைக் குடிக்கலாம்.

**-இஞ்சி நீர்**

இஞ்சி அன்றாட சமையலில் பயன்படுத்தப்பட்டு வரும் ஒரு மருத்துவ குணம் வாய்ந்த பொருள். இதில் ஜிங்க் உள்ளது.
இது இன்சுலின் உற்பத்தியை ஊக்குவிக்கிறது. மேலும் இதில்ஆன்டி-
ஆக்ஸிடன்ட்டுகள் மற்றும் அழற்சி எதிர்ப்பு பண்புகளும் உள்ளது.
ஆகவே இஞ்சியை ஒரு டம்ளர் நீரில் தட்டிப் போட்டு கொதிக்க வைத்து இறக்கி வடிகட்டி குடித்து வருவது, சர்க்கரை நோயாளிகளுக்கு மிகவும் நல்லது.
சுகர் நோயாளிகளே...இரத்த சர்க்கரை அளவு எகிறாமல் இருக்க தினமும் காலையில இத குடிங்க! ’ Drink Recipes Blood Sugar Levels

**-வெந்தய நீர்**

வெந்தயம் இன்சுலின் எதிர்ப்பை சமாளிக்க உதவுகிறது. எனவே இது சர்க்கரை நோயாளிகளுக்கான மிகச்சிறந்த உணவுப் பொருள்.
சிறிது வெந்தயத்தை இரவு தூங்கும் முன் நீரில் ஊற வைத்து, மறுநாள் காலையில் அந்நீரைக் கொதிக்க வைத்து வடிகட்டி வெறும் வயிற்றில் குடிக்க வேண்டும். இதனால் இரத்த சர்க்கரை அளவு கட்டுப்பாட்டில் இருக்கும்.
சுகர் நோயாளிகளே...இரத்த சர்க்கரை அளவு எகிறாமல் இருக்க தினமும் காலையில இத குடிங்க! ’ Drink Recipes Blood Sugar Levels

**-பட்டை நீர்**

பட்டை கணையத்திற்கு இன்சுலினை வெளியிட உதவி புரிந்து, உடலில் குளுக்கோஸ் செயல்முறையை ஊக்குவிக்கிறது.
எனவே ஒரு டீஸ்பூன் பட்டைத் தூளை ஒரு டம்ளர் நீரில் போட்டு இரவு முழுவதும் ஊற வைத்து, மறுநாள் காலையில் எழுந்ததும் வெறும் வயிற்றில் குடிக்க வேண்டும்.

# பேரிச்சம் பழத்தை நீரழிவு நோயாளிகள் சாப்பிடலாமா?

பேரிச்சம் பழங்களில் நார்ச்சத்து மிகவும் அதிகமாக இருப்பதாலும், அதன் கிளைசீமிக் இன்டக்ஸ் குறைவாக இருப்பதாலும் சர்க்கரை நோயாளிகள் ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று பழங்களை சாப்பிடலாம் என பரிந்துரைக்கப்படுகின்றது.

பேரிச்சம் பழங்களில் சத்துக்கள் நிறைந்திருந்தாலும், கலோரிகள் மற்றும் கார்போஹைட்ரேட் அதிகமாகவும் உள்ளது.

பேரிச்சம் பழத்தை நீரிழிவு நோயாளிகள் சாப்பிடலாமா? ' Can Diabetics Eat Dates Lifestyle Health

எனவே நீரிழிவு நோயாளிகள் பேரிச்சம் பழங்களை அதிகமான அளவு உட்கொள்ளக் கூடாது.

எவ்வளவு உண்ணலாம்?


முறையான உணவுப்பழக்கத்துடன் ஒரு நாளைக்கு இரண்டு பேரிட்சைகளை சாப்பிடலாம். இதிலிருக்கும் அதிக நார்ச்சத்து சர்க்கரை நோயாளிகளுக்கு கண்டிப்பாக தேவை.

பேரிச்சம் பழத்தை நீரிழிவு நோயாளிகள் சாப்பிடலாமா? ' Can Diabetics Eat Dates Lifestyle Health

100 கிராம் பேரிச்சம் பழத்தில் கிட்டத்தட்ட 314 கலோரிகள் இருக்கிறது. இது மிக அதிகம்.


அதோடு வைட்டமின் ஏ, கே, பி, மக்னீசியம், இரும்பு, தாமிரம், பொட்டாசியம், மாங்கனிசு போன்றவை உள்ளன.

இதன் காரணமாக நீரிழிவு நோயாளிகள் ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று பழங்களை சாப்பிடலாம்.



# தொழிலாளர் தினம்!...

- செல்வி சாமினா சிவதாசன் -
எசன் - யோமனி




பெரும்பாலான உலக நாடுகளில் வைகாசி மாதம் முதலாம் திகதி தொழிலாளர்களுக்கு மரியாதை கொடுப்பதற்கும் அவர்களின் முக்கியத்துவத்தை உலகிற்கு எடுத்துக் காட்டும் முகமாக அரச விடுமுறை தினமாகக் கொண்டாடப்படுவதே தொழிலாளர் தினமாகும். இதனை உழைப்பாளர் தினம், மேதினம், சர்வதேச தொழிலாளர் தினம் எனப்பலவிதமாகக் குறிப்பிடுவார்கள். அதிகமான நாடுகளில் இத்திமானது அரசவிடுமுறை தினமாகப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. இதற்கு மாறாக கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளும் வேறு சில நாடுகளிலும் புரட்டாதி மாதத்தின் முதற் திங்கட்கிழமையே தொழிலாளர் தினமாகக் குறிப்பிடப்படுகின்றது.

தொழிலாளர் தினமானது தொழிலாளர்களின் திருப்தியற்ற நிலையால் உருவாகியது. 18ம் நூற்றாண்டின் இறுதியிலும் 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் வளர்ச்சியடைந்த நாடுகளில் உழைப்பாளர்கள் ஒரு நாள் 12 தொடக்கம் 18 மணித்தியாலங்கள் பணிபுரிய வேண்டும் என நினைத்து நடாத்தப்பட்ட போராட்டங்களே இத்தினம் உருவானதற்கான முக்கிய காரணமாக அமைந்தது. 1865ம் ஆண்டு அமெரிக்க நாட்டில் நடைபெற்ற உள்நாட்டுப்போர் முடிவை நோக்கிச் சென்றது. அக்காலத்தில் முதன் முதலில் தொழிற் சங்கங்கள் எட்டு மணி நேர வேலை நாளை அறிமுகப் படுத்துவதற்கான கோரிக்கையை முன் வைத்தனர். பல ஆர்பாட்டங்களுக்கு மத்தியிலும் ஆரம்பத்தில் எட்டுமணி நேரவேலை என்பதை அமுல்ப்படுத்த முடியவில்லை. இதனால் வைகாசி மாதம் 1ம் திகதி 1886ம் ஆண்டு பணியாளர்கள் பல நாட்கள் நீடித்த ஒரு பொது வேலை நிறுத்தத்தை நடாத்த முடிவு செய்தனர்.

அந்த நாட்களில் பல ஆர்பாட்டக்காரர்களுடன் கூடிய வன்முறைகள் நடத்தப்பட்டன. வேலை நிறுத்தத்தின் மூன்றாம் நாள் அன்று சிக்காக்கோவில் உள்ள ஹேமார்கட் சதுக்கத்தில் (Chicago Haymarket Square) ஒரு வன்முறைச் சம்பவம் இடம்பெற்றது. அதில் தொழிலாளர்கள் காவல்துறை அதிகாரிகள் மீது குண்டு வீசியபோது குழப்பநிலை உருவாகியது. துப்பாக்கிச்சூடும்

நடத்தப்பட்டது. இத்தினத்தின் முடிவில் ஏழு காவல்த்துறை அதிகாரிகள் மற்றும் நான்கு தொழிலாளர்கள் இறந்தார்கள். மேலும் பலர் காயமடைந்தனர். இருப்பினும் இது சில கோரிக்கைகளை நிறைவேற்ற வழிவகுத்தது. சில ஆண்டுகளுக்குப்பின் 1ம்திகதி வைகாசி 1890ல் முதன்முதல் அமெரிக்கர்களுக்கு 8 மணிநேரவேலை நாளாக அமுல்ப்படுத்தப்பட்டது.

அக்காலங்களில் யேர்மனியில் தொழிலாளர்கள் ஆர்பாட்டங்கள் செய்ய தடை விதிக்கப்பட்டிருந்தாலும் தமது உரிமைகளுக்காகப் போராட்டங்களை நடாத்தினர். SPD அரச கட்சியானது 01.05.1885 முதல் இத்தினத்தை ”தொழிலாளர் தினமாக” (Tag der Arbeterbewgung) பிரகடனப்படுத்தியது. அன்றிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் மே 1ம் திகதியன்று வேலை நிறுத்தங்கள் நடாத்தப்பட்டன. இதன் காரணமாக முதலாளிகள் தமது தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்கவில்லை அல்லது வேலையிலிருந்து நிறுத்தினார்கள். அதே நேரத்தில் தொழிலாளர்களுக்கும் இடையிலான கருத்து வேறுபாடுகள் பொங்கி எழுந்தன.1919ஆம் ஆண்டில் வைமர் குடியரசு (Weimer Republik) அந்த நாளை யேர்மனி முழுவதும் ஒரு பொது விடுமுறை தினமாக அறிவித்தது.

இருப்பினும் அடுத்த வருடம் இந்நாளன்று பொதுவிடுமுறையாக இருக்கவில்லை. பின்னர் 1933ல் தேசிய சோஸலிஸ்டுக்கள் (Nationalsozilisten) மீண்டும் மே 1ஆம் திகதியை தொழிலாளர் தினமாக அறிமுகப்படுத்தினர். ஆனால் கோரிக்கைகளை மாற்றி இவர்களது அணிவகுப்புக்களாக இத்தினத்தைப் பயன்படுத்தினார்கள். மேற்கு யேர்மனிக்கும் கிழக்கு யேர்மனிக்கும் இடையில் வேறுபாடுகள் இருந்தாலும் 2ம் உலகப்போருக்குப் பின்னரே மே தினம் ஒரு அரச விடுமுறையாக மீண்டும் யேர்மனியில் அறிமுகப்படுத்தப்பட்டது. அக்காலத்தில் வெடித்த வன்முறைகள் அடக்கப்பட்டாலும் இன்றுவரை இத்தினம் தொழிலாளர்களுக்கும் அவர்களது உரிமைகளுக்குமான ஒரு முக்கிய நாளாகவே கருதப்படுகின்றது.

தொழிலாளர்கள் உழைக்காவிட்டால் நாட்டின் பொருளாதாரம் முடங்கி இந்த உலகமே இயங்காது.. ஏனெனில் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி அந்நாட்டின் உழைக்கும் வர்க்கத்தின் கையிலேயே தங்கியுள்ளது. இதனாலேயே தொழிலாளர்கள் நாட்டின் முதுகெலும்பாகக் கருதப்படுகிறார்கள். எனவே பல துன்பங்களுக்கும் தடைகளிற்கும் மத்தியில் உருவாகிய தொழிலாளர் தினம் இன்று உலகெங்கும் பல கோணத்தில், பல்வேறுபட்ட நாட்களில் கொண்டாடப்பட்டாலும் தொழிலாளர்களின் மகத்துவத்தை வெளிப்படுத்தும் தினமாகவே கடைக்கிடிக்கப்படுகின்றது.

”உழைப்பால் உயர்வோம் உழைப்பாளர்களைப் போற்றுவோம்”

# மூத்த ஊடகவியலாளர் மாணிக்கவாசகம் காலமானர்!




வவுனியாவை சேர்ந்த மூத்த ஊடகவியலாளரான பி. மாணிக்கவாசகம12.04.2023 புதன்கிழமை காலமானார். வீரகேசரி உள்ளிட்ட பல ஊடகங்களில் பணியாற்றி வந்தவராவர். பல நெருக்கடியான சந்தர்ப்பங்களில் துணிச்சலுடன் செய்தி அறிக்கையிட்டவர். இவரது ஊடக சேவையை கௌரவிக்கும் முகமாக கடந்த 2019ஆம் ஆண்டு யாழ். ஊடக அமையம் விருது வழங்கி கௌரவித்து இருந்தது.

தனது நீண்டகால ஊடக பணியில் பல பாராட்டுக்களையும், விருதுகளையும், கௌரவிப்புக்களையும் பெற்றுக்கொண்ட பி. மாணிக்கவாசகம் வவுனியாவின் அடையாளமாக திகழ்ந்தார் என்றாலும் மிகையாகாது.அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனியா வைரவபுளியங்குளம் பகுதியிலுள்ள இல்லத்தில் நடைபெற்றது.

ஜனநாயகத்தின் நான்காவது தூணாக கருதப்படும் ஊடகப் பரப்பில் இருந்து பேனா முனையின் துணையோடு ஜனநாயகத்துக்கான போராட்டங்களில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட பொ.மாணிக்கவாசகம் என்ற ஊடக ஆளுமையை நாம் இழந்துவிட்டோமென யாழ்.ஊடக அமையம் தனது அஞ்சலிக்குறிப்பில் தெரிவித்துள்ளது.

யுத்த காலங்களிலும் யுத்தத்திற்குப் பின்னரான காலங்களிலும் செய்திகளை நடுநிலை தன்மையோடு, உள்ளதை உள்ளதாகச் சொல்லி, தமிழ் மக்களின் அவலங்களை உலகுக்கு வெளிப்படுத்தியவர் மாணிக்கவாசகமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இலங்கையின் சிரேஷ்ட ஊடகவியலாளர்களில் ஒருவரான பொன்னையா மாணிக்கவாசகம் மரணிக்கும்போது அவருக்கு 76 வயதாகும்.

ரொய்ட்டர்ஸ், பிபிசி, வீரகேசரி உள்ளிட்ட ஊடகங்களில் பணியாற்றிய இவர், நாட்டின் யுத்த காலப் பகுதியில் தனது உயிரையும் பொருட்படுத்தாமல் செய்தி சேகரித்து, அதனை ஊடகங்களில் கொண்டு சேர்ப்பதில் ஈடுபட்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. மிக நீண்ட காலமாக பிபிசியின் தமிழோசையில் இலங்கையிலிருந்து செய்திகளை வழங்கி வந்தார்.

கடந்த வருடம் (2022) டிசம்பர் மாதம் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் மற்றும் அதனுடன் இணைந்த தொழிற்சங்கங்கள், இலங்கை பத்திரிகை சங்கம், சுதந்திர ஊடக இயக்கம், இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர்கள் சங்கம் ஆகியவற்றுடன் இணைந்து இலங்கையின் ஆசிரியர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட விருது வழங்கும் நிகழ்வில் பொன்னையா மாணிக்கவாசகம் வாழ்நாள் சாதனையாளர் விருதை பெற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடத்தின் மாற்றுத்திறனாளிகளுக்கான சர்வதேச தினமாகிய டிசம்பர் 3 ஆம் திகதி மன்னார் மாந்தை மேற்கு மாற்றுத்தினாளிகள் அமைப்பினரால் அதன் பணிப்பாளர் வெற்றிச்செல்வி சந்திரகலா தலைமையில் இவரால் எழுதப்பட்ட “மாற்றத்தை நாடும் மாற்றுத்திறனாளிகள்“ நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான “கருவி“ அமைப்பின் முக்கிய பங்களிப்புடன் அந்நூலின் அறிமுக விழா நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

.......................................................................................................................................

## சிந்தனைத் துளிகள்...

1- வெற்றியைவிடத் தோல்விக்குப் பலம்அதிகம். வெற்றி சிரித்து மகிழ வைக்கும். தோல்வி சிந்தித்து வாழ வைக்கும்.

2- நீங்கள் செய்யும் அளவுக்கு மீறிய நல்ல விடையங்கள் கூட, பல சந்தர்ப்பங்களில் கெட்ட விடயங்களாகிவிடுகின்றன.

3- வெற்றியடைவது எப்படி என்று அதடிக்கொண்டிருப்பதைவிட நீ எப்படித் தோற்றாய் என ஆராய்ந்துபார். வெற்றி தானாகத் தேடிவரும்.

4- வெற்றிபெறுவது மிகவும் எளிதானதே என்ன செய்கிறாய் என்பதனை அறிந்து செய். செய்வதை விரும்பிச்செய் செய்வதையே நம்பிக்கையோடு செய்.

**செல்வி நி பி விதுசா**
**“நல்லாயன்” சிறுவர் இல்லம் - மாங்குளம்**




## அஞ்சலிகள்!..

நெடுந்தீவில் ஐந்து முதியவர்களை வெட்டிப் படுகொலை செய்ததுடன் 100 வயதான மூதாட்டிக்கு கடும் காயங்களை ஏற்படுத்தி, தங்க நகைகளை கொள்ளையடித்த சம்பவம் சனிக்கிழமை 22.4.2023 நெடுந்தீவு இறங்குதுறைக்கருகிலுள்ள வீடொன்றில் நடைபெற்றுள்ளது. , 100 வயதான மூதாட்டி படுகாயங்களுடன் மீட்கப்பட்டு , யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இந்த நபர் வெளிநாடொன்றில் வசித்து வந்ததுடன் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் அந்நாட்டிலிருந்து , இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டவரெனவும் , அவரிடமிருந்து கொலையானவர்களின் உடைமைகள் மற்றும் நகைகள் உள்ளிட்டவை மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார்தெரிவித்தனர்.

இவர்களில் சிலர் எனக்குத் தெரிந்தவர்கள். கொலை நடைபெற்ற வீட்டில் சுமார் 40 வருடங்களுக்கு முன்னர் நானும் கனடாவில் வசிக்கும் எனது நண்பரும் சென்று தங்கி வந்திருக்கின்றோம். அந்த வீட்டுக்காரப் பெண்மணியும் இச்சம்பவத்தில் இறந்துள்ளார். துயர்மிக்க இக் கொலைச் சம்பவத்தால் துயருற்றிருக்கும் அனைவருக்கும் எங்கள் ஆறுதல். ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!... - ஆசிரியர் -

# பேராசான் மு நித்தியானந்தனின் பவளவிழா (75)






லண்டனில் ஒரே மேடையில் 5 நூல்களின் வெளியீட்டு விழா
பிறந்தநாளில் சிறப்பான வெளியீட்டு விழா 01.04.2023

லண்டனில் வசித்துவருபவர்தான் பேராசான் திரு மு நித்தியானந்தன் அவர்கள். இலக்கியத்தின் முன்னோடி, எழுத்தாளர், ஆய்வறிஞராகத் திகழ்பவரின் ஐந்து நூல்களின் வெளியீட்டு விழா (01.04.2023) அவரது பிறந்தநாளில் லண்டனில் நடைபெற்றது மகிழ்ச்சிக்குரிய விடையமாகும்.

1- ""சிறுமை கண்டு பொங்குதல்"" (மலையக இலக்கியம்)
2- ""ஆடல் எங்கேயோ அங்கே""
3- ""மலையகச் சுடர் மணிகள்""
4- ""பெருநதியின் பேரோசை"
5- ""நித்தியம்"" பவளவிழா மலர்

ஆகிய நூல்களின் வெளியீட்டுவிழா ஒரே மேடையில் ஒரே நாளில் லண்டனில்.. அதாவது அவரது பிறந்த நாளான சித்திரை 1ம் திகதி வெளியீடு செய்யப்பட்டது. அவரது பவளவிழாவினை முன்னிட்டு நடைபெறும் விழாவானது ஆழமும் அயராத தகவலும் தேடலும் அவருக்கே உரித்தான அழகிய நடையும் அவருக்கென உலகெங்கும் பெரும் வாசகர் பரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்களின் முன்னாள் விரிவுரையாளரான திரு நித்தி அவர்கள் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் இலக்கிய உலகில் தனக்கென தனி இடம் பிடித்திருக்கிறார். எழுத்துத்துறை மட்டுமல்ல விமர்சனத்துறையிலும் சிறந்து விளங்குகின்றார். கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக லண்டன் ஐ.பி.சி தொலைக்காட்சியில் நூற்றுக்கணக்கான எழுத்தாளர்களின் நூல்களை விமர்சனம் செய்திருக்கிறார்.

ஐரோப்பாவில் நடைபெற்றுவரும் இலக்கியச் சந்திப்புக்கள், மற்றும் நூல்கள், சஞ்சிகைகள், இலக்கியக் கூட்டங்கள்,விழாக்கள் என்றால் நித்தி அவர்களின் சொற்பொழிவு நிட்சயம் இருந்தே ஆகும். அந்தளவுக்கு தமிழர் புலம்பெயர் நாடுகளிலும் இலங்கையிலும் சிறப்புமிக்க ஆசானாகவே திகழ்கின்றார். இவரின் நீண்டகால தமிழ், எழுத்து, விமர்சனம், இலக்கிய ஆளுமையைச் சிறப்பிக்கும் வகையில் அவரது பவளவிழாவில் ”நித்தியம்” என்னும் பெயர்கொண்ட சிறுப்பு மலரும் ” வெளியிடப்பட்டது. ”நித்தி என்னும் பேராசான்” என்னும் ஆவணப்படமும் திரையிடப்பட்டு அவருக்கு மேலும் பெருமை சேர்த்திருக்கின்றது.

இந்த விழாவில் இலங்கையிலிருந்து ” வீரகேசரி ” வாரவெளியீட்டு பத்திரிகையின் பிரதம ஆசிரியர் திரு ஸ்ரீகஜன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார் நூல்களின் ஆய்வுரைகள், பாராட்டுரைகள், கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. பேராசான் நித்தி அவர்களுக்கு பவளவிழா வாழ்த்துக்களையும் தெரிவித்து இன்னும்... பல படைப்புகளை வெளிக்கொண்டுவர நீண்ட ஆயுள் பெற்று வாழ்க எனப் பாராட்டி வாழ்த்துகின்றோம்!..

ஆசிரியர் - மண் சஞ்சிகை

## சில குறிப்புகள்..

பதுளையைப் பிறப்பிடமாகக்கொண்ட முத்தையாபிள்ளை நித்தியானந்தன் (1948) பதுளை ஊவாக் கல்லூரியிலிருந்து கொழும்புப் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாகி, பொருளியலில் சிறப்புப் பட்டதாரியாக வெளியேறினார். லேக்ஹவுஸ் நிறுவனத்தின் “தினகரன்“ நாளிதழில் துணை ஆசிரியராகப் பணியாற்றினார். பின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொருளியல் துறையில் விரிவுரையாளரானார். 1983 இனவன்முறையைத் தொடர்ந்து தமிழ்நாடு சென்று, அங்கு “க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி“த் திட்டத்தில் இணைந்து பணியாற்றினார். அத்துடன், கோத்தகிரியில் இர.சிவலிங்கத்தின் தலைமையில் அமைந்திருந்த தாயகம் திரும்பிய தமிழர்களின் அமைப்பிலும் மிகுந்த ஈடுபாடு காட்டினார்.

பின்னர் லண்டனுக்குப் புலம்பெயர்ந்து, சில காலம் ஹேய்சில் பொருளியல் ஆசிரியராகப் பணியாற்றி, பின்னர் தீபம் தொலைக்காட்சியின் செய்திப் பிரிவின் தலைவராகச் சேவையாற்றினார். தெளிவத்தை ஜோசப், என்.எஸ்.எம்.ராமையா, சி.வி.வேலுப்பிள்ளை, சாரல்நாடன், மாத்தளை வடிவேலன் ஆகிய மலையக எழுத்தாளர்களின் நூல்களை வெளிக்கொணர்வதில் முன்னின்று உழைத்திருக்கிறார். மலையகத் தமிழர்கள் மத்தியில் எழுந்த முதல் எழுத்து முயற்சிகளை ஆராய்ந்து இவர் எழுதிய “கூலித்தமிழ் “ (2014) கனடாவின் இலக்கியத் தோட்டத்தின் சிறந்த அபுனைவு நூல் விருதினைப்பெற்றது . லண்டனில் துணைவி மீனாள், தென்றல், தேனுகா ஆகிய புதல்விகளுடன் வாழ்ந்து வருகிறார்.

இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் பொருளியல் விரிவுரையாளரான மு. நித்தியானந்தன், 90களின் ஆரம்பத்தில் ஐரோப்பாவிற்குப் புலம்பெயர்ந்து, பாரிசில் வாழ்ந்தவர் ஜேர்மன் மற்றும் ஒல்லாந்து நாடுகளிலும் சில காலங்களைக் கழித்தவர். ஐரோப்பாவில் நடைபெற்ற இலக்கியச் சந்திப்புக்கள் பலவற்றில் முக்கிய பங்காற்றியுள்ளார். அதுபோலவே, ஐரோப்பிய சஞ்சிகைகள் சிலவற்றிலும் அவரது பங்களிப்பு உண்டு.

90களின் பிற்பகுதியில் லண்டன் வந்தடைந்த இவர், சிலகாலம் பொருளியல் ஆசிரியராகவும், பின்னர் லண்டன் தீபம் தொலைக்காட்சியில் செய்திகள் பிரிவின் பொறுப்பாசிரயாரகவும் பணிபுரிந்தார். ஆழ்ந்து பரந்த வாசிப்புக் கொண்ட இவர், தீபம் தொலைக்காட்சியில் வாரமொருமுறை நிகழும் இலக்கிய நேரம் பகுதியில் சுராவின் காற்றில் கலந்த பேரோசை உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட சீரிய நூல்கள் பற்றிய விமர்சனங்களைச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவற்றுள் பல நூல்களை ஏறத்தாழ ஒரு மணி நேரம் விமர்சனம் செய்துள்ளமையும், ஒருசில நூல்களை (Argumentative Indian by Amartya Sen மற்றும் A Passage to Africa by George Alagiah) 3, 4 வாரங்களுக்கு ஒதுக்கி, பகுதிபகுதியாக பலமணி நேரம் விமர்சனம் செய்தமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

.......................................................................................................................................................

இருபது ஆண்டுகளுக்கு முன்னர், யாழ் பல்கலைக்கழகத்தில் பிடித்தமான விரிவுரையாளர் பதவி, வசதியான ஊதியம், ஒளிமயம் காட்டும் எதிர்காலம் என்ற நிலையில், குடை நிழல் அமர்ந்து குஞ்சரம் ஊர்ந்தவர் நித்தி!இரக்க சுபாவமும் மானுடநேயமும் ஓடி உதவும் பண்பும் அவருடைய இயல்பான அணிகலன்கள்! அவருடைய அமைதி வாழ்க்கைக்கு எமனாக இவையே வந்தமைந்தன என்று துணிந்து கூறலாம்!

ஒரு குரூர நெருப்புக் கடலை, எதுவித தயக்கமும் இன்றி, முக்கி முக்குளித்து நீந்திக் கடந்தவராக இன்று நம் முன் நித்தி நிற்கிறார்.லண்டன் அகதிக் கூண்டை வந்தடைந்த மு. நித்தி, மண்ணிலே தாம் சுகித்த வளமான வசதி-வாழ்க்கை பறிக்கப்பட்டமையையொட்டி ஏங்கி ஒடுங்கி ஒதுங்கவில்லை. யார் மீதும் பழி சுமத்தவுமில்லை.

மண்ணிலும் புலத்திலும் தமிழ்நாட்டிலும் வாழும் கலை இலக்கிய ஆளுமைகளுடன் ஆக்கத் தொடர்புகளை நிறுவி, மொழிவழி ஒன்றிணைப்பை முன்னெடுக்கும் ஒரு கலைப்பாலமாக, நித்தி இன்று திகழ்கிறார். தத்தமக்குரிய ஆக்கப்பணிகளை மறந்து, உறைநிலைப் படுக்கையில் இருக்கும் நம் இன முனைப்பாளர்களின் முன்னிலையில் உயிர் மீண்ட, உயிர்க் கூர்ப்பாளன் மூனா நித்தியானந்தனை அவனுடைய பவளவிழாவில் கூடி, வாழ்த்துப் பொங்கல் குரவையிட்டு வாழ்த்துவோமா?

**ஈழக்கூத்தன் - ஏ.சீ.தாசீசியஸ்**



## ஜேர்மனியின் உயரிய விருதைப் பெற்ற ஏஞ்சலா மெர்க்கல்!

ஜேர்மனியின் முன்னாள் சேன்ஸலரான ஏஞ்சலா மெர்க்கல் நாட்டின் உயரிய விருதைப் பெற்றார்.

### உயரிய விருது...

தேசத்திற்கான தனது சிறப்பான சேவைக்காக ஜேர்மனி முன்னாள் ஏஞ்சலா மெர்க்கல், நாட்டின் மிக உயந்த தகுதிக்கான புசயனெ ஊசழளள விருதைப் பெற்றார். இதன்மூலம் ஜேர்மனியின் மிக உயரிய விருதை வென்ற மூன்றாவது அரசியல்வாதி என்ற பெருமையை அவர் பெற்றார்.

ஜனாதிபதி மாளிகையான Schloss Bellevueயில் ஃபிராங்க்-வால்டர் ஸ்டெய்ன்மியர் முன்னாள் சேன்ஸலருக்கு Grand Crossஐ வழங்கினார்.
அத்துடன் மெர்க்கலின் தலைமைத்துவத்தையும், அவரது 16 ஆண்டுகால பதவியியில் பல நெருக்கடிகளை சமாளித்து வெற்றி பெற்றதையும் அவர் பாராட்டினார்.

மேலும் பேசிய ஸ்டெய்ன்மியர், “உங்களை குறைத்து மதிப்பிட்டவர்கள் தவறு என்று நிரூபிக்கப்பட்டுள்ளனர். ஏனென்றால், உங்கள் பதவிக் காலம் முடிவதற்குள் ஐரோப்பாவின் மிகப்பெரிய பொருளாதாரமாக ஜேர்மனியை மேலும் வலுப்படுத்த முடிந்தது“ என தெரிவித்தார்.

2005ஆம் ஆண்டு ஜேர்மனியின் முதல் பெண் சேன்ஸலராக பதவியேற்ற மெர்க்கல், கிட்டத்தட்ட 16 ஆண்டுகள் உயர் பதவியில் இருந்தார். ஆனால் அவர் 2021யில் மறுதேர்தலை நாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# யேர்மனியில் திருவள்ளுவருக்கு சிலை!

யேர்மனியின் டோட்முண்ட் நகரில் தமிழர்களின் கடைகள் நிறைந்துள்ள Rheinische Str இல் ஒரு திருவள்ளுவர் சிலையை அமைக்க வேண்டும் என்று நாம் இரண்டு ஆண்டுகளாக எடுத்து வரும் முயற்சி வெற்றி அடையும் நிலையை எட்டி உள்ளது.

வீதியின் முக்கியமான சந்தியில் திருவள்ளுவர் சிலை அமைப்பதற்கான இடத்தை டோட்முண்ட் நகர சபை ஒதுக்கித் தந்திருக்கிறது. அத்துடன் அத்திவாரத்திற்கும் சிலை அமையவிருக்கின்ற பீடத்திற்குமான செலவுகளை பொறுப்பெடுப்பதற்கும் நகரசபை முன்வந்திருக்கிறது.

சிலைக்கான செலவை நாம் பொறுப்பெடுக்க வேண்டும். அண்ணளவாக 20.000 யூரோக்கள் சிலை செய்வது தொடக்கம் அதைக் கொண்டு வந்து பொருத்துவது வரை முடிவாகும் என்று கணக்கிட்டிருக்கிறோம்.

02.04.2023 அன்று எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், வர்த்தகர்கள் என்று பலர் கூடி திருவள்ளுவர் சிலை அமைப்பதற்கு செய்ய வேண்டிய திட்டங்கள் குறித்து ஆராய்ந்தோம். சிலைக்கான நிதியை எவ்வாறு திரட்டுவது என்பது குறித்தும் ஆராய்ந்தோம்.

திருவள்ளுவர் எல்லோருக்கும் உரியவர் என்பதனால் குறிப்பிட்ட சிலர் மட்டும் பங்களித்து சிலை அமைப்பதை விட, சிறு துளி பெருவெள்ளம் என்பது போல் பலருடைய பங்களிப்புடன் சிலையை செய்வதே பொருத்தமாக இருக்கும் என்று தீர்மானித்திருக்கிறோம்.

யேர்மனியின் முக்கிய நகரங்களில் ஒன்றான டோட்முண்டின் மையப் பகுதியில், பல்லாயிரக்கணக்கான மக்கள் நடமாடும் ஒரு வீதியில் திருவள்ளுவர் சிலை அமையவிருக்கிறது என்பது தமிழர்கள் அனைவருக்கும் பெருமை தரும் ஒரு விடயமாகும். திருவள்ளுவர் சிலை அமைவதற்கு உலகத் தமிழர்கள் ஆதரவு தரவேண்டும் எனக்கோரிக்கை விடப்பட்டுள்ளது.

**தகவல்.- சபேசன் 49 15163363333**



# யேர்மனிய தமிழ்பெண் எழுத்தாளர்கள் விபரம்..

**- தொகுப்பு சாந்தினி துரையரங்கன் -**

## யேர்மனி தமிழ்ப் பெண் எழுத்தாளர்கள்... தொடர்ச்சி - 23



பெயர் - இந்திரா மகாலிங்கம்
பிறந்த இடம் - வேலணை, 29.09.1957
தந்தை, தாய் - திரு திருமதி சண்முகம்பிள்ளை மகேஸ்வரி
கல்வி - வேலணை அம்பிகை மகளீர் வித்தியாலம்
வேலணை மத்திய மகாவித்தியாலயம்
திருமணம் - திரு மகாலிங்கம் தர்மலிங்கபிள்ளை ( 1980 )
புலப்பெயர்வு - 1985
தற்போதைய முகவரி - Werne
குடும்பம் - 1 ஆண், 1 பெண்
எழுத்துத்துறை - கவிதை

புலம் பெயர்ந்து வந்தாலும் கல்வித்துறையுடன் வளர வேண்டும் என்ற ஆசையுடன் கவிதைகள் எழுதத் தொடங்கினார். ஆரம்ப காலங்களில் இலண்டன் தமிழ் வானொலி, தற்போதைய பாமுகத்தில் பல கவிகளை படைத்து வந்தார். கலைவிளக்கு சங்சிகையிலும் பல கவிதைகளை எழுதியுள்ளார்.

யேர்மனில் 1998ம் ஆண்டு குழந்தைகள் பராமரித்தல் என்னும் தொழிற்கல்வியை ( Ausbildung ) கற்று நீண்ட காலமாக தொடர்ந்து இத் தொழிலைச் செய்து வருகின்றார். ஒரு மாதத்திற்கு ஒரு முறை இவர் இருக்கும் இடத்தில் மாதர்கள் பலர் கூடி தேநீர் அருந்தி, உணவு உண்டு பேசி மகிழ்வார்களாம். தொடர்ந்து எழுதுங்கள் என உங்களை உற்சாகப்படுத்துகின்றோம்.



**யேர்மன் பெண் எழுத்தாளர் தொடர்ச்சி - 24**

பெயர் - திருமதி ஜெகதீஸ்வரி மகேந்திரன்
பிறப்பு - மட்டக்களப்பு , 28.04.1959
கல்வி - ஆரம்பக்கல்வி - அரசடி மகா வித்தியாலயம்,
மட்டக்களப்பு இந்துக்கல்லூரி
உயர்கல்வி- வின்சன் மகளீர் உயர்தரப்பாடசாலை
அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைமாணி தமிழ் பட்டம் ( 2011 ) பெற்றவர்.
தமிழ் மணி (2009 )பட்டத்தையும் பெற்றுக்கொண்டவர்.
வசிப்பிடம் - காமன் நகரம்
பிள்ளைகள் - 4 பேர்

தாயகத்தில் ஊரணி பாடசாலையில் பகுதி நேர ஆசிரியராக கடமையாற்றியவர். தன் வீட்டில் தனியார் கல்வி நிலையமாக சேவையாக செய்தும் வந்துள்ளார். அதே ஆர்வத்துடன் புலத்திலும் டோட்முண்ட் நகரத்தில் உள்ள தமிழர் கலையகத்தில் நிர்வாக உறுப்பினராகவும் தமிழாசிரியராகவும் 30 ஆண்டுகளாக கடமையாற்றி வருகின்றார்.

புலம் பெயர்ந்த காலத்தில் இருந்தே தன்னால் இயன்ற படைப்புக்களை ஐபிசி, ரிபிசி, லண்டன் ரைம்ஸ் போன்ற வானொலிகளிலும், கலைவாணி என்ற புனைபெயரில் ஏலையா சஞ்சிகையிலும் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், ஒரு சில பாடல்கள் எழுதியுள்ளார். படிக்கும் காலத்தில் இலங்கை வானொலியில் ஒரு இசையும் கதையும் எழுதிய அனுபவமும் உள்ளவர்.

மட்டக்களப்பு வலயக்கல்வி அலுவலகம் ஊடாக வெளிவருகின்ற மாதாந்த சஞ்சிகையான வித்தியா என்னும் இதழுக்கு கட்டுரைகள், கவிதைகள் போன்ற படைப்புக்களை தொடர்ந்து எழுதிவருகின்றார். பல கவியரங்க நிகழ்வுகளிலும் பங்குபற்றியும் வருகின்றார்.

நீண்டகாலமாக யேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்க நிர்வாக உறுப்பினராக கடமையாற்றி சங்க செயற்பாடுகளில் ஒன்றிணைந்து செயற்பட்டு வருகின்றார்.

..........................................................................................................................



**பெண் எழுத்தாளர்கள் தொடர்ச்சி - 25**

பெயர் - திருமதி இராஜேஸ்வரி சிவராசா
பிறப்பு - உரும்பிராய்,
தந்தை,தாய் -திரு திருமதி வல்லிபுரம் பார்வதி
கல்வி - ஆரம்பக்கல்வி - உரும்பிராய் சந்திரோதயா வித்தியாசாலை.
உயர்கல்வி - மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி.
திருமணம் - (1980) திரு வைரமுத்து சிவராஜா
புலப்பெயர்வு - 1984
தற்போதைய முகவரி -டியூஸ்பேக் - யேர்மனி
குடும்பம் - 3 பிள்ளைகள் ( சிவதர்சினி, சிவாஸ்கர், சிவகாந்த் )
பேரப்பிள்ளைகள் - 5
படைப்புகள் - கவிதை, கட்டுரை, சிறுகதை, இலக்கியம்.
வெளியீடு - ”உயினில் பாதி” கவிதைகளின் தொகுப்பு - 2019

இவர் இலங்கையில் பாடசாலையில் கல்வி கற்கும் காலத்தில் பேச்சுப்போட்டி, விளையாட்டுப்போட்டி போன்றவற்றில் பங்குபற்றி பரிசில்கள்

பெற்றுள்ளார். சிறுவயதில் இருந்தே வாசிக்கும் பழக்கம் அவரை எழுதத்தூண்டின. 1984ம் ஆண்டு யேர்மன் நாட்டிற்கு புலம்பெயர்ந்தார். 1988 - 1994 வரை யேர்மனி டியூஸ்பேக் நகரத்தின் தமிழ்பாடசாலையில் தமிழ் ஆசிரியராக பணிபுரிந்தார். 30 ஆண்டு காலமாக ஜேர்மன் தமிழ்கல்விச்சேவையால் நடாத்தப் பட்ட பரீட்சைகளில் நடுவராகவும், வினாத்தாள்கள் தயாரித்தல், விடைத்தாள்கள் திருத்துதல், பரீட்சை மேற்பார்வையாளராக கடமையாற்றுதல் போன்ற பணிகளைச் செய்து வருகின்றார்.

1992ம் ஆண்டு முதல் யேர்மனியில் வெளிவந்த ஈழம், தமிழருவி, வெற்றிமணி, தமிழ்ரைம் ஆகிய பத்திரிகைகளிலும், மண், சிறுவர்அமுதம் , பூவரசு, ஏலையா, கலைவிளக்கு, தமிழ்நாதம் ஆகிய சஞ்சிகைகளிலும் இவரது ஆக்கங்களள் பதிவாகியுள்ளன. தொடர்ந்தும் இப்போ வெளிவந்துகொண்டிருக்கும் சஞ்சிகை, பத்திரிகைகளில் இவரது ஆக்கங்கள் வெளிவந்துகொண்டுள்ளன.

1990 தொடக்கம் பல ஆண்டுகளாக ஜேர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து. சுவிற்சிலாந்து, டென்மார்க், நெதர்லாந்து நாடுகளில் வெளிவரும் சஞ்சிகைகள், பத்திரிகைகள், வானொலிகள், தொலைக்காட்சி (தீபம்) போன்றவத்தில் இவரின் படைப்புக்கள் அவ்வப்போது வெளிவந்தன.

ஜேர்மனி தமிழருவி சஞ்சிகையால் நடாத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் பரிசும் பெற்றிருந்தார். ஜேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் வெளியீடான புகலிடச் சாதனையாள் விபரத்திரட்டு இதழிலும் இவரைப் பற்றிய விபரம் பதிவாகியுள்ளது.
தமிழ் ஊடகப்பணி..

2005 ஆண்டு தொடக்கம் இற்றைவரை இலண்டன் தமிழ் வானொலிக்கு மட்டும் சுமார் 400 கவிதைகள் வரை எழுதி அவை ஒலிபரப்பாகியுள்ளன.கவி புனைவதில் அதிக ஆர்வம் கொண்டுள்ளமையால் சில கவியரங்க மேடைகளை அலங்கரித்துள்ளார். பாடல்கள் எழுதுவதிலும் ஆர்வம் இருந்தபடியால் சங்கீத ஆசிரியர் திருமதி கவைாணி ஏகானந்தராசா அவர்ககளால் வெளியிடப்பட்ட ”பெற்றோரே தெய்வங்கள்” என்னும் (CD) இறுவட்டிற்கு பெற்றோரைப் பற்றிய பாடலை எழுதி பாடலாசிரியராகவும் இருந்திருக்கிறார். மற்றும் இவர் எழுதிய பல பாடல்களுக்கு திருமதி கலைவாணி இசையமைத்து லண்டன் தமிழ் வானொலியில் பாடியிருக்கிறார்.

ஜேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் உறுப்பினராகக் கடந்த 20 வருடங்களாக இருந்து வருகின்றார்.ஜேர்மனியில் கடந்த 33 ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கும் ”மண்” சஞ்சிகையின் உதவி ஆசிரியராகவும் ஒப்பு நோக்காளராகவும் கடந்த பல ஆண்டுகளாகப் பணிபுரிந்து வருகின்றார்

**" உயிரினில் பாதி "**

நாநூற்றுக்கும் மேற்பட்ட கவிதைகளில் தேர்தெடுக்கப்பட்ட நூறு (100) கவிதைகளைத் தொகுத்து ”உயிரினில் பாதி” என்ற கவிதைத் தொகுப்பு டியூஸ்பேர்க் நகரத்தில் 2019ம் ஆண்டில் வெளியீடு செய்து வைத்தார்.கல்விப்பணி, சஞ்சிகைப் பணி, இலக்கியம், எழுத்து, வாசிப்பு, கவி புனைவது எனப் இவரின் பணிகள் தொடர்கின்றன. உற்சாகத்துடன் இவரின் பணிகள் தொடர வாழ்த்தி மகிழ்கின்றோம்.

# தாயகச் செய்திகள் சில.....

25.3.23- இவ்வருடம் முதல் 2 மாதங்ளில் 8.422 கைபேசிகள்(ஸ்மாட் போன்கள்) திருடப்பட்டிருப்பதாக இலங்கை தொலைத் தொடர்பு நிலையம் அறிவித்துள்ளது.
27.3.23- 2022ம் ஆண்டில் 11 லட்சம் பேர் (11.27.758) பல் வேறு காரணங்களால் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர். அதிகமானோர் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்றிருக்கிறார்கள்.
28.3.23- இவ்வருடம் முதல் 3 மாதங்களில் 25 உயர் அதிகாரிகள் உட்பட 3.500 படையினர் நாட்டைவிட்டு வெளியேறிவிட்டனர் என பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.
29.3.23- கடந்த வருடம் ரயில் விபத்துக்களில்175பேர் பலி 276பேர் காயம் என ரயில் திணைக்களம் அறிவித்தது.
30.3.23- இலங்கை தினகரன் பத்திரிகை தனது 91வது ஆண்டு பிறந்தநாளைக் கொண்டாடியது.
31.3.23- இலங்கைப் பொலிஸ் 159வது ஆண்டு நிறைவைக் கொண்டாடியது. இந்த வருடம் முதல் 3 மாதங்களில் 260 பொலிசார் பதவி விலகியுள்ளனர்.
01.4.23- 22.3.1823 - 22.3.2023 இந்தியப் பெருந்தோட்ட மக்கள் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டு 200 ஆண்டுகள் நிறைவுகண்டது.
02.4.23- வடமாகாணத்தில் மாணவர்கள் இன்மையால் 103 பாடசாலைகள் மூடப்பட்டிருப்பதாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். யாழ் மாவட்டத்தில் 49, மன்னார் 10, வவுனியா 34, கிளிநொச்சி 8, முல்லைத்தீவு 2 என மூடப்பட்டுள்ளதாம்.
03.4.23- இலங்கையில் எடை குறைந்த சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக ஐக்கியநாடுகள் சிறுவர் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. 2021ல் 12.2 வீதம் 2022ல் 15.3 வீதம் என அதிகரித்து வருகின்றது.
05.4.23- பொருளாதார நெருக்கடியால் சுமார் 5 லட்சம் பேர் வேலை இழப்பு.
06.4.23- மடிக்கணனி, கைத்தொலைபேசி, இணையம், தொலைக்காட்சி, வெளிநாட்டு மோகம் போன்றவற்றால் வாழும் மக்களில் மூன்றில் ஒருவர் சோம்பேறியாகக் காணப்படுகிறார் என்று வைத்திய ஆய்வாளர் தெரிவித்துள்ளார்.
08.4.23- 1948 -2023 காலப்பகுதியில் இனவாதத்தால் 1.800 இந்துக் கோவில்கள் அழிக்கப்பட்டிருப்பதாக டயஸ்போரா அமைப்பு அறிவித்துள்ளது.
10.4.23- நாட்டின் பொருளாதார நெருக்கடியால் குடும்பக்கட்டுப்பாடு செய்வோரின் எண்ணிக்கை அதிகரிப்பு. சென்ற ஆண்டில் 2.25.492 பேர் குடும்பக்கட்டுப்பாடு சிகிச்சை மேற்கொண்டனர்.
11.4.3- இந்த ஆண்டு ஏப்ரல் 9ம் திகதிவரை வீதி விபத்துக்களில் 564 பேர் இறந்துள்ளனர். 2.446 சிறு விபத்துக்கள், 1.345 மோசமான விபத்துக்கள் இடம்பெற்றதாக பொலிசார் அறிவித்துள்ளனர்.
12.4.23- உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 8.000 பேரிலிருந்து 4.714 பேராகக் குறைக்க அரசு முடிவு செய்துள்ளது.

14.4.23- இலங்கையில் 5 வயதிற்குட்பட்ட எடை குறைந்த பிள்ளைகள் 1.36.265 பேர் இருப்பதாக குடும்ப நலத்துறையினர் அறிவித்துள்ளனர்.
15.4.23- கடந்த 2022ம் அண்டில் 439 யானைகள் பல்வேறு காரணங்களால் இறந்துள்ளன. 140 மனிதர்கள் யானைகளால் கொல்லப்பட்டனர் என வனத்திணைக்களம் தெரிவித்தது.
18.4.23- சுமார் 1 லட்சம் குரங்குகளை சீனாவுக்கு ஏற்றுமதி செய்ய இலஙஇகை அரசு ஆராய்ந்து வருகின்றது.
20.4.23- யாழ் மாவட்டத்தில் வசிப்பவர்களில் 25 வீதம்பேர் நீரழிவு நோயாளிகளாகக் காணப்படுகிறார்கள் என சுகாதாரப் பகுதியின் தெரிவித்தனர். தெற்காசியாவில் நீரழிவு நோய் கூடிய நாடாக சிறீலங்கா இப்பொழுது உள்ளது.
22.4.23- இந்த வருட சித்திரைப் புத்தாண்டு காலத்தில் காலாவதியான பொருட்களை விற்பனை செய்த 8.231 வர்த்தகர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
25.4.23- இலங்கையில் ஆண்டுதோறும் சராசரியாக 3.000 பேர்வரை தற்கொலை செய்துகொள்கிறார்கள் என சுகாதாரப்பகுதியினர் அறிவிப்பு.
28.4.23- 1.1.2023 - 30.4.2023 வரையுள்ள 4 மாதங்களில் நாட்டில் சுமார் 28.000 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.
29.4.29- நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் மகன் ராம்குமார் குழுவினர் யாழ் மூளாய்ப் பகுதிக்கு விஜயம் மேற்கொண்டு 1953ம் ஆண்டு சிவாஜி நட்டுவைத்த மாமரத்தைப் பார்த்து மகிழ்ந்ததுடன் மக்களுடன் கலந்துரையாடினர். சிவாஜி பற்றிய புத்தகம் ஒன்றும் யாழ் பல்கலைக் கழகத்தில் வெளியீடு செய்யப்பட்டது.
30.04.23- மீண்டும் நாட்டில் கொரோன இரு வாரங்களில் 5 பேர் இறந்துள்ளனர். நாட்டில் இதுவரை கோரோனாவால் 16.846 பேர் இறந்திருக்கிறார்கள்.
30.4.23- இந்த வருடம் முதல் நான்கு மாதங்களில் 2.500 பேர் எலிக்காய்ச்சலால் பாதிப்பு. சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.
30.4.23 - இந்த ஆண்டு முதல் 4 மாதங்களில் 143 யானைகளும் 36 மனிதர்களும் பல்வேறு காரணங்களால் இறந்திருக்கிறார்கள்.
01.5.23- கடந்த 16 மாதங்களில் யாழ் மாவட்டத்தில் 11 சிறுவர்கள் உட்பட 229 பேர் பல்வேறு காரணங்களால் உயிரிழந்திருக்கிறார்கள். போக்குவரத்து வீதி விபத்துக்களின் மரணங்கள்தான் மிகக்கூடுதலாகும்.
02.5.23- வெசாக் பண்டிகையையொட்டி நாடுமுழுவதிலும் 988 சிறைக்கைதிகளுக்கு மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.
04.5.23- கடந்த 9 மாதங்களில் நாடுமுழுவதிலுமாக 350 வைத்தியர்கள் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர்.
05.5.2023- இலங்கையின் வறுமை வீதம் 13 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாக அதிகரித்திருப்பதாக உலக வங்கி அறிவித்துள்ளது.
06.5.23- பொருளாதார நெருக்கடியால் 2022 மார்ச் - 2023 ஏப்ரல் மாதம்வரை 244 தமிழர்கள் இந்தியா சென்றுள்ளனர்.
08.5.23- இலங்கை மக்கள் தொகை 2.2 கோடி. ஆனால் தற்போது கைத்தொலைபேசி வைத்திருப்போர் எண்ணிக்கை 3 கோடியைக் கடந்துள்ளது ( 3.13.82.000 )

# உலகச் செய்திகள் சில..

17.3.23- ஆபிரிக்க- மலாவி நாட்டில் இடம்பெற்ற புயல், கனமழை காரணமாக 350 பேர்வரை பலி. பலர் காணாமல் போயுள்ளனர்.
19.3.23- ரஷ்ஷிய ஜனாதிபதி புடினைக் கைது செய்ய சர்வதேச குற்றவியல் நீதி மன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.
23.3.23- சோமாலியாவில் 40 ஆண்டுகள் இல்லாத கடும் பசி, பட்டினி 43.000 பேர் உயிரிழந்தனர் என ஐ.நா. சபை சுகாதார அமைப்பு தெரிவித்தது. இந்த ஆண்டில் மேலும் 50.000 பேர் இறக்கலாம் எனவும் அறிவித்துள்ளது.
24.3.23- அமெரிக்க ”அக்கென்சர்” நிறுவனத்தில் 19.000 ஊழியர்கள் வேலை இழந்துள்ளனர். பொருளாதார நெருக்கடியால் சென்ற வருடம் அமேசான் நிறுவனத்தில் 18.000 பேர், இன்டீட் நிறுவனத்தில் 2.200 பேரும் பணிநீக்கம் செய்யப்பட்டனர்.
25.3.23- இந்தியப் பிரதமர் மோடி குறித்து சர்ச்சையான கருத்துத் தெரிவித்த வழக்கில் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்திக்குச் சிறைத்தண்டனை விதித்தபடியால் அவர் எம் பி பதவியை இழந்துள்ளார்.
28.3.23- ஆப்கானிஸ்தானில் கடும் மழை வெள்ளம் 200 பேர்வரை பலி 3.000 வீடுகள் அழிவு, 2 லட்சம் மக்கள் அகதிகளாக இடம்பெயர்வு. இந்த நாட்டில் கடந்த ஜனவரியில் கடும் வறட்சியால் சுமார் 1.000 பேர்வரை பலியாகினர்.
29.3.23- பிரித்தானியாவின் மக்கள் தொகை கணக்கெடுப்பில் இந்து, சிக்கியர், இஸ்லாம் மக்கள் தொகை அதிகரிப்பு. கிறிஸ்தவ மக்கள் தொகை சரிபாதியாகக் குறைவு. ஆரோக்கிய வாழ்வில் இந்துக்கள். 87.8 வீதம்பேர் கல்வி, பொருளாதாரம், சுகநலம் என முன்னணியில் இருக்கிறார்களாம்.
30.3.23- யேர்மனியில் பொருளாதார நெருக்கடியால் பிராங்போட், முனிச் விமான நிலைய ஊழியர்கள் வேலை நிறுத்தப் போராட்டம் 1.200 விமானங்கள் ரத்து, 3.80.000 பயணிகள் பாதிப்பு. Verdi என்ற தொழிற்சங்கத்தில் 25 லட்சம் பேர், டொச் தொடரூந்து மற்றும் போக்குவரத்துச்சேவைகளில் 2.30.000 பேர் பதவி வகிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.
31.3.23- பிலிப்பைன்சில் பயணிகள் கப்பல் தீ பிடித்ததில் 31 பேர் பலி 7 பேர் காணாமல் போயுள்ளனர். 23 பேர் படுகாயம்.
05.4.23- நேட்டொ நாடுகள் அமைப்பில் 31வது நாடாக பின்லாந்து சேர்ந்துள்ளது.
10.4.23- அமெரிக்க கிறிஸ்தவ சபையினரால் சுமார் 600 சிறார்களுக்குப் பாலியல் துன்புறுத்தல் 156 பாதிரிமார் மீது குற்றச்சாட்டு.
12.4.23- இந்தியப் பிரதமர் மோடி தமிழகம் சென்று சென்னை விமான நிலைய புதிய (ரெமினால்) முனையத்தையும் ”பாரத்” புதிய தொடரூந்து சேவையையும் ஆரம்பித்து வைத்தார்.
14.4.23- அமெரிக்காவில் பண்ணை ஒன்றில் தீ விபத்து 18.000 மாடுகள் பலி.
20.4.23- கென்யாவில் பாதிரியார் ஒருவரின் பேச்சைக் கேட்டு உணவை உண்ணாமல் தவிர்த்ததால் 47 பேர் உயிரிழந்துள்ளனர்.

25.4.23- சூடானில் இராணுவத்துக்கும் துணைப் படையினருக்குமிடையே மோதல்கள் 500 பேர்வரை பலி 4.000 பேர்வரை காயம். சுமார் 50.000 குழந்தைகள் பாதிப்பு. ஒரு வாரகாலம் சண்டை தொடர்ந்ததில் இவ்வளவு அழிவுகள்.
27.4.23- உலகில் முஸ்லீம்கள் அதிகமாக வாழும் நாடுகள் பட்டியலில்..
1வது இந்தோனிசியா 2வது இந்தியா 3வது பாக்கிஸ்தான் 4வது வங்களாதேஷ் 5வது நைஜீரியா 6வது எகிப்து.
28.4.23- இந்த ஆண்டு கணக்கெடுப்பின்படி உலகில் சனத்தொகை கூடிய நாடாக சீனாவைப் பின் தள்ளி இந்தியா முதலிடத்தைப் பிடித்துள்ளது.20.04.23 திகதியன்று முன்னிலை வகிக்கும் நாடுகள் இந்தியா 142.86 கோடி, சீனா 142.57 கோடி, அமெரிக்கா 34 கோடி யாகும். 2023 இறுதியில் உலக சனத்தொகை 804 கோடியாக உயரும் எனத் தகவல்கள் தெரிவித்துள்ளன.
29.4.23- கென்யா நாட்டில் மதபோதகர் ஒருவரின் போதனையால் பட்டினி கிடந்ததில் 95 பேர் பலியாகியுள்ளனர்.
30.04.23- பிரான்சின் புதிய ஓய்வூதியத்திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து மாபெரும் ஆர்பாட்டம் 108 பொலிசார் காயம் 300 பேர்வரை கைதுசெய்யப்பட்டனர்.
01.5.23- சூடானில் இடம்பெற்ற கலவரங்களால் சுமார் 5 லட்சம் பேர் உள்நாட்டிலும் வெளிநாடுகளுக்கும் அகதிகளாகச் சென்றுள்ளனர். 8 லட்சம் வரை அதிகரிக்கும் என ஐ. நா. சபை அகதிகள் பிரிவு தெரிவித்துள்ளது.
02.5.23- உலக வங்கியின் புதிய தலைவராக இந்திய வம்சாவழி, அமெரிக்க குடியுரிமை பெற்றவரான சீக்கிய இனத்தவர் அஜய் பாங்கா 63 வயது பதவி ஏற்றுள்ளார்.
03.5.23- சேர்பியா நாட்டில் 13 வயதுப் பாடசாலை மாணவன் ஒருவனால் துப்பாக்கிப் பிரயோகம் சக மாணவர்கள் 8 பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.
04.5.23- ருவண்டா நாட்டில் கடும் மழை, நிலச்சரிவு 140 பேர்வரை இறப்பு.
05.5.23- சென்ற ஆண்டில் ஐரோப்பாவில் கடும் வெப்பம் நிலவியதில் 15.600 பேர் இறப்பு. இதில் யோமனி பிரானஇஸ் நாடுகளில் 4.500 பேர் இறந்திருக்கிறார்கள். கடந்த 8 ஆண்டுகள் இல்லாத வெப்ப நிலை பதிவாகியுள்ளது.
06.5.23- பிரித்தானியாவின் 27 வது அரசராக காலம் சென்ற 2வது எலிசபெத் மகாராணியின் மகனான 3ம் சார்ள்ஸ் 74 வயது 06.05.2023 அன்று முடிசூடிக் கொண்டார். பிரித்தானியாவில் வெகு விமரிசையாக இடம்பெற்ற இந்தநிகழ்வில் 203 நாடுகளின் தலைவர்களும் பங்குகொண்டனர். சுமார் 11.000 படையினரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தாலும் ஆங்காங்கே எதிர்ப்புக்களும் தெரிவிக்கப்பட்டதில் பலர் கைதுசெய்யப்பட்டனர். முடிசூடிக்கொண்ட 3ம் சார்ள்ஸ் பொதுநலவாய நாடுகளின் தலைவராகவும் திகழ்வார்.

# பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து சாதனை படைத்த முதல் பெண்



தனுஷ்கோடியிலிருந்து மன்னார் வந்து மீண்டும் திரும்பிச் சாதனை...

தனுஷ்கோடியிலிருந்து தலைமன்னாருக்கு நீந்தி வந்து மீண்டும் தனுஷ்கோடிக்கு நீந்தி பாக்கு நீரிணைக் கடற்பகுதியை கடந்த முதல் பெண் என்ற சாதனையை இந்தியப் பெண் படைத்துள்ளார்.
தமிழகத்தையும் இலங்கையையும் பிரிக்கும் பாக்கு நீரிணைக் கடல் பகுதியை இராமேஸ்வரம் தீவும் அதனைத் தொடர்ந்துள்ள 13 மணல் தீட்டுக்களும் மன்னார் வளைகுடாவிலிருந்து பிரிக்கின்றன.

தமிழகத்திலேயே மிகவும் ஆழம் குறைந்த அதேசமயம், பாறைகளும் ஆபத்தான ஜெல்லி மீன்களும் நிறைந்த கடற்பகுதியும் இதுவே இதுவரை 4 பெண்கள் உட்பட 18 பேர், பாக்கு நீரிணையை தனியாக நீந்திக் கடந்து சாதனை புரிந்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் இலங்கையின் தலைமன்னாரிலிருந்து இந்தியாவின் தனுஷ்கோடிக்கோ அல்லது தனுஷ்கோடியிலிருந்து தலைமன்னாருக்கோ நீந்திச் சென்றவர்கள். இது தவிர மேலும் சிலர் குழுவாக ரிலே முறையிலும் பாக்கு நீரிணைக் கடலை நீந்திக் கடந்துள்ளனர்.

ஆனால், ஓர் இடத்திலிருந்து புறப்பட்டு மறுபுறத்தை அடைந்த பின்பு தொடர்ச்சியாக மீண்டும் அங்கிருந்து புறப்பட்டு தொடங்கிய இடத்துக்கு வந்து சாதனை புரிந்தவர்கள் 3 பேர் மட்டுமே. அதில் முதலாமானவர், யாழ்ப்பாணம்,

வல்வெட்டித்துறை ஆழிக்குமரன் ஆனந்தன் என்றழைக்கப்படும் வி.எஸ்.குமார் ஆனந்தன். இவர் 1971ஆம் ஆண்டு தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடிக்கு நீந்திச்சென்று மீண்டும் தலைமன்னாருக்கு நீந்தி வந்தடைந்தார். மொத்தத் தூ ரத்தை 51 மணி நேரத்தில் நீந்திக் கடந்தார்.

அதன் பின்பு, இதே சாதனையை 11.4.2021இல் இலங்கை கடற்படையைச் சேர்ந்த ரோஷான் அபேசுந்தர, 28 மணி 19 நிமிடங்களில் நிகழ்த்தினார். கடந்த 29.03.2022 அன்று தமிழ்நாட்டில் தேனியைச் சேர்ந்த பள்ளி மாணவனான சினேகன், தனது 14ஆவது வயதில் 19 மணி 45 நிமிட நேரத்தில் தனுஷ்கோடியிலிருந்து தலைமன்னாருக்கு நீந்திச் சென்று மீண்டும் தனுஷ்கோடிக்கு நீந்திச் சாதனை படைத்தார்..

15.03.2023 மாலை 4.45 மணியளவில் தனுஷ்கோடி பழைய துறைமுகத்திலிருந்து நீந்தத் தொடங்கி 12 மணி 15 நிமிடங்கள் நீந்தி நேற்று முன்தினம் வியாழக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் ஒருபுறமாக நீந்தி இலங்கையிலுள்ள தலைமன்னாரை அடைந்தார்.

தொடர்ந்து உடனே மறுபுறமாக தலைமன்னாரிலிருந்து மீண்டும் தனுஷ்கோடி நோக்கி நீந்தத் தொடங்கி வியாழக்கிழமை பகல் 12.20 மணியளவில் தனுஷ்கோடி அரிச்சல்முனை வரை நீந்திக் கரையை அடைந்தார். 62 கிலோ மீற்றர் தூரத்தை 19 மணி 31 நிமிடங்கள் சுஜேத்தா தேப் பர்மன் நீந்தி கடந்து புதிய சாதனை படைத்துள்ளார்.

இதன் மூலம் முதன்முறையாக தனுஷ்கோடியிலிருந்து தலைமன்னாருக்கு இரண்டு முறை நீந்திக் கடந்தவரென்ற சாதனையையும் தனுஷ்கோடியிலிருந்து தலைமன்னாருக்கு நீந்திச் சென்று மீண்டும் தனுஷ்கோடிக்கு நீந்தி பாக்கு நீரிணைக் கடற்பகுதியை கடந்த முதல் பெண் என்ற சாதனையையும் சுஜேத்தா தேப் பர்மன் நேற்றுமுன்தினம் படைத்தார்.மேலும் தேனியைச் சேர்ந்த சினேகனின் சாதனையையும் அவர் முறியடித்துள்ளார்.

## நீர் !.. ஆச்சரியமான உண்மைகள் !..

- உலகிலுள்ள தண்ணீரில் 1 வீதம் மட்டுமே குடி நீராகப் பயன்படுத்தக்கூடியது.
- உலகிலுள்ள நல்ல தண்ணீரில் 90 வீதமானவை அண்டாட்டிக்காப் பகுதியில்தான் உள்ளது.
- பூமியில் சூரியன் வெப்பத்தால் தினசரி ஒரு ட்ரில்லியன் டன் நீர் ஆவியாகின்றது.
- சாதாரண தண்ணீரைவிட பனியாக உறைந்துள்ள தண்ணீர் 9 வீதம் இலேசானது. அதனால்தான் பனிக்கட்டி மிதக்கின்றது.

# தொழிலாளர் தினத்தில்

இறைவன் படைத்த மக்கள்
இறைவழி சென்று உய்வர்
மறைகற்று மனித நேயத்துடன் வாழ்வர்
மனிதம் உள்ளவரால் மாநிலமே வாழும்
மனிதவாழ்விற்கு இன்றியமையாதது
எத்தனை எத்தனை தொழில்கள்
தொழில் செய்தால்தானே ஊதியம் கிடைக்கும்
ஊதியத்தினாலே வாழ்க்கை வளம்பெறும்
தொழிலுக்கேற்ற ஊதியம் வேண்டுமென்று
தொழிலாளர் வேலை நிறுத்தம்
வேலைசெய்வது எட்டு மணித்தியாலம்
வாரத்தில் ஒருநாள் விடுமுறை
வேண்டுமென்று தொழிலாளர் கோரிக்கை
முதலாளி வர்க்கம் முதலைமாதிரி
முழுவருமான நயத்தையும் அவர்பெற
முழுநாள் உழைத்த தொழிலாளி
குறைந்த வருமானம் பெற்று
வறுமைக் கோட்டிற்குள் வாழ
தன் உடல்வருத்தி செய்த வேலைக்கு
கிடைக்கவில்லை நல்ல ஊதியம்
ஒன்றுமே செய்யாத முதலாளி முழுவருமானம் பெற்று
ஏகோபித்த வாழ்க்கை வாழ்வது
இதற்கு ஒரு முற்றுப்புள்ளி தொழிலாளர் போராட்டம்
வேலைக்கேற்ற சம்பளம்
இப்போராட்டத்தில் சிலர் இறந்தனர்
அதனாலே மே மாதம் முதலாம் திகதி
தொழிலாளர் தினமாக பிரகடனப்படுத்தப் பட்டதுஅதுவே
இன்று தொழிலாளர தினமாக
கொண்டாடப்படுகிறது
தொழிலாளர் வாழ்க
தொழிலாளர் தின வாழ்த்துகள்

**கெங்கா ஸ்ரான்லி**

# சார்ள்ஸ் -ராசா , கமிலா -ராணியாகப் பதவி ஏற்பு..

# 316 ஆண்டுகள் வரலாற்றில் 13வது ராசா-ராணி..




உலகநாடுகளின் தலைவர்களும், அரசியல், மதம், திரைப்படம், பாடல், கோடீஸ்வரர்கள், தொழிலதிபர்கள் எனப் பல்வேறு பிரமுகர்களும் 6.5.2023 அன்று பிரித்தானியாவின் ராசாவான முடிசூடிய சார்ள்ஸின் கொண்டாட்டத்தில் பல லட்சக்கணக்கான உள்ளூர் வெளிநாட்டுப் பொதுமக்களும் ஒன்றுகூடினார்கள் பிரித்தானிய நாடு முழுவதும் விழாக் கோலம். மாபெரும் திருவிழாமாதிரி நடைபெற்ற இந்த முடிசூட்டு விழாவறிகு 2-3 நாட்களுக்கு முன்னரே பல ஆயிரம் பொதுமக்கள் கிட்ட நின்று பார்ப்பதற்காக முண்டியடித்து கூடாரங்கள் அமைத்து காவல் கிடந்தார்களாம். இந்த நிகழ்வை உலகநாடுகளின் தொலைக்காட்சிகள் வானொலிகள் நேரடியாகவும் உடனுக்குடனும் செய்திகளைப் ஒலி, ஒளி பரப்பிக்கொண்டே இருந்தன.

முன்னர் உலகையே ஆட்சி செய்த நாடு என்றால் பிரித்தானியாதான். அந்தளவுக்கு அன்று வல்லாதிக்கம் , பணப்பலம், ஆட்பலம் கொண்ட நாடாக விளங்கியது. உலகின் பல நாடுகளைக் கைப்பற்றி ஆட்சி செய்துள்ளது. இன்றும் பல நாடுகளை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றது. மரியாதைக்குரிய நாடாகவும் விளங்குகின்றது.

ஏன் நமது இலங்கை நாட்டையும் இறுதியாக ஆண்ட நாடும் பிரித்தானியாதான். நாகரீகத்தையும் தொழில், போக்குவரத்து, நிர்வாகம் எனப் பல துறைகளையும் கற்றுத்தந்த நாடும் இதுதான். அதே வேளை எமது நாட்டு வளங்களைச் சுரண்டி வாழ்ந்தநாடும் பிரித்தானியாதான். எமது நாடுமட்டுமல்ல உலகின் பல நாடுகளின் செல்வங்களையும் வளங்களையும் அள்ளிச் சென்று தன்நாட்டை வளமாக்கியநாடும் இதுதான்.

பிரித்தானியா ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் சரித்திர சாம்ராஜ்சியமாக விளங்கியிருக்கின்றது. மிக நீண்டகாலம் மன்னராட்சியைக் கடைப்பிடிப்பதுடன் உலகிற்கு ஜனநாயகத்தைக் கற்பித்த நாடும் இதுதான். அப்படிப் பல வளங்களும் கொண்ட நாட்டில் கடந்த 327 வருடங்கள் ராசா - ராணி ஆட்சி நடைபெற்று வருகின்றது.

மிக நீண்டகாலம் ராணியாக விளங்கிய 2வது எலிசபெத் சென்ற வருடம் (08.09.2022) மரணமடைய அவரின் மூத்த வாரிசான சார்ள்ஸ் மன்னராகப் பதவி ஏற்றார். அவரின் முறைப்படியான ராசா முடிசூட்டுவிழா வைபவமே (06.05.2023) கோலாகலமாகப் பிரித்தானியாவில் நடைபெற்றது.


இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்கொட்லாந்து, வடஅயர்லாந்து என நான்கு பிரிவுகளையும் உள்ளடக்கியதுதான் பெரிய பிரித்தானியா. இன்று இந்த நாடு ஐரோப்பிய யூனியனில் சேராமல் தனித்துவமாகவும் தனியான பண புழக்கத்தையும் கொண்டுள்ளது. சுமார் 64 மில்லியன் சனத்தொகை. 87 வீதம் வெள்ளை இனத்தவர்கள் வாழ்ந்தாலும் இன்று அதிகாரம் மிக்க பிரதமர் பதவியில் இருப்பவர் இந்திய வம்சாவழியைச் சேர்ந்தவர். லண்டன் மாநகர மேயராக இருப்பவர் பாக்கிஸ்தான் வம்சாவழியைச் சேர்ந்தவர்.
மன்னராக முடிசூடும் சார்ள்ஸ் பற்றிய சிறுகுறிப்பைப் பார்ப்போம்...

-பிறப்பு -14.11.1948 - 74 வயது
-தாய் மகாராணி 2வது எலிசபெத் தந்தை கோமகன் பிலிப்
-கல்வி கேம்பிறிச் பல்கலைக் கழகப் பட்டதாரி
-திருமணம் 1வது டயானா 1981 - 31.08.1997
2வது கமிலா பாக்கர் 2005
-பிள்ளைகள் 2 ஆண்கள் பேரப்பிள்ளைகள் 5 (3ஆண்-2பெண்)
-1970 கேம்பிறிச் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றார்.
-1974 றோயல் கடற்படையின் பயிற்சி முடித்து வேலை செய்தார்.
-1975 முதல் சந்திப்பு கமிலா பாக்கர் (தற்போதைய மனைவி)
1981 டயானா - சார்ள்ஸ் திருமணம்
1982 வில்லியம் 1984 ஹெரி பிறப்பு
1997 டயானா இறப்பு 31.08.1997
2005 மறுமணம் கமிலா பாக்கர் 09.04.2005
2022 தாய் 2வது எலிசபெத் மகாராணி இறப்பு 08.09.2022
2022 பிரித்தானியாவின் அரசராகப் பதவி ஏற்பு 08.11.2022

2023-05.06ம் திகதி முடி சூடி பிரித்தானியாவின் ராசாவாகவும் (மன்னராக) கமீலா (அரசி) ராணியாகவும் பதவி ஏற்பு

பிரித்தானியாவின் வரலாறு ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்ததாகக் கருதப்பட்டாலும் 1707ம் ஆண்டில்தான் முறைப்படி ராணியாகப் பதவி ஏற்பு நடைபெற்றிருக்கின்றது. முதலாவது ராணியாக அரச பரம்பரையைச் சேர்ந்த அன்னா என்னும் பெண்மணியே 01.05.1707 - 1714 வரை ஆட்சி செய்திருக்கின்றார். நடைபெற்றிருக்கின்றது. முதலாவது ராணியாக அரச பரம்பரையைச் சேர்ந்த அன்னா என்னும் பெண்மணியே 01.05.1707 - 1714 வரை ஆட்சி செய்திருக்கின்றார்.

2023 - 1707 என 316 ஆண்டுகளில் 12 ராசாக்கள் - ராணிகள் இந்த நாட்டை ஆட்சி செய்திருக்கிறார்கள். அதி கூடிய காலம் ஆட்சியில் இருந்தவர் 2வது எலிசபெத் மகாராணிதான் இவர் 06.02.1952 - 08.09.2022 காலம் 70 ஆண்டுகள் 214 நாட்கள் ஆட்சியில் இருந்திருக்கிறார். மிகக் குறைந்தகாலம் ஆட்சி புரிந்தவர் என்றால் எட்வேட் மன்னர் இவர் 1936ம் ஆண்டு 327 நாட்கள் மட்டும் ஆட்சி புரிந்திருக்கின்றார்.



# மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும்கல்விச்செலவுகளைப்பொறுப் பேற்றுஉதவும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம்.எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்து உதவலாம். இதுவரை இத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

1- திருமதி பிங்கலை செந்திலன் - Kitzingen - 600-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய் - முல்லைத்தீவு
உதவி பெறுவோர்.. - தியாகராசா டிலானி (பி.தி 10.04.2014)
குருபவராசா ரேணுஸ்றியா (பி.தி 23.08.2012)
றொனி டிலக்சனா (பி.தி 03.08.2014)

2- திருமதி சிவதர்சினி பிராங்ளின் - Viersen - 480-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய் - முல்லைத்தீவு
உதவி பெறுவோர்.. - றமணன் பிலோமினா (பி.தி 08.04.2012)
- ஜெகஸ்ரீன் மதுசாளினி (பி.தி 02.04.2013)

.......................................................................................................................

3- திருமதி சாந்தினி துரையரங்கன் - Essen - 480-00 யூரோ
சிறீ சண்முகா பெண்கள் இல்லம் - திருகோணமலை
உதவி பெறுவோர்.. - திலக்சிகா கோடீஸ்வரன் (பி.தி 12.05.2008)
மதுஸா சுந்தரலிங்கம் (பி.தி 01.01.2008)

.......................................................................................................................

4- திருமதி அஜந்தி பத்மநாதன் - London - 480-00 யூரோ
செபமாலை இரக்கத்தின் இல்லம்- தலைமன்னார்- மன்னார்
உதவி பெறுவோர்.. - கதிர்விழி சகாயநாதன் (பி.தி 09.05.2008)

.......................................................................................................................

5- திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Bonn - 480-00 யூரோ
சிறீ அகிலாண்டேஸ்வரி "அருளகம்" - வவுனியா
உதவி பெறுவோர்.. - இ. அபிராமி (பி.தி 14.11.2002)

.......................................................................................................................

6- திருமதி அனிதா றஞ்சன் - Duisburg - - 480-00 யூரோ
திருஞானசம்பந்தர் குருகுலம் - களுவாஞ்சிக்குடி - மட்டக்களப்பு
உதவி பெறுவோர்.. சாய்ரிதன் சத்தியசீலன் (பி.தி 07.06.2010)

.......................................................................................................................

7- திருமதி ஸ்ரெவ்வானி இம்மானுவல் - Essen - 480-00 யூரோ
இந்து "அன்பகம்" சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா
உதவி பெறுவோர்.. அஸ்வினி சுனில்சாந்த் ( பி.தி 09.06.2012)

8- திரு Johannas Grüendler - Köln - 480-00 யூரோ
இந்து "அன்பகம்" சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா
உதவி பெறுவோர்.. தட்சாயினி கபிசா ( பி.தி 01.09.2012)


9- செல்வன் பிரணவன் யோகராசா - Düsseldorf - 240-00 யூரோ
இந்து "அன்பகம்" சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா
உதவி பெறுவோர்.. சிவராசா பவிதா ( பி.தி 05.09.2011 )

---

- பொறுப்பெடுத்தவர்கள் 9 பேர்.. (ஜேர்மனி, லண்டன்)

- உதவி பெறுவோர் 13 பிள்ளைகள் (தாயகம் - சிறீலங்கா)

---


Parentless Children Pity rescue, Protect them
HINDU ANPAGAM
Veppankulam, Vavuniya - Sri Lanka
Regd. Numbers : NP/30/23/04/02, NP/DS/V/SS/111, HA/04/V/24
T.P : 024-2223683
திகதி
திரு/திருமதி/செல்வி
விபரம்
நடைபெறும் திகதி :
பணம் ரூபா :
நன்றியுடன் பெற்றுக்கொண்டோம்.
இங்ஙனம்
ரூபா: 496,250/=
4609
பொருளாளர்

# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு..

ஆரம்ப இருப்பு 01-03-2023 ( மேலதிகச்செலவு ) - 135-59
அன்பளிப்புகள்:-
01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Viersen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
02. செல்வி. அனித்தா ரஞ்சன் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
03. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)
04.திருமதி அஜந்தி பத்மநாதன் - London + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)
05. திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Weeze + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
06. திரு. Johannas Gruendler - Köln + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
07. திருமதி பிங்கலை செந்திலன் - Kitzingen + 100-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு) + 580-00
......................
அன்பளிப்புகள்... + 444-41
09- திருமதி ஜெயா நடேசன் - Bonn + 20-00
10- செல்வி காத்மி வரதராசன் - Düsseldorf + 100-00
11- திரு. ப.சொந்தரராசா - Duisburg + 100-00
(பேரப்பிள்ளைகள்பிறந்தநாள்அன்பளிப்பு(11.01.2023)
12- திருமதி இந்திரா மகாலிங்கம் - Viersen + 120-00
(தந்தையார் நினைவுநாள் அன்பளிப்பு(02.02.2023)
12- திரு.இ சிறீஸ்கந்தராசா - Duisburg + 150-00
(ஜெனரேற்றருக்கானஅன்பளிப்புஒளிரும்இல்லம்20.2.23)
13- ஸ்ரெவ்வானி மகாலிங்கம் - Oberhausen + 207-50
(பிறந்தநாள்அன்பளிப்பு (22.03.2023)
14- திரு வைரமுத்து சிவராசா - Duisburg + 100-00
(தாயார் நினைவுநாள் அன்பளிப்பு (17.03.2023)
15- திருமதி சிவதர்சினி பிராங்ளின்- Viersen + 100-00
(மகளின்முதல்நன்மைதினஅன்பளிப்பு (13.04.2023)
16- திருமதி கலைவாணி ஏகானந்தராசா-Weeze + 100-00
(பிறந்தநாள்அன்பளிப்பு 22.03.2023)
17- திருமதி இராஜேஸ்வரி சிவராசா - Duisburg + 100-00 + 1097-50
(தாயார் நினைவுநாள் அன்பளிப்பு 03.05.2023 --------------- -----------------
1097-50 + 1541-91

முற்பக்கப்படி + 1.541-91

அனுப்பியது...

(1) ”ஒளிரும் வாழ்வகம்” - துணுக்காய்
02.02.2023 - 44.449-88 ரூபா - 120-00
17.03.2023 - 33.025-14 - 100-00
03.05.2023 - 32.270-48 - 100-00

(2) ”நல்லாயன் சிறுவர் இல்லம்” - மாங்குளம்
11.01.2023 - 35.978-80 ரூபா - 100-00
22.03.2023 - 68.005-36 - 207-50
13.04.2023 - 31.911-58 - 100-00

(3) ”செபமாலை இரக்கத்தின் இல்லம்”-தலைமன்னார்
(13.04.2023 - 31.911-58 ரூபா) - 100-00

(4) திருஞானசம்பந்தர் குருகுலம் - 480-00
களுதாவளை - மட்டக்களப்பு
-------------------
- 1307-50

மண் சஞ்சிகை வக்கிக்கணக்கு வங்கிவரி
01.03.2023 - 31.03.2023 - 19-96
01.04.2023 - 30.04.2023 - 15-59
...........
35-55 - 35-55
---------------------
- 1343-05 - 1.343-05
--------------------

மீதி கையிருப்பு 30.04.2023 **+** 198-86

# SEBAMALAI MARIYANNAI HOUSE OF COMPASSION
# செபமாலை மரியன்னை இரக்கத்தின் இல்லம்

டொமினிக்கன் கன்னியர் மடம்,
துள்ளுக்குடியிருப்பு,
பேசாலை,
இலங்கை.
023-2050095

Dominican Covent,
Thallukudiruppu,
Pesalai,
Sri Lanka.
023-2050095

Date: 25 / 04 / 2023

மண் கல்வி கலை இலக்கிய சமூக சஞ்சிகை

[illegible]

கடந்த 14.04.2023 அன்று திருதிருமதி பிராங்கிலின் [illegible] குடும்பத்தினரின் பிள்ளைகளான செல்வி அனா அமயா அவர்களின் 5வது பிறந்தநாளையொட்டியும் செல்வி லேயா அமலா அவர்களின் முதல்நன்மை கொண்டாட்டத்தையொட்டியும் கடந்த 23.04.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று எமது இல்லப்பிள்ளைகளுக்கு மதியபுணவு மற்றும் சிற்றுண்டிகளை வழங்கி எமது சிறார்களை மகிழ்வித்த உங்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள். தனிச்செலவுப்பணமாக 31,911 இலங்கைப் பெற்றுக் கொண்டோம்.

(முகாமையாளர்)

Rev. Sr. Mary Magdalene Joseph O.P.
Dominican Convent
Sebamalai Mariyannai House of Compassion
Thallukudiruppu, Pesalai,
Sri Lanka.

ஒளிரும்வாழ்வு அமைப்பு - துணுக்காய்
ඔළිරුම්වාල්වු සංවිධානය - තුණුක්කායි
Olirumvaalvu Organization - Thunukkai

Re.No:- MU/DS/TNK/RVSS/22/2015 T.P:- 0212060620 Fax:-0774868085 Farm No:-0213204790 Viber:-0774868085 Mobile:-0774868085 திகதி: [illegible]/2023

வைரமுத்து சிவராஜா

பிரதம ஆசிரியர்

மண் கலை இலக்கிய சமூக சஞ்சிகை

ஜேர்மனி

நன்றி நவில்கிறோம்

எமது ஒளிரும்வாழ்வு அமைப்பு மாற்றுத்திறனாளிகள், பெற்றோரை இழந்த பிள்ளைகள், ஆதரவற்ற முதியோர், பெண்தலைமைத்துவ குடும்பங்கள், நலிவுற்ற குடும்பங்கள் ஆகிய இலக்கு குழுவினர் மத்தியில் பணியாற்றி வருகிறது. தங்கள் தாயாரின் 25வது ஆண்டு நினைவு நாளினை நினைவுகூரும் வகையில் தாங்கள் வழங்கிய 33025.14 ரூபா நிதியினை பயன்படுத்தி ஆதரவற்ற முதியோர், மகிழ்வு இல்லம் பிள்ளைகளிற்கு சிறப்பான மதிய உணவு வழங்கியதுடன் முதியோர்களிற்கு உலர் உணவு பொதியும் (5கிலோ அரிசி) வழங்கினோம் என்பதை தங்களிற்கு மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்வதோடு இதயபூர்வமான நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறோம். அத்துடன் தங்களது தாயாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

நன்றி

செயலாளர்
ஒளிரும் வாழ்வு அமைப்பு
துணுக்காய்

www.olirumvaalvu.com olirumvaalvuthunukkai2012@gmail.com olirumvaalvu thunukkai

ஒளிரும்வாழ்வு அமைப்பு - துணுக்காய்
ඔළිරුම්වාළ්වු සංවිධානය - තුණුක්කායි
Olirumvaalvu Organization - Thunukkai

T.P:- 0212060620 Fax:-0774868085 Farm No:-0213204790 Viber:-0774868085 Mobile:-0774868085

Re.No:- MU/DS/TNK/RVSS/22/2015

திகதி 21/03/2023

வை.சிவராஜா,

பிரதம ஆசிரியர்,

மண் கலை இலக்கிய சமூக சஞ்சிகை,

ஜேர்மனி.

நன்றி நவில்கிறோம்

எமது ஒளிரும்வாழ்வு அமைப்பு மாற்றுத்திறனாளிகள், பெற்றோரை இழந்த பிள்ளைகள், ஆதரவற்ற முதியோர், பெண்தலைமைத்துவ குடும்பங்கள், நலிவுற்ற குடும்பங்கள் ஆகிய இலக்கு குழுவினர் மத்தியில் பணியாற்றி வருகிறது. தங்கள் மண் சஞ்சிகை குழுமத்தினருக்கு ஊடாக ஏற்பாடு செய்து வழங்கிய (திருமதி பிங்கலை செந்திலன் அவர்களின் நிதி அனுசரணையுடன்) 600 யூரோ (193285.99) நிதியினை பயன்படுத்தி எமது துணுக்காய் பிரதேசத்தில் கல்வி கற்கும் மிகவும் வறிய குடும்பங்களைச் சார்ந்த மாணவிகள் ஐவரின் கற்றலுக்காக மாதாந்தம் பயன்படுத்தி வருகிறோம் என்பதை தங்களிற்கு தெரிவித்துக்கொள்வதோடு இச்செயற்திட்டத்தை செயற்படுத்த நிதி அனுசரணை நல்குவதற்கு ஏற்பாடு செய்து வழங்கிய தங்களிற்கும் தங்கள் குழுமத்தினருக்கும் எமது ஒளிரும்வாழ்வு அமைப்பு சார்பாக இதயபூர்வமான நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம். தங்களது சேவை எம்மவர் மத்தியில் மேலும் கிடைத்தவண்ணமுள்ளமையினையிட்டு மிக்க மகிழ்வடைவதோடு பாராட்டி வாழ்த்தி நிற்கிறது ஒளிரும்வாழ்வு குடும்பம்.

நன்றி

ஒளிரும் வாழ்வு அமைப்பு
துணுக்காய்

www.olirumvaalvu.com olirumvaalvuthunukkai2012@gmail.com olirumvaalvu thunukkai

# இந்து அன்பகம் சிறுவர் அபிவிருத்தி நிலையம்
# Hindu Anpakam Children Development Center
# හින්දු අන්පකම් ළමා සංවර්ධන මධ්‍යස්ථානය

இறந்தவர்களது குழந்தைகளை இருப்பவர்கள் காப்போம்
[illegible]
**Parentless Children Pity Rescue, Protect Them**

பதிவு.இல: NP/30/23/04/02
NEP/05/V/55/111
Reg.No: HA/04/V/24

E-mail:
hinduanupakam@gmail.com

2ம் கட்டை, மன்னார் வீதி, வேப்பங்குளம், வவுனியா.
2nd Mile post, Mannar Rd, Veppankulam, Vavuniya.

தொ.இல: +94 024-2223683
T.P : +94 024-2223683

**President**
K.Jeyarany

**Vice President**
K.Uthayakumar

**Secretary**
S.Niranjana

**Treasurer**
S.Basugy

**Asst. Secretary**
N.Dilshanth

**Asst. Treasurer**
K.Sasikaran

**Board of Members**
G.Sriskantharajah
K.Kanesarajiah
S.Raveendran
S.Rathimalar
V.Rajalaxmi
K.Niththiyananthan
S.Jayaruban
S.Vasanthan
T.Lankathevi

**uditor**
Amalan

**nk/Ac/details**
020254291
ton National Bank
uniya.

**act:**
22 3683
43628

:
npakam@gmail.com

2023.03.22

திரு. வைரமுத்து சிவராஜா,

பிரதம ஆசிரியர்,

மண் கல்வி கலை இலக்கிய சமூக சஞ்சிகை,

யேர்மனி

நன்றி கூறுதல்

மேற்படி எமது இல்லத்தில் பராமரிக்கப்பட்டு வருகின்ற சிறுமிகளான செல்வி சுனில்சாந்த தஸ்வினி, சிவராஜா பவிதா ஆகியோரின் வருடாந்த பராமரிப்புச் செலவிற்காக 720 யூரோவினை தங்களது மண் கலைஇலக்கிய சமூக சஞ்சிகை வாசகர்கள் மூலமாக உதவிகளைப் பெற்று எமது சிறுவர் அபிவிருத்தி நிலைய வங்கி கணக்கிற்கு அனுப்பி வைத்தமைக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன் தங்களது சமூகப்பணி மென்மேலும் சிறக்க வேண்டுமென எல்லாம் வல்ல ஸ்ரீபத்திரகாளி அம்பாளை வேண்டுகின்றோம்.

"காலத்தினால் செய்த நன்றி சிறிது எனினும்

ஞாலத்தின் மாணப்பெரிது"

S. Niranjana

## 1.100 வருடங்கள் பழமைவாய்ந்த நூல்...

## சாதனைத் தாடிக்காரன் (5அடி 9அங்குலம்)...

மாறிவரும் இன்றைய அவசர உலகில் ஒவ்வொருநாளும் ஒவ்வொரு செக்கனும் ஏதோ மாற்றங்கள், அதிசயங்கள் நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றன. அதுவும் இன்றைய கணனி உலகில் மிக வேகமாக அதிசயங்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. சாதனகள், கண்டுபிடிப்புக்கள் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. ஆக்கங்களும் அழிவுகளும் பெருகிக்கொண்டிருக்கின்றன. இதோ தேடலில் கிடைத்த சில தகவல்கள்...

1- 1.100 வருடங்களுக்கு முன்பு பயன்படுத்தப்பட்ட பைபிள் எனக் கருதப்பட்டது. தற்போது விற்பனைக்கு வந்துள்ளது. அதாவது இஸ்ரேல் நாட்டில் பயன்படுத்தப்பட்ட இந்தப் பைபிள் அமெரிக்காவில் ஏலவிற்பனைக்கு வந்துள்ளதாம். 30 தொடக்கம் 50 மில்லியன் டொலருக்கு விற்பனையாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அப்படி விற்கப்பட்டால் இதுவே முதலாவது வரலாற்றுச் சாதனையாகப் பதிவாகும்.

2- சுவீடன் நாட்டில் வாழ்ந்துவரும் இந்திய பூர்வீகமாக் கொண்டவர். இவர் தனது தாடியை 5அடி 9 அங்குலம் வரை வளர்த்து உலக சாதனையை நிலைநாட்டியுள்ளார். தனது 17வது வயதில் தாடியை வளர்க்க ஆரம்பித்தவர். வயதான காலம்வரை அதை ஒருமுறைகூட வெட்டவில்லையாம்.












ஜேர்மனியில் வாழும் சிவதர்சினி - பிராங்ளின் தம்பதிகளின் செல்லமகள் செல்வி லேயா அமாலா அவர்கள் 23.04.2023 அன்று (Communion) முதல் நற்கருணை பெற்றார். இக்குடும்பத்தவரின் நிதிப்பங்களிப்பில் மன்னாரிலுள்ள ”செபமாலை இரக்கத்தின் இல்லப் ” பிள்ளைகளுக்கு 23.4.2023 அன்று உணவு, சிற்றுண்டி வழங்கப்பட்டது. அனுசரணை மண் சஞ்சிகை.

Wissen, Kultur & Literatur • கல்வி, கலை, இலக்கிய சமூக இருமாத இதழ்

# ERDE

**MANN**
**Germany / Ausgabe 219**




## 137 ஆவது சர்வதேச தொழிலாளர் தினம்



| | | |
|---|---|---|
| வருட சந்தா | ஜேர்மனி | 20€ |
| | ஏனைய நாடுகள் | 25€ |